தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

CORNELL ... LIBRARY
18 SEP 1965

தமிழா, ஒன்றுசெய் !

ஆரியர்க்குப் பாய்விரித்தாய் ! ஆங்கிலர்க்குக் கற்பிழந்தாய் !
பூரியர்செய் இந்திக்குப் பொற்பிழந்தாய் !—யார்யார்க்குத்
தாள்பிடிக்கக் காத்திருக்கின் றுயோ தமிழ்மகனே !
வாள்பிடிக்குங் கையால் வணங்கியே !—கேளினிமேல்
மீசை மழித்துவிடு ; முன்குடுமி வைத்துக்கொள் !
காசைப் பெரிதாய்க் கருத்தில்வை !—கூசுகிலா
மானம் அறக்கழற்று ! மாண்பை உதறியெறி !
ஏனோ உனக்கு மனைவிமக்கள் ?—ஊனுடலை
நன்றாய் வளர்ப்பதுவே நல்வாழ்க்கை !—நாள்முழுதும்
தின்று கொழுத்துத் திரி !

கன்னி (புரட்டாசி) தி. பி. ௧௯௯௬.

ரூ 0 50 காசு

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 3 | புரட்டாசி தி. பி. 1996 (1965 செப்டம்பர்) | ஓலை 8

'சாதி'க் கிறுக்கர்கள்!

நம் நாட்டில் உள்ள தீராத கொடிய தொற்று நோய்கள் சிலவற்றுள் இந்தச் 'சாதி' எந்த மருத்துவத்தாலும் போக்க முடியாத மிகவும் கடுமையான கொடுமையான, ஆனல் தீர்க்கப் படவேண்டிய தொற்று நோயாம். நாம் பொதுவாகத் தொற்று நோய்கள் என்று குறிப்பிடும் நோய்கள் ஏதோ ஆயிரத்தில் ஐந்து பெயர்களுக்குத்தான் பிடித்துக்கொண்டு சீரழிக்கும். ஆனல் இந்தச் சாதியெனும் தொற்று நோயோ இந்தியாவில் உள்ள ஐம்பத்திரண்டு கோடி மக்களையும் பிடித்துக்கொண்டு அவர்களைப் படாதபாடு படுத்திக்கொண்டு வருகின்றது. நாட்டை யாண்ட வெள்ளையர்களாலும், பிரஞ்சுக் காரர்களாலும், போர்த்துக் கீசியர்களாலும் அவர்கள் கண்டு பிடித்த மருந்துகளாலும் போக்க முடியாத இந்தத் தொழு நோய் இருக்க இருக்க உள்ளுக்குள்ளேயே புரையோடி அழுகிச் சீழ் பிடித்து நாடெங்கும் நாறத் தொடங்கிவிட்டது. இனி, இந்த நோயை அகற்ற முயல்வது பெரிய மலக்குவியலை மணக்கச் செய்வதுபோல நகைப்பும் வீண் முயற்சியும் வாய்ந்த செயலாகவே முடியும்! எந்த ஒரு காலத்திலாவது இந்திய

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர் : தங்கப்பா, மு, சாத்தையா.
உரிமை, வெளியீடு . தாமரை, உலகமுதல்வி.
அச்சகம் : மித்திரா, கடலூர்-1.

மண்ணில் இந்தச் சாதி நாற்றம் அறவே நீங்கிவிடும் என்று சொல்வதற்கில்லை! உருசியா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகள் தம் தம் கையிருப்பில் வைத்துள்ள அத்தனை அணுக் குண்டுகளையும் ஒரேடியாக இந்திய மண்ணில் போட்டாலும், அவற்றின் மருந்து நெடிக்கு மேல் நம் நாட்டுச் சாதிச் சரக்கின் மூக்கைத் தொளைக்கும் நெடி கலந்த தீநாற்றம் குடலைப் புரட்டிக் கொண்டு தானிருக்கும். அவ்வளவு ஆழமாக, அகலமாக, பனிமலையின் உச்சிக்கும் கன்னிமுனையின் அடிக்கும் தலை கால் வைத்துப் படுத்துக் கொண்டு, காலத்தையும் கருத்தையும் வென்று, நாளும் நலம்பல பல்கிப் புதுப் புதுத் தோற்றங் களுடனும் மாற்றங்களுடனும் கதிரவனைப் போல் சுடர்விட்டு ஒளிவீசுகின்ற இந்தப் பொல்லாத சாதியெனும் பெரும்பூதம் என்று இந்திய மண்ணைவிட்டுப் புரண்டு அரபிக் கடலிலோ வங்காளக் கடலிலோ இந்தியப் பெருங்கடலிலோ உருண்டு மாண்டொழிந்து போகுமோ, அன்றே இந்திய நாட்டின் விடுதலைநாள்! இவ்வளவு திட்ட வட்டமாக இந்தக் கொடுஞ் சாதியின் பெருமைகளை அறிந்திருந்தும், புத்தர் முதல் இன்று பிறந்துள்ள குழந்தைவரை எல்லாரும் சாதியை ஒழித்துக் கட்டவே (!) முனைந்து வருகின்றோம் இருந்தாலும் அதன் சல்லி வேரின் நுனியைக் கூடக் கிள்ள முடியவில்லை. அந்தத் துணிவில்தான் நாமும் ஏதாவது (எதுவும் நடைபெறாது என்று தெரியும்) சொல்லி வைப்போம் என்று சில கூற முன் வந்தோம்.

சாதியைச் சாகவிடாது காக்கும் பணியில் அவ்வப்பொழுது அரசர்களும், சமய வெறியர் சிலரும், சாதி வெறியர் பலரும் மருந்து அடிக்க அடிக்கப் படை படையாய்ப் பல்கிப் பெருகும் கொசுக்கூட்டம்போல் தோன்றிக் கொண்டே இருக்கின்றனர். இவர்கள் எல்லாரும் ஒரே இனத்தில் தோன்றாமல் எத்தனை எத்தனைச் சாதிகள் உள்ளனவோ அத்தனைச் சாதிகளிலும் வேற்றுமை பாராது அவ்வப்பொழுது தோன்றி, அவரவர் சாதி யாரைத் தேற்றியும் தம் தம் சாதிப் பழக்க வழக்கங்களை மறந்து போகாமல் அறிவுறுத்தியும் அத்தகைய செயல்களுக் காகப் பலவகையான செல்வங்களைத் திரட்டியும் காத்தும் வந்திருக்கின்றனர்: வருகின்றனர். ஆனால் காலத்திற்குத் தகுந்தாற்போல் அச் சாதிக் குரவர்கள் மாறுபாடான தோற்றங் களுடன் பிறந்து தம் தம் திருப்பணிகளைப் புரிந்து வருகின்ற னரேயன்றி, அவர்தம் உள்ளம், அறிவு, உணர்வு எல்லாம் அன்றிருந்த போலவே இன்றும் உள்ளன. அக்காலத்திய சாதிக் குரவர் குடுமி வைத்துக் கொண்டிருக்கலாம்; கையில் ஓலைச் சுவடியும் எழுத்தாணியும் பிடித்துக் கொண்டிருக்கலாம். அவரே இக்காலத்தில் ஒழுகை (கிராப்) வைத்துக்கொண்டும், தாளும் தூவலும் பிடித்துக் கொண்டுமிருக்கலாம். ஆனால்

இருவர் உள்ளங்களும் ஒரே வகையான மலக்குழிகள் தாம். இத்தகைய சாதிக் கிறுக்கர்கள் இக்கால் ஊர்கள்தொறும் தெருக்கள் தொறும் தோன்றித் தம் பிறவித் தொண்டைப் புரிந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் தம் பெருக்கத்தையும் நம் புனித(!) சாதி சமய வேறுபாடற்ற 'பாரத' அரசினர் தம்முடைய ஆட்சி நாடகத்தில் நடிக்கவேண்டிய ஒரு காட்சிக்காக அணியப்படுத்திக் கெண்டுதான் வருகின்றனர்; இவை ஒருபுறம் கிடக்க.

சாதியென்னும், இவ்விந்திய மக்கள் கூட்டத்தை விடாமல் அழுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் தீராத தொழு நோய் தொடக்கத்தில் யாரால் எவ்விடத்தில் இறக்குமதி செய்யப் பெற்றது அல்லது தோற்றுவிக்கப் பெற்றது என்று ஆயும் ஒருக்க முனைப்பு நமக்கு இப்பொழுது வேண்டா. ஆனால் ஒன்றை மட்டும் எண்ணியே ஆகல் வேண்டும். தந்நலமும், சோம்பேறிதனமும், மக்களை அடக்கி அடிமைபடுத்தும் கொடிய எண்ணமும் வாய்ந்த சமய வெறியர்கள் ஒருசிலரால் தான் இது வித்திடப்பெற்றிருக்கும். அவர் யாவராயினும் ஆகுக. ஆனால் அக்குமுகாய அரிப்புப் புழுக்களால் தோற்றுவிக்கப் பெற்ற இச்சாதியெனும் வேண்டா அமைப்பு, அறிவியலும் மனவியலும் குமுகாய நலவியலும் தோன்றி வளர்ந்து கொண்டிருக்கும் இக் காலத்திலும் நமக்கு வேண்டுவது தானா என்பதையும். அது வேண்டாக்கால் அதனைக் குழ்தோண்டிப் புதைக்கும் வழிகள் எவை என்பதைப்பற்றியும் மட்டுமே நாம் இங்குச் சிறிது கூறுவோம்.

சாதி அமைப்பு ஒரு சில இயற்கை அமைப்புகளாலும், சில செயற்கைப் பாதுகாவலினாலும் மக்களோடு பின்னிப் பிணைந்து அவரைவிட்டு எவராலும் எக்காலத்தும் எம் முயற்சி கொண்டும் பிரிக்க முடியாததாகக் கட்டுண்டு கிடக்கின்றது அவை ஏற்படக் காரணமாயிருந்த இயற்கை அமைப்புகள் இவை.

1. வழி வழியாக வந்த தொழில் முறைகள்.

2. அச்சமும்,குருட்டுத்தனமும்,புரட்டுகளும் வாய்ந்த சமய நம்பிக்கைகளும், அவற்றால் கிடைத்த போலிப் பெருமைகளும், தலைமை நிலைகளும்.

3. நிறவேறுபாடுகளும், பழக்க வழக்கங்களும், பொருளியல் ஏற்றத் தாழ்வுகளும்.

இவையன்றிக் கீழே காட்டப்பட்ட செயற்கைக் காரணங் களாலும் அச்சாதி நிலைப்புகள் வலிவுட்டப்பெற்றன.

1. சாதிப் பற்றில்லாதவரோ அதுசார்ந்த சமயப்பற்றில் லாதவரோ குமுகாயத்திலும், அரசியலிலும் தலைமையும்

அதிகாரமும் வாய்ந்த பதவிகளைப் பெறுதற்குத் துளியும் வாய்ப்பில்லாமை.

2. ஏழைகளைவிடச் செல்வமும், நன்மதிப்பும் அரசியல் அதிகாரமும் படைத்தவர்களிடமே உள்ளூரச் சாதி வெறி உள்ளமை.

3. ஒவ்வோர் அரசும் பிரித்தாளுகின்ற அரசியல் சூழ்ச்சிக்கு இலக்காகச் சாதிப் பூசல்களையும் அதனடிப்படையில் அமைந்த சமயப் பூசல்களையும் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ பயன்படுத்திக் கொண்டமை.

4. அவ்வப்பொழுது தோன்றிக் குமுகாயச் சீர்திருத்தக் காரர்களாகவும் முன்னேற்றப் போக்குடையவர்களாகவும் பகுத்தறிவாளர்களாகவும் தம்மை மக்கள் முன் அறிமுகப்படுத்திக் கொண்ட பலர், தம்மளவிலாவது சாதி அமைப்புகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளாமையால், அவர் தம் கொள்கைகளின்மேல் மக்களுக்கு ஏற்பட்டுள்ள மாறுத நம்பிக்கையின்மை.

5. தீண்டாமை யொழிப்பையே ‘ சாதி ’ யொழிப்பு என்று தவறுகக்கருதியதுடன், கடுமையான தீண்டாமையால் வரும் கேடுகளை விட, பொதுவான, எளிய சாதி ஏற்றத்தாழ்வுகளாலேயே சாதி நிலைத்திருக்கின்றது என்ற உண்மையை உணர்ந்து கொள்ளாமை!

6. அரசினர் பதிவுகளிலும், ஆவணங்களிலும், வழக்கு மன்றங்களிலும் சாதிப்பாகுபாடுகள் வற்புறுத்தப் பெறுகின்றமை.

7. பண்டையில் ஆரியப்பார்ப்பன சமயகுரவர்களும் சாதி வெறியர்களும் அரசியலில் தலைமையிடம் பெற்று, அறநெறி என்ற பெயராலும், விரகாலும் சாதிப்பாகுபாடுகளையும் பழக்க வழக்கங்களையும் வற்புறுத்திக் கெடாது காத்தமையும்; இக்காலத்தும் சாதி சமய வேறுபாடற்ற அரசு என்று தவறுகக் கூறிக் கொண்டு எல்லாச் சாதி சமய அமைப்புகளுக்கும் சட்டத்திலும் நடை முறைகளிலும் பாதுகாப்பளிக்கப் பட்டமையும்.

8. பொருள்நலமும் உறவுநலமும் கருதி ஒவ்வோர் இனத்தாரும் தம் தம் இனத்துக்குள்ளேயே மண நிகழ்வுகளையும், பிண நேர்ச்சிகளையும் முன்னிட்டுப் புழங்கிக் கொண்டமை.

9. ஒரு சாதியாரால் பிறசாதியார்க்கு ஏற்பட்ட கொடுமைகள் ஒருவாறு தணிந்தவுடன், கொடுமைதரா நிலையில் சாதி அமைப்பு மென்மையான வினைமுறைகளால் மக்களை ஆட்சிகொண்டு, ஒரு தீமையில்லாத நோயாக அவர்களைப் பற்றி நின்றமை.

10. ஒவ்வோர் இனத்தாரும் தம் தம் சாதி அமைப்பால் ஒருவகைப் போலிப் பெருமையையும், தம்மினும் தாழ்ந்தாரை விடத் தாம் உயர்ந்தவர் என்ற பொந்திகையையும் கொண்டுள்ளமை.

மேலே கூறப்பெற்ற தலையாய காரணங்களாலும் பிறவற்றாலும் சாதியென்னும் கொடிய நஞ்சு எல்லாருடைய நெஞ்சுகளிலும் குருதி நாளங்களிலும் ஏற்றப் பெற்று வலிவு பெற்று வருகின்றது. அறியாத கல்லா மாந்தரிடம் தோன்றி முள் காடாகப் படர்ந்த இத் தீய அமைப்புகள் இக்கால் கற்றவர் பாலும் வலிந்து புடை திரண்டு வருவது எல்லா நல்ல உள்ளங் களிலும் பெரியதொரு கவலையை உண்டாக்கியிருக்கின்றன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சாதி அமைப்புகள் தோன்றி மாணவர் தம் நெஞ்சுகளில் தம் தூண் போன்ற கால்களை ஊன்றிக் கொண்டுள்ளன. இவை தமக்கு ஆங்காங்குள்ள சாதிக் கிறுக்கர்களும் வெறியர்களும் பலவகையான காரணங் களைக் காட்டிப் பொருளாலும் வினையாலும் வலிவூட்டிக் கொண்டு வருகின்றனர். தம்மை எல்லாரினும் உயர்ந்தவராகக் கருதிக் கொள்ளும் பார்ப்பன முதலைகள் சில தத்தமக் கென்று அரசியல் துறைகள் சிலவற்றில் பட்டயங் கட்டிக் கொண்டு ஆங்காங்குச் சாதி மூட்டம் போட்டு வருகின்றனர். அவர்களுக்கு மடத் தலைவர்கள் சிலர் தோன்றாத் துணையாகி அவர்களை வேண்டாத இடத்திற் கெல்லாம் இட்டுக் கொண்டு போகின் றனர். தொடக்க நிலைப் பள்ளி முதல் பாராளு மன்றத்தின் படிக்கட்டுவரை சாதிக் கொடுமைகள் மக்களைப் பேயாய் ஆட்டி வைக்கின்றன. நாட்டை யாள்கின்ற பெருந் தலைவர்களும் தம் தம் சாதிப் பட்டங்களைப் பறை சாற்றிக் கொள்ள விரும்புவது மன்றி, அச்சாதி வெறியர்களுக்கு மறைமுகத்துணை வர்களாகவும் இருந்து வருகின்றனர். அவ்வச் சாதியினர் அவரவர் மக்களையே முன்னேற்றிவிட அல்லும் பகலும் அரும்பாடு படுகின்றனர். இன்னவாறு சாதியென்னும் பெருவிலங்கு தன் கட்டைவிரல்களையும் சுட்டு விரல்களையும் அங்கிங் கெனாதபடி எங்கும் படிய வைத்துக்கொண்டு மக்களைச் சீரழித்துக் கொண்டு வருகின்றது. இவற்றிற் கெல்லாம் ஒரு முடிவு வேண்டாவா? அவற்றை ஒழிப்பதுதான் எப்படி என்று இவ்விந்திய நிலத்தில் ஊருக் கொருவராகிலும் கவலை கொள்பவர் இருப்பர். சாதி யொழிப்புக்கு எவ்வளவோ வழிகள் எக்காலத்தும் எல்லாராலும் அவ்வப் பொழுது சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் எந்த வழியாக விருப்பினும் அதை அந்தச் சாதி வெறியர் களிடமே ஒப்படைக்க வேண்டியுள்ளது. இதுவரை இவ் வகையில் ஈடுபட்டுழைத்த நல்லவர்கள் சிலரால் ஒருசில கொடுமைகளே தடுக்கப் பெற்றிருக்கின்றன என்றாலும், சாதி அமைப்புகளை இவர்களின் முயற்சிகள் ஒருசிறிதாவது தகர்த் துள்ளன என்று கூற முடியாது. இவற்றிற் கெல்லாம் காரணம் அவர் செய்த முயற்சிகளெல்லாம் என்றும் அரசினர் சார்புள்ள வையாக இல்லாமலிருந்தமையே! எவரேனும் துணிந்து எதிர் பாரா வகையில் இந்நாட்டின் வல்லதிகாரம் படைத்த தலைவராக வருவாரானால் அவருக்குப் பயன்படும் வகையில் கீழ்க்கண்ட

வழிமுறைகளை அவர் தம் செவிகளில் போட்டு வைக்கின்றோம் அப்படி அவர்கள் அந்நிலைக்கு வருவார்களானால் கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டு துணிந்து இவ்வழிகளை மேற்கொள்ளலாம். மற்றப்படி இவற்றை அரசினர் மேற்கொள்ளப் போவதில்லை. அவை இவை:

1. சாதிப் பெயர்களை எக்காரணங் கொண்டும் அரசினர் ஆவணங்களிலும் பதிவுகளிலும் பதிந்து கொள்ளாதிருத்தல்.

2. சாதிகளின் பெயர்களால் உள்ள தெருக்கள் (சின்னப்ப முதலித் தெரு, இருசப்பச் செட்டித்தெரு முதலியன), ஊர்கள் (இரெட்டியார் பாளையம், வண்ணாரப் பேட்டை முதலியன), மன்றங்கள் (சைவ வேளாள மகா சன சங்கம், வன்னிய குல சத்திரிய சேவா சங்கம் முதலியன), வாணிக நிலையங்கள் ('பிராமணாள் கபே', நாட்டுக் கோட்டைச் செட்டியார் நகைக் கடை முதலியன), செய்தித்தாள்கள் (செங்குந்த மித்திரன், சலவை-மணி முதலியன), கல்விக் கூடங்கள் (நாடார் உயர் நிலைப்பள்ளி, செங்குந்தர் உயர் நிலைப் பள்ளி முதலியன), கட்சிகள் (வன்னியர் முன்னேற்றக் கட்சி, தாழ்த்தப்பட்டோர் லீக் முதலியன), திருமணக் கூடங்கள் (ஆரிய வைசிய கல்யாண மண்டபம், தியாகு முதலி கல்யாணச் சத்திரம் முதலியன), சுடுகாடு இடுகாடுகள் (சக்கிலியன் சுடுகாடு முதலியன), கோயில்கள் (சாணார் கோயில் முதலியன) ஆகியவற்றிற்கு உடனடியாகப் பொதுப் பெயர் சூட்டச் செய்வதுடன், அதை மீறிச் செய்வாரைக் கடுமையான தண்டங்களிட்டுத் தடுத்தல்.

3. எவர் பெயருக்குப் பின்னும் சாதிப் பட்டங்களை (காமராச நாடார் இலக்குமணசாமி முதலியார், சிதம்பரநாதச் செட்டியார் என்றபடி) குறித்தல் கூடாதென்று சட்டத்தாலும், தண்டத்தாலும் தடுத்தல்.

4. கலப்பு மணங்களை வற்புறுத்தல் : 1. ஒருகுறிப்பிட்ட காலம் வரை தம் தம் சாதிக்குள்ளேயே திருமணம் செய்து கொள்பவர்களிடம் திருமண வரியாகப் பத்தாயிரம் அல்லது ஐயாயிரம் உருபா தண்டுதல் 2. இதற்கு வரி வருமானத்தைக் கொண்டு, கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கும் வேலைச் சலுகை. கல்விச் சலுகை, குடியிருப்புச் சலுகை முதலியன தந்து ஊக்குவித்தல்)

5. ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஓரினத்தைச் சேர்ந்தவரைப் பிறிதோர் இன மக்கள் வாழும் சூழலிலும், ஒரு வட்டத்

தைச் சேர்ந்தவர்களைப் பிறதொரு வட்டத்திலும் சட்ட மன்ற, பாராளுமன்றங்களுக்கான வேட்பாளர்களாக நிறுத்தல்.

6. சாதி சமயக் குறியீடுகளை அறவே எவரும் அணியவோ தீட்டிக் கொள்வதோ கூடாவென்று தடுத்தல்.

7. தாழ்ந்த சாதி மக்களே செய்து வருகின்ற இழி தொழில்கள் சிலவற்றை அவர்கள் செய்யாமல் தடுத்து அத் தொழில்களைப் புதிய அறிவியல் முறைகளைக் கொண்டு நடத்துவிக்கச் செய்தல்.

8. சாதிகளைத் தவிர்க்கும் நோக்கத்தில் எழுதப் பெறும் சீர்திருத்த நூற்களன்றிப் பிறவகையில் சாதிப் பாகுபாடுகளை வற்புறுத்தும் அற நூற்கள் ('மனு' முதலியன), இன நூற்கள் முதலியவற்றிற்குத் தடைபோடுதல்.

9. சாதி அடிப்படையில் தனிப்பட்ட சலுகைகளை எவர்க்கும் வழங்காது மக்கள் ஏழ்மை யடிப்படையில் எல்லார்க்கும் பொதுவான கல்வி, தொழில் முதலியவற்றை அமைத்துத் தருதல்

10. சாதி வெறியர்களைத் தோன்ற விடாது பல்வகையாலும் தடுத்து நிறுத்தல்.

ஆனால் இவற்றை யெல்லாம் நடை முறைக்குக்கொண்டு வரும் துணிவும் அறிவும் உணர்வும் எந்தவொரு கட்சிக்கோ, தலைவர்க்கோ, அவரால் அமைக்கப் பெறும் குடியரசு ஆட்சி அமைப்பிற்கோ இருக்கப் போவதில்லை என்று உறுதியாகக் கூறலாம். பட்டாள ஆட்சியோ, வல்லதிகார ஆட்சியோதாம் இவற்றைச் செய்ய முடியும். அதுவரையில் எத்தகைய கல்வியாலுமோ, ஆட்சியாலுமோ சாதியென்னும் பரந்து வளர்ந்த கள்ளிக் காட்டில் ஒரு சுள்ளியைக் கூட அகற்றிவிட முடியாது. வேண்டுமானால் அவர்களின் அரசியல் பித்தலாட்டங்களுக்குச் சாதியொழிப்பு என்ற சடங்கு முறையையும், அவர்தாம் நடிக்கும் அரசியல் சீர்திருத்த நாடகங்களில் சாதியொழிப்பு என்ற ஒரு நகைச் சுவைக் காட்சியையும் காட்டிக் கொண்டிருக்கலாம். மற்றப்படி அவற்றால் ஒரு சிறு மாறுதலையும் கட்டாயம் விளைவித்து விட முடியாது. வெட்ட வெட்டத் துளிர்க்கும் மரம் போல் நம் நாட்டை அடைத்துக் கொண்டுள்ள சாதிக் காடுகளை அழிக்கும் முயற்சியில் நாம் அனைவரும் ஈடுபடுவோமாக. ஆங்காங்குக் குமுகாயக் காளான்களாக முளைத்துக் கொண்டிருக்கும் 'சாதிக்' கிறுக்கர்களின் வெறிக் கூட்டங்களில் நம்மையும் ஓர் உறுப்பினராக்கிக் கொள்ளாமலிருப்போமாக.

—பெருஞ்சித்திரன்

பாட்டு கக: செந்தமிழ்ச் சீர்மை! **துரை மாணிக்கம் பாடியது**

பாடுக புலவீர் பீடுடைப் பாவே!
ஏவா அரைசின் எண்ணியது துணியும்
காவலர் போறிர் நீவிர் இற்புகுந்து
யாவர் தேடினிர் என்னலும்; அம்மையீர்!
மேவுறு சின்மொழி கடிந்து தலைக்கூடி
மூவறு நாளா ஆவணந் துமிய
சூர்படு ஓதையும் எழுச்சியுஞ் சூடுமா
ஊர்கொள் அமலை அறிந்திலிர் போலும்!
கலைபுகு கழகத்துப் புலைபுக,
சுவடிச் சிறாஅர் கவடியி னுட்ட
ஊணு முறுக்கமுந் துறந்து பகலிரவாக்
காவற் படுப்பதுங் காண்கிலிர் போலும்
இவ்வே மறுகின் எழுந்த கூட்டத்து
எம்மோன் ஒருவன் முன்பல் தெறித்துக்
குருதி பிதிரக் கூர்ங்கல் எற்றிக்
கடிதின் நுழைந்தோர் செங்கண் விடலை, நும்
இற்புறத்துக் கரந்தா னுகை அவனைக்
கைப்படத் தொடர்ந்தேம் காட்டுதிர் என்ன; அம்
முதியோள் நடுக்குற எழுந்து
முன்றிலும் அகத்தும் மடையினுங் காட்டி
ஒன்று மறிகிலே மென்று ளாக;
வந்தோர் மனம்பெறக் கழிய, உட்புகுந்து
நென்னிறை குரம்பை ஒளியவுள் ளிழுக்கிய
புன்றலைச் சிறுவனை அகவிப் புறந்தூக்கி
அன்னைத் தமிழ்க்கே அவலங் கடிந்தோய்
நின்னை மகனுப் பெற்றிலேன் பதடியென
இளந்தலை முகர்ந்து குருந்துதோள் நீவி
வெல்க தமிழென விறல்பெற முழக்கி

மல்கு நீர்விழி மறைப்பச்
செல்கென விடுத்த சீர்மை நினைந்தே!

(இந்திப் போராட்டத்துக் காவலர் தொடர இற்புறத்துக் கரந்தானை முதியோள் ஒருத்தி ஒளித்த சீர்மையைப் பாராட்டியது)

பாட்டு ௧௨: **கனலாடியது!** **துரை மாணிக்கம் பாடியது**

மலைமென் னெஞ்சே! மருட்கை யதுவே!
குலையுங் குடரும் விதுப்புற் றனவே!
தமிழ்தோய் உளத்துத் துணிவீ தென்கோ
வேந்துமுன் ஒச்சிய விறலீ தென்கோ
வளமான் தோன்றல் இளமை என்கோ
அலைபுலை கொற்றத்து விளைவீ தென்கோ
உலைவூங் குயிரின் உவகை என்கோ
ஆடுநெய் யொழுக முச்சியி னப்பிப்
பாடுவெள் ளருவி பாய்தல் போலும்
கன்னெய் முழுகிக் கனல்புகுந் தாடிய
செஞ்சிக் கோட்டத்துத் தேவனூர்ச் செம்மல்
கோடம் பாக்கத்துக் கூட்டல் மறுகில்
பொய்யுடல் கருகிப் புறமாறி
மெய்யுடற் கொண்டு மிளிர்ந்த செயலே !

(செஞ்சிக் கோட்டத்துத் தேவனூர்ச் செம்மல் சிவலிங்கம் என்னும் இளையோன் வடவராட்சியின் இந்தித் திணிப்பைக் கடிந்து, கோடம்பாக்கத்துக் கூடல் மறுகில், கன்னெய் யூட்டி எரிபுகுந்து துஞ்சிய செயலை மருட்கையுறப் பாடியது.)

பாட்டு கங: இருந்து போகிய இடம்! துரை மாணிக்கம் பாடியது

புனையினும் பூட்டு கழலறப் போகும்
மிசையினும் மேனி திரங்கலும் ஆகும்
ஓம்பினும் வண்மை காலத்து ஒழியும்
சாம்பினும் அழலுணச் சாம்பர் கழியும்
ஒக்கல் புறத்தழ விக்கல் மேலுற்று
முக்கலும் முனகலும் அடர்ந்துநா புலர்ந்து
திக்கலுந் திணறலும் ஆகி உரைதப்பிக்
கக்கலுங் கழச்சலும் ஆலக் கண்ணவிந்து
நன்னடை நெற்றி நகர்ந்தும் கிடந்தும்
திண்மமும் மாறி நீர்மமும் கொள்ளாப்
புறங்கடை வாயிற் புகட்டிய தொழுக
வெள்விழி யேறி அறிவு வெளிறி
மெலமெல ஆவி கழிவுறு மேனுள்
இருந்து போகிய இடம்பார்த் தழூஉம்
பெருந்திரள் மாக்கள் பெறுவது மிலையெனும்
இழிதகைக் கஞ்சியோ மகனே
தழல்குளித் திருந்தனை தமிழொடு சிறந்தே !

(தீக்குளியல் செய்த தேவனூர்ச் செம்மல் சிவலிங்கத்தை உடல் நிலையாமை முன்னிருத்திப் பாடியது).

பாட்டு கச: கொள்கைக்குரிசில்! துரை மாணிக்கம் பாடியது

இவளே,
பாறிய கூந்தன் புழுதி துவையத்,
தலைதரை கிடத்தியும் எழுந்துமார் பெற்றியும்
செவ்விழி உகுநீர் நனைவாய் அரற்றியும்
எரியுண் மூங்கில் இணைகொடி யாகி
இனித்துணை யறியா இவனிள மனையே!
இவரே,
தந்தை கொள்கை தாமறி கல்லாது
அன்னை அழுங்கல் ஆற்றுதல் அறியாது
எதிர்ந்த சூழற் கதிர்ந்த நெஞ்சொடு
விசித்தழா நின்ற இவண்மூ மகாரே!

இவனே,
வடவர் திணித்த வளரா மடமொழி
கடியத் துணிந்து காட்சியின் காட்ட
உடலந் தீக்கொள உயிர்தீந் தமிழ்க்கெனக்
கொள்கை முழக்கிய குரிசில்
விருகாம் பாக்கத்து அரங்க நாதனே!

('உடலைத் தீயினுக்கும் உயிரைத் தமிழ்க்கும் தந்தேன்' என வரைந்து எரியுட் பட்ட, விருகாம்பாக்கத்து அரங்கநாதனைச் சுற்றியிருந்தார் கேட்கப் பாடியது)

பாட்டு கரு: ஈகங்கவினிய புகழ்! ம. இலெ. தங்கப்பா பாடியது

நுந்தையும் தாயும் நுவன்றனை அல்லை;
நிற்புறந் தந்த ஊரும் தெரித்திலை;
யாதுநின் பெயர்கொல்? அதுவும் ஒளித்தனை!
மா வுய்த் தன்ன கடுமொழி முனிந்து
தேன் மூரன் றன்ன செழுந்தமிழ் பழிச்சிப்
பிதிர் வெண் சுண்ணத்து எழுதிய கையொடும்
ஏதிலி போல வியன்தெரு மருங்கில்
சாதல் நோற்றுச் சாய்ந்தனை மன்னே!
இந்நாள்,பெற்றோர் பெயர் பெரிதார்த்துச்
சிற்றூர்ப் பெயர் முன் நிறீஇச்
சிறு வெறு வினைக்கும் வலிந்து பெயர் முழக்கி
நூல், தாள். கடை, முனை, மன்றுதொறுந் தூக்குநர்
தமிழக வரைப்பிற் பலரே யாயினர்!
அறைபறை வாழ்க்கைஅப் பயனிலர் மின்புகழ்
சுவடறு நாளும் தொலைவிலை மன்ற!
ஆயினும்,
உமிழ் சுடர்த் தமிழ்க்கே உயிர்கழல் மெய்ம்மைத்
தமிழ்மகன் ஆகிய தகவினை, பெரும!
இமிழ் கடல் உலகின் எல்லையுங்

கமழுநின் ஈகம் கவினிய புகழே!

(இந்தி ஒழிக, தமிழ் வாழ்'கென, தெரு மருங்கில் எழுதி அஞ்ஞான்றே உயிர்துறந்த ஊர் பெயர் தெரியாச்செம்மலைப் பாடியது)

பாட்டு ௧௯: காவா மாக்கள்! துரை மாணிக்கம் பாடியது

எம்மையுங் காவார் ; தம்மையுங் காவார் ;
கொம்மைப் பருவத்துச் சின்னாட் கூடலில்
நினக்கியான் பயந்தநின் மகாரையுங் காவார் ;
முகில்படு முன்றில் முக்கொடி நிறுத்தி
அகல்நெடுங் கொற்றத்து அரசாண் டிருந்த
ஒருமா முதுமொழித் திருவையுங் காவார் ;
வடவர் ஊன்றிய தமிழ்மா நன்னிலங்
கெடாஅது நிறுத்துஞ் சிறாரையுங் காவார்;
செற்றலர் எதிரின் கிளையொடு பொருதும்
அற்றைநாள் தமிழரைப் போலா திழிந்த
இற்றைநாள் மாக்களை அறிந்தும் எமைவிடுத்து
யாவர் காக்குமென் றெண்ணித்
தீப்புகுந் தாவி துறந்தனை நீயே!

(தீப்புகுந் தாவி துறந்த விருகாம்பாக்கத்து அரங்கநாதனைத் தம் மக்களொடும் அவன் மனைவி கண்டு அரற்றியது)

தென்மொழி அச்சக அமைப்பு மூவாண்டுக் கடன் திட்டம்!

நந்தமிழ் பேணும் செந்தமிழன்பீர்!

ஏறத்தாழக் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக மூவா முதுமொழியாம் நம் செந்தமிழன்னைக்கும், நாட்டிற்கும், மக்களுக்கும் தென்மொழி ஆற்றிவரும் இடையறுத் தொண்டைத் தமிழுலகும் புறவுலகும் நன்கு அறியும். தமிழ் மக்கள் எல்லா நெறி முறைகளானும் உய்தல் வேண்டிப் பகலிரவு பாராது, தனித் தமிழ் பேணி, மெய்த் தொண்டாற்றி வரும் தென்மொழி, நடுநிலை பிறழாத் தன் நேரிய உழைப்பாலும், ஊதியங்கருதாத வீறு நடையாலும், இற்றை நாட் போற்றப் பெறும் புல்லியர் தம் கரவு சான்ற உள்ளங்களையும் வினைப்பாடுகளையும் இகழ்ந்து அவை போல் திரிபு நடை போடாத செம்மாந்த போக்காலும், அகப்புறச் சூழ்நிலைகளாலும், தனக்கென்று ஓர் அச்சகத்தை அமைத்துக் கொள்ளக் காலமும் சூழலும் பொருளும் வாய்க்காது துவண்ட நடை போடவேண்டுவதாயிற்று. இதன் பால் பரிவும் இதன் வளர்ச்சியில் கருத்தும் கொண்டவர்போல் மயக்குற நடித்த போலியர் சிலரும் புல்லியர் சிலரும் நாளடைவில் தென்மொழிக்கே கேடு பயக்கவும் தொடங்கினர். எந்நிலை வாய்ப்பினும் தென்மொழி தான் கொண்ட கொள்கையில் நெகிழ்ச்சியும் தளர்ச்சியுமின்றி மகிழ்ச்சியொடு இது நாள் வரை மொழித் தொண்டாற்றி வருவதை, இதன் பால் மெய்யன்பு கொண்டார் பலரும் நன்கறிவார். அரசினராலும் பிறராலும் தென்மொழி அடையும் தொல்லைகட்கு அளவில்லை. அவைபற்றி விரைவில் விரிவாக வெளியிடப் பெறும்.

இனியும் தென்மொழி தான் கொண்ட தனிக் கொள்கை போலவே தனக்கென்று ஒரு தனியமைப்பையும் ஏற்படுத்திக் கொள்ளாது காலந் தாழ்த்துமானால், விரைவில் அது தன்னையே இழந்து கொள்ள நேரினும் நேரும்.

எனவே தென்மொழி தனக்கென்று ஒரு மூவாண்டுத் திட்டத்தை வகுக்க வேண்டியதாயிற்று. அடுத்த மூவாண்டிற்குள் அது தன்னை நிலைப்படுத்திக் கொள்ள அமைத்துக் கொண்ட ஆக்க முறைகள் இவை :

1. தென்மொழி தனக்கென்று ஓர் அச்சகத்தை அமைத்துக் கொள்வது.
2. தமிழ் வளர்ச்சிக்கும் தமிழக வீடுதலைக்கும் பாடுபடுமாறு சிறந்த செயற் குழு ஒன்றை அமைத்து ஒல்லும் வகையெல்லாம் ஓவாப் பணி செய்வது.
3. மகளிர்க் கென்றும் சிறுவர்க்கென்றும் தனித் தனி இதழ்களைத் தொடங்குவதுடன் நாளிதழ் ஒன்றையும் நடத்து மளவிற்குப் பொருள், துணை, வினை இவற்றைப் பெருக்கிக் கொள்வது.

பொருள் கருவி காலம் வினை இடனோடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல் — என்னும் பொய்யா

மொழிக்கேற்ப, இம் மூன்று திட்டங்களையும் நிறைவேற்று தற்கு அடிப்படையான பொருளைப் பொது மக்களிடம் நன்கொடையாகப் பெறுவதென்பது விரும்பத் தகாததும், இயலாததுமாகும். எனவே வேறொரு புதுமுறைத் திட்டம் அமைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அதுவே இக் கடன் திட்டம் கடன் கொண்டும் நல்லன செய்வதே வேண்டப்படுவது ஆகையால்,

தென்மொழியின் வளர்ச்சியில் நம்பிக்கையும் நாட்டமும் கொண்ட தமிழன்பர் பலரிடமும் தென்மொழி மூவாண்டுக் காலக் கடன் பெறத் திட்டமிட்டுள்ளது. மூவாண்டுக கால முடிவில் அக் கடன் நன்றியுடன் திருப்பித் தரப் பெறும். அதற்கு வட்டியில்லை. கடன் பெற்றதற்குச் சான்றிதழ்கள் வழங்கப் பெறும். அச் சான்றிதழ்களைக் கடன் கொடுத்த அன்பர்கள் மூவாண்டுக் கால முடிவில் 1969 - சனவரி முதல் நாளுக்குப் பின் தென்மொழி அலுவலகத்திற்கு அனுப்பிப் பணத்தை முழுமையாகப் பெற்றுக் கொள்ளல்வேண்டும். அதன் விளக்கங்கள் பின்வருமாறு:

1. இத்திட்டத்திற்குத் 'தென்மொழி அச்சக அமைப்பு மூவாண்டுக் கடன் திட்டம்' என்றுபெயர்.

2. கடன் பெறும் தொகைகளுக்கான சான்றிதழ்கள் உருபா 10, 100, 500, என்ற மூன்று தொகை வரிசையில் வழங்கப் பெறும்.

3. சான்றிதழ்களில் கடன் தந்தார் பெயரும் முகவரியும் குறிக்கப்பெற்றுப் பொறுப்பாசிரியர் கையெழுத்தும், கடன் பெற்ற நாளும் குறிக்கப் பெற்றிருக்கும்.

4. கடன் சான்றிதழ்கள் 1969—சனவரி முதல் நாளிலும் அதற்குப் பின்னும் மாற்றத் தக்கனவாகும்.

5. கடனுக்கு வட்டியில்லை.

6. பணவிடைகள் வாயிலாகவும் ஆங்காங்குள்ள தென்மொழிப் பொறுப்பாளர்கள் வாயிலாகவும் கடன் பணத்தைக் கொடுத்து அதற்குரிய சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

7. ஒவ்வொரு சான்றிதழ்க்கும் போலிகைப் படியொன்று அலுவலகப் பொறுப்பில் இருக்கும்.

8. அலுவலகப் பொறுப்பில் இருக்கும் போலிகைச் சான்றிதழுடன், கடன் கொடுத்தவரின் போலிக் கையொப்பமும் கோப்பில் (File) இருக்கும். கடன் திருப்பித் தரப் பெறுங்கால் இக் கையொப்பங்கள் ஒப்பிட்டுச் சரி பார்க்கப் பெறும்.

9. குறிப்பிட்ட கால முடிவில் சான்றிதழ்களின் பின்புறம் கையெழுத்திட்டு அஞ்சலக வழியிலோ, தென்மொழிப் பொறுப்பாளர் வழியிலோ, சான்றிதழ்களைத் திருப்பித் தந்து கடன் தொகையை முழுமையாகப் பெற்றுக் கொள்ளலாம்.

10. சான்றிதழ்கள் வாங்கியவர்கள் எதிர்பாராதநேர்ச்சியால் இறந்துபோக நேரின், அவரின் பிறங்கடையார்(வாரிசு)களுக்கு, அச்சான்றிதழ்களின் மேற் பணம் திருப்பித் தரப்படும்.

11. கால எல்லைக்குள் சான்றிதழ்கள் தொலைந்து போக நேரிட்டால், சான்றிதழ்களுக்கு உரியோர் முன் கூட்டியே அலுவலகத்திற்குச் சான்றிதழ்களின் எண்களையும் பிற விளக்கங்களையும் அறிவித்தால், கடன் தொகை பிறர் கைகளுக்குப் போகா வண்ணம் தக்க ஏற்பாடு செய்யப் பெறும்.

12. சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளாத எந்த வகைத் தொகைக்கும் அலுவலகம் பொறுப்பாகாது.

13. கடன் தொகைகள் யாவும் 1965 திசம்பர் மாதம் 31-ஆம் பக்கலுக்குள் செலுத்தப்பெறல் வேண்டும்.

மேற் கண்ட வகு முறைகளுக்கேற்ப, கடன் தந்தார் தம் முழு முகவரிகளும் அவர்கள் தந்த தொகைகளும் அவ்வப் பொழுது தென்மொழியில் வெளியிடப் பெறும். நூறு உருபாவும் அதற்கு மேலும் கடன் கொடுப்பார்க்குத் தொகை திருப்பித் தரப் பெறும் காலத்தில், தென்மொழி அதுவரை வெளியிட்ட நூல்களில் ஒவ்வொரு படி அன்பளிப்பாகத் தரப் பெறும்.

இப் பெரிய அமைப்புத் திட்டத்திற்கு ஆங்காங்குள்ள செல்வர்களும், தமிழன்பர்களும், ஆசிரியர்களும், மாண வர்களும் உதவி, நந்தமிழ் மொழியும் நாடும் மக்களும் மேன் மேலும் சிறப்புற்றிலங்கப் பல்லாற்றானும் துணை நிற்க, வாய்மையும் தூய்மையும் கொண்ட தமிழ்நெஞ்சுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இன்றே உங்கள் பணியினைத் தொடங்குக. பொருள்வளம் கொண்டவர்களும் அருளுளம் கொண் டவர்களும் ஒருங்கிணைந்து உதவ வேண்டுகின்றோம்.

அன்பன்

பெருஞ்சித்திரன்.

தென்மொழி, கடலூர்—1.

தி. பி. ௧௯௯௬ மடங்கல், ௧.

[17—8—65]

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு. தொடர்-9.

மெய்மைப்பித்தன். மெய்யறிவுக் கட்டுரை.

1. அறிவு: சொல் விளக்கம் (தொடர்ச்சி)

அறியாமை நிலை பலபடித்தா உணர்த்தப் பெறினும், அது கடந்தவழி அறிவு வாய்க்கப் பெறுவதும், அதனால் உயிர்கள் இன்பம் நுகரப் பெறுவதும் நிகழுமாகையால், எல்லாவகை உயிர்களும் அறியாமையினின்று அறிவு பெறவே துடித்து நிற்கின்றன. அறிவை அறியத்தான் உளங்கொண்டு நிற்கின்றனவே யன்றி, அறியாமையை விழைந்து உயிர்கள் முனைந்து போதல் இல்லை. அறிவுதான் இன்பம் பயக்கும் ஒன்றே அன்றி, அறியாமை இன்பம் பயப்பதில்லை; இனி, இன்பம் பயவாதிருப்பதன்றியும் துன்பமும் பயப்பதாகும். என்னை? அறிவு இன்பமும் அறியாமை துன்பமும் பயக்குநிலை உண்மையெனின் உயிர்கள் யாவற்றிற்கும் அவ்விரு நிலைகளையும் கட்டாயம் கடந்து செல்லும் உறுதிப்பாடு வாய்த்தமை எற்றுக்கோ? எனின், அறியாமை கண்டாலன்றி அறிவு காண்டலருமையாவது பற்றி. என்னை? துன்பமுறுதலின் தன்மையைப் பொறுத்தன்றோ இன்பத்தின் எடைமிகுதலும் குறைதலுமாக நிற்பது. மிகுதுன்பம் பெற்றானுக்குச் சிறு இன்பமே பேரின்பமாகவும், சிறு துன்பமும் பெறானுக்குப் பேரின்பங்கூட வெற்றுநிலையாகவும் போய்விடுதல் போலவே, அறியாமையை மிகவும் உணர்ந்து இடர்ப்படுவான் அத்தன்மையினின்று கழன்று அறிவு நிலை சிறிதே வாய்க்கப்பெறினும் அதுவே அவனுக்குப் பேரின்பம் தரவல்லதாகும். சிறிதளவையே பேரின்பமாகக் கருதுதல் மயக்கமல்லவோ எனின்; அற்றன்று. அச்சிறிதளவே அவ்வளவிற்குப் பேரின்பந் தர வல்லதாயின், அறிவின் பேரளவு இன்னும் எவ்வளவிற்குப் பேரின்பந்தர வல்லதாகும். என்று கருதும் எண்ண முனைப்பை அவன்பால் அது தோற்றுவித்து, அவனை அறியாமையினின்று விரைந்து அறிவு நிலைக்கு அழைத்துச் செல்லும் தன்மையுடையதாகும் என்று கண்டு கொள்க. அவன் பெறும் பயன், அவன் பெற்ற துயரினும் பெரிதாகப் படும் அந்நிலையிலேயே, ஒருவன் மேலும் மேலும் பயன் நாடிப் போவானே அன்றிப் பெருந்துயர்க்குச் சிறுபயன் எய்துதல் மேலும் மேலும் அவனுக்குச் சோர்வையே தருவதாகும். என்னை? பெரும்பசிக்குச் சிறிய உணவாகிலும் பயன் தராதோ எனின், திண்மங்களாலான உடற்பசி வேறு, நுண்மங்களால் ஆன அறிவுப்பசி வேறு. திண்ம நிலையில், இரண்டு கைகளும் அற்ற நிலைக்கு, ஒருகை அற்றநிலை ஒருவாறு சிறப்புடைத்ததாகும். ஆனால் நுண்ம நிலையில் அறியா நிலைக்குக் குறையறிவு மேலும் துன்பந் தருவதாகும். என்னை? அது அலிபாபாவின் தமையன் காசிமின் குறைமதி போன்றதாகும் என்க.

இனி, பேரிடர் தரும் அறியாமையைக் கடந்த வழி, அதையடுத்த அறிவின் சிறு பகுதியே விளங்குமென்றற்கு. இப்பிக் குவியலை வாரிவருவான் ஓரிரு நன்முத்துகளையே பெறுவதாகும் நிலையே ஒப்புடைத்தென்க. இப்பிக் குவியல் அத்துணையிலும் முத்துகள் கிடைப்பதாயின், அவை உயர்மதிப்புப் பெறாதனவாகிப் பொதுநிலையே பெறும். இனி, உயர்மதிப்புப் பெறுவழி அதனை அடைவோரும் இலரேயாவர். என்னை? வெட்டிய இடத்திலெல்லாம் பொன் கிடைப்பதாயின் பொன்னுக்கு அலைவாரிலராகலின் பொன்னும் மதிப்பிற் பன்மடங்த குறையுமன்றோ? ஆகலின் அறியாமை இடர்மிகுந்த வழியாகிற்று! அறிவின்பம் அளவிற் சிறிதெனினும் பயனிற் பெரிதாகிப் பேரின்பம் விளைக்க வல்லதாகும். எனவேதான் அறியாமைநிலை பருப்பொருளால் நாம் காணும் இருளினும் இருண்டதாகவும், அதனையடுத்த சிறு அறிவு நிலைகூட ஒளியினும் ஒளிர்வதாகவும் இருக்கின்றது. இனி, அறியாமை எத்துணைப் பேரிடர் வாய்ந்ததாக இருப்பினும், உயிர்கள் அந்நிலையைக் கடக்கும் முயற்சியில் வீடாமல் ஈடுபட்டு வருகின்றன. என்னை? பருப்பொருள் உண்மையான், இருளில் கிடக்கும் உயிர்கள் ஒளியை நாடிப் போதலேல, நுண்பொருள் உண்மையான் அறியாமையுள் நுழைந்த உயிர்கள் அறிவை நாடிப் போதற்தக் கரியாகும்.

இனிப், புறவிருள் போலவே அகவிருள் பெருந்துன்பந் தரவல்லதாகலின், உயிர்கள் புறவிருள் கடந்து புறவொளியிற் பாவிய பின்றான், அகவிருளைக் கருதி விலக்கும் ஆற்றலைப் பெறுகின்றன. நிலத்துவிட்ட விதை, நிலத்தின் வெப்பத்தால் உணர்வூட்டப் பெற்று, உட்கிளர்ந்து தன் அக மலர்த்தி முளையாக வெளிப்படல் போலவே, ஒளியிலிட்ட உடலொடு பொருந்திய உயிர் புறவொளியால் அணுக்கள் கிளர்ந்து உடல் இயக்கம் பெற்று, அகவிருள் நோக்கி அதனையும் கடந்து அகவொளியாகிய அறிவுங் கிளர்வுறத் தன்னை மலர்த்திக்கொள்ளும் தன்மை வாய்ந்தது. இருளில் கிடத்தப்பட்ட உயிர்கள் யாவும் ஒளிநோக்கித் தம்மை ஊக்கிக்கொண்டு முன்னேறல் போல, அறியாமையுள் கிடத்தப்பட்ட உயிர்கள் யாவும் அறிவு நோக்கித் தம்மை ஊக்கிக்கொண்டு முன்னேறுகின்றன. தம் கட்டு நிலைகளினின்று உயிர்கள் அறுபட்டு, விடுபட்டு, முன்னேறுதல், ஆகிய நிலையே அறிவு நிலை எனப்படும். 'அறி' (அறு + இ), என்ற பெயர்ப்பகுதி அறியாமைக் கட்டை அறுத்த நிலையினையும் 'உ' என்ற பெயர் வீகுதி உயிரின் பரிதல் (முன்னேறுதல், உயர்தல், தாவுதல், விரைந்து பரத்தல்) ஆகிய தன்மையையும் உணர்த்தல் ஆயிற்று. என்னை; இவ்வுண்மை மொழியிலும், மொழியுறுப்பாகிய சொல்லிலும் சொல்லுறுப்பாகிய எழுத்திலுங்கூட அமைந்து கிடக்கின்றதோ எனின், விதை முற்றக் கருவும், கருமுற்ற முளையும், முளை

முற்றச் செடியும், செடி முற்ற மரமும் தோன்றுதல் போலவே, அகம் முற்ற உணர்வும், உணர்வு முற்றக் கருத்தும், கருத்து முற்றச் சொற்களும், சொற்கள் முற்ற மொழியும் தோன்றிற் றென்க. மொழி இயற்கைத் தோற்றமன்று; மாந்தன் தோற்றிச் யதே என்னும் கருத்து, நெல்லினின்று அரிசி தோன்றலை செயற்கை என்பார் கருத்துப்போலப் பிழைபடுவதாகும்; அஃது உணர்வியலுக்குப் பொருந்தாததுமாகும். மாந்தன் வழி மொழி பிறந்த உண்மையால், மொழி மாந்தனால் தோற்றுவிக்கப்பெற்ற தாகாது. மொழி பிறக்கக் காரணமாய மாந்தன், தானே மொழியைத் தோற்றுவித்தான் என்பது, குஞ்சு பிறக்கக் காரண மாகிய முட்டையும், அம்முட்டை தோன்றக் காரணமாகிய கோழியும் தாம்தாமே குஞ்சையும், முட்டையையும் தோற்று வித்தன என்பதுபோல் பொருள் பொருந்தாப் புன்கூற்றாகும். அகக் காரணங்களால் தோன்றி உருவாகி வெளி வந்தாலன்றி அவ்வகச் செயலின் உருவெளிப்பாடு அவ்வகம் உள்ளடக்கிய உயிர்கட்குப் புலனாகாமையை உணர்தல் வேண்டும். கோழிக்குத் தன் முட்டையைத் தானே தோற்றுவித்தல் ஒல்லு மெனின், அதன் வெண்மை மாறிக் கருமையையும், சிறுமை மாறிப் பருமையையும் அதுதானே அமைத்துக் கொள்ளுதல் இயல்வதாகுமன்றோ? அஃதின்றித் தான்தோற்றுவிக்கும் அப் பொருள்களின் தன்மை நுண்மைகளைத் தானே அறியா அது, எங்ஙன் ஒரு பொருளைத் தோற்றுவிக்கும்? இனிப் பரும நிலைப் பொருள்களாகிய முட்டையையும், குஞ்சையுமே அப் பரும நிலைப் பொருள்களாகிய கோழி தோற்றுவித்தல் ஏலாதெனின், ஒலி, ஒளி முதலிய நுண்பொருள்களைத் தோற்றுவித்தல் எங்ஙன் ஏலுவதாகும். காற்றில் சலசலக்கும் வற்றிய ஓலை, அச் சலசலப்பைத் தானே தோற்றுவித்ததாகுமோ? இனி, மொழிகளை மாந்தன் தானே தோற்றுவித்தான் என்பது பொருந் தாதெனின், இக்கால் மொழிகளின் கூறுபாடுகளாகிய சொல், எழுத்து, ஒலி முதலிய நுண்ணுறுப்புகளை நன்கு ஆய்ந்து அறிந்து அவற்றினின்று புதுப்புது ஒலிகளையும், எழுத்துகளையும் சொற்களையும் அவற்றால் மொழிகளையும் படைத்துக் கொள்ளு தல் அவனுக்கு இயல்வதொன்றாயிருக்கின்றதே எனின், அது பிள்ளை பிறந்தபின், அப்பிள்ளைக்குப் பாலூட்டிச் சோறூட்டி வளர்ப்பதும், பொட்டிட்டுப் பூவிட்டுப் புனைவதும், மருந்தும் நோன்பும் கூட்டி உறுப்புகளைப் பேணுவதும் போன்றனவா கும். பிள்ளை பெரிய அளவில் வளர்ந்த நிலையில் தான்றான் அவனைப்புரந்து ஆளாக்கினவன் என்பதேோடமையாது, தானே அவனைத் தோற்றுவித்தோன் என்பது பொருள் திறம் அறியார் தம் இருள்நிறை கூற்றாகும். இது பற்றிய அறியாமை நிலைகளை உணர்வின் தோன்றலாகிய உயிரொலிபாடுகளின் சிறப்புத் தோற்ற மாற்றங்களைப் பற்றிப் பேசுமிடத்து விரிப்போம். இக் கால் வேண்டுவது அறிவென் சொல்லின் தோற்றப் பொருளே.

உயிர்கள் தம் அறியாமைக் கட்டை அறுத்துக் கொண்டு முன்னேறிப் படர்தலே அறிவு என்ற சொல்லின் உட்கோளாக இருத்தலை உணர்த்தினோம். இந்நிலைக்கு 'அறி' என்ற வினையே முந்து நிலையாக உள்ளது பற்றி மேலும் சிறிது பேசுவோம். அறியாமை அறுபடு நிலையே அறி (அறு + இ) நிலையும், அறி நிலை வாய்த்த பின் நிலையே அறிவு நிலையுமாகும். என்னை? அறிந்த பின்னன்றோ அறிவென் சொல்லுக்கு முழுப்பொருளும் வந்து பொருந்துகின்றது. அறிதல் அறியாமை அறிதலும், அறிவறிதலும் ஆகும் என்று முன்னமே உணர்த்தப்பெற்றது. அறியாமை அறிதலாகிய நிலையும் அறிவு நிலையே. என்னை? இருளை அறிகின்ற நிலையும் ஒளிநிலையே! இருளில் நிற்பான் ஒருவன் புறவிருளையும் ஓரளவு அகவொளிகொண்டே அறிகின்றானாதலின் புறவிருள் நீக்கமும் அகவொளிவாய்ந்த பின்றான் தோன்றுகின்றதென அறிக. என்னை? இருளில்பிறப்பிக்கப்பெற்ற ஒரு புழு ஓரளவில் அகத்தொளி வாய்ந்த பின்றான் அதனினும் மாறுபட்ட ஓர் ஒளி நிலை உளதாக உணர்ந்து, அவ்வொளிப் படலத்திற்குத் தன்னை ஊக்கிக்கொண்டு செல்லுகின்றது. அஃது அவ்வளவிலாகினும் அகவொளி பெறாற் போயின், புறவிருள் நீங்கிய நிலையொன்றுண்டு என்பதனையும் அறியாமல் அவ்விருளிலேயே கட்டுண்டு கிடத்தல் வேண்டுமன்றோ? அஃதவ்வாறின்றித் தன்னைச் சூழ்ந்த இருள் எங்கேனும் ஒரு நிலையில் நீங்கிப் போதல் வேண்டுமென்பதனையும், ஒளி பரவும் ஒரு நிலை எங்கேனும் ஒரு நிலையில் வாய்த்தல் வேண்டுமென்பதனையும் அறிந்து அதனை நாடி நகர்கின்றதன்றோ? இதனையே இயல்பூக்கம் என்று அறிவியலார் மொழிவர். இயல்பூக்கம் எனின் என்ன? அஃதே உயிர்கட்கு உள்ளதாகிய ஓர் உள்ளுணர்வாம், இவ்வுள்ளுணர்வு உயிர்ப்பொருள்கள் அத்தனைக்கும் உளதாகி உயிர்களை இருளினின்று ஒளிக்கு உந்தித்தள்ளுகின்றது. ஓரளவினவாகிய செடிகொடி மரங்களும்கூட இவ்வுணர்வைப் பெற்றுள. இருள்வாழ் இத்தன்மைத்தாய உயிர்கள் ஒளியை நாடிப் பரத்தலை யாவரும் அறிவர். எனவே இருளினின்று நீங்கி ஒளி நிலையடைவதாம் தன்மை உயிர்களுக்கு இயல்பாகவே உள்ளதோர் ஊக்கம் என்றறிக. புறவிருள் கடிந்து அறிவொளி நாடும் தன்மையும் இயல்பூக்கத்தின்பாற் பட்டதாகும். எனவே அறியாமையினின்று நீங்கி அறிவு நிலை பெறுதலே உயிர்கட்கு இயல்பாக உள்ள ஓர் ஊக்க நிகழ்ச்சி ஆகும். இவ்வூக்க நிகழ்ச்சி ஓரறிவுயிர் முதல் உலகத்து விளங்கும் பல்லாயிரங் கோடி உயிர்களுக்கும் உள்ள இயற்கைப் பொதுவாகும். இவ்வூக்க நிகழ்வின்றி, இருளிலேயே தோய்ந்து தம் வாழ்க்கை நடத்தும் உயிர்களும் உளவே எனின், அவ்வுயிர்கட்கு அவ்வாழ்க்கை கால வரம்புட்பட்டதாகும். எவ்வாறேனும் எல்லா உயிர்களும் புறவொளியும் அகவொளியும் பெற்றேயாகல் வேண்டும். இந்நிலையே உலக இயக்கம்.

இனி, இவ்வியக்கத்துக்கு, ஒப்பவே, உயிர்களும் அவை வாழும் நில உலகமும் இயங்கி வருகின்றன. உலகம் ஒளியிலும் இருளிலும் மாறி மாறித் தோயவில்லையெனின் உயிர்களின் எழுப்பு, இருப்பு, இறப்பு நிலைகளும் தோன்றா. அவை ஈண்டுத் தோன்றல் போல் பிற உலகங்களிலும் தோன்றுதலும் தோன்றாமையும் உளவோ எனின் ஆம் என்க. இது பற்றிய விளக்கம் உயிர்த்தோற்ற நிலையும் அது தொடர்ந்த பிறவும் பேசவருங்கால் விளங்கக் கூறுவோம். இனி, உலகம் ஒளியும் இருளும் படர்ந்த தன்மையில் தன்னை மூழ்குவித்துக் கொள்ளுமெனினும், தானே ஒளிராதது என்னை யெனின், ஒளியிலும் இருளிலும் தம்மை மூழ்குவித்துக் கொண்டுழலும் உயிர்ப் பொருளும் உயிரல் பொருளும் தாமே ஒளிர்தலும் இருள்தலும் நிகழா நிகழாவாயினும் இவையொருகால் தாமே ஒளிர்ந்திருந்ததும், ஒருகால் தாமே இருண்டிருத்தலும் நிகழ்ந்ததும் நிகழக் கூடுவதும் ஆகும். எனவே உலகங்கள் உள்ளடக்கிய உயிர்களும் தாமே ஒருகால் ஒளிர்ந்திருத்தலும், தாமே ஒருகால் அவிந்திருத்தலும் ஆகிய உண்மை பெறப் படுகின்றதன்றோ? படவே, நாமாகிய மாந்தச் சிற்றுயிர்களும் பிறவாகிய குற்றுயிர்களும் ஒருகால் ஒளியே வடிவாகித் திகழ்ந்தன வென்றும். இக்கால் இருளில் முங்கிற்றென்றும், பிற்கால் இருள் நீங்கி மீண்டும் ஒளி வடிவாத் துலங்கும் நிலையும் வருமென்றும் உய்த்தறிந்து கொள்க. எனவே எந்நிலையிலும் எல்லாவற்றிற்கும் ஒளியிருட் சுழற்சி உண்டென்னும் தன்மையை உற்றுணர்ந்து கொள்க. இவ்விரண்டாந் தன்மைகளே உறக்கமும் விழிப்பும், பிறப்பும் இறப்பும். இறக்கமும் துறக்கமும் ஆகிய தன்மைகள் என்றும் உணர்ந்து கொள்க. இவ்விரு நிலைகளும் இல்லாமற் போமாயின் உயிரியக்கமும், உயிருள்ளடங்கிய உலக இயக்கமும், உலகு உள்ளடக்கிய மண்டில இயக்கமும், மண்டில முள்ளடக்கிய புடவியியக்கமும் இல்லாமற் போம் என்று தெளிக. தெளியவே புடவியடங்கிய பேரண்டத்தின் ஒளியிருட் சுழற்சி பேரெல்லை வாய்ந்ததென்றும், மண்டில மடங்கிய உலகத்தின் ஒளியிருட் சுழற்சி அதனினும் காலச் சிற்றெல்லை வாய்ந்ததென்றும். மண்டில மடங்கிய உலகத்தின் ஒளியிருட் சுழற்சி குற்றெல்லை வாய்ந்த தென்றும், உலகத்துளடங்கிய உயிர்களின் ஒளியிருட் சுழற்சி குறுக்கெல்லை வாய்ந்த தென்றும் பெறப்படும். படவே உயிர்களின் கூறுபாடுகளான நுண்ணணுக்களின் ஒளியிருட் சுழற்சி எல்லை மிக மிக அணுக்கம் வாய்ந்த தென்றும் பெறப்படும். என்னை? உடலுயிர் அணுக்கள் ஒரு நொடிக்குப் பல்லாயிரங் கோடி எல்லைப் பட்டடனவா ஒளியினும் இருளிலும் மாறி மாறித் திளைப்பன வாகியும், உலகம் அவற்றினும் மிகுந்த கால எல்லையுட்பட்டதா வாகியும், கதிர் ஒளியிலும் இருளிலும் மாறி மாறித் திளைப்பதாகியும், கதிர்

மண்டிலம் அதனினும் மிகுந்த கால எல்லையுட் பட்டதா ஒளியிலும் இருளிலும் மாறி மாறிப் புகுவதாகியும், புடவி அதனினும் மிகுந்த கால ஒளியிலும் இருளிலும் மாறி மாறிப் போவதாகியும் அவ்வாறே பிற பேரியக்கங்களும் நடைபெறலாயின.

இனி, சிற்றுயிரும் சிறு தொழிலும் வாய்ந்த மாந்தன்றன் பருவுணர்வு பொதி மூளையுள்ளும், நுண்ணுணர்வு பொதி மனத்துள்ளும் பட்டுச் சிதறுவனவாகிய அறிவு நிலைகள் எத்தன்மைத்தாம் எனின் கூறுதும். பருவுணர்வு பொதிந்து அதற்கிருப்பிடமாகிய மூளையின் காட்சியில் பொருளறிவு வாய்ப்பதே உறுதல் அறிவாகிய உற்றறிதல்நிலை என்றும், நுண்ணுணர்வு பொதிந்து அதற்கிருப்பிடமாகிய மனத்தின் தேர்ச்சிப் பொருளறிவு வாய்ப்பதே உய்த்தல் அறிவாகிய உய்த்தறிதல் நிலை என்று உணர்ந்து கொள்க. உற்றறிதலாந் தன்மை அனுபவம் என்றும், உய்த்தறிதலாந் தன்மை 'அனுமானம்' என்றும் வடநூற்களில் குறிக்கப் பெறும். இவ் 'வனுபவ' 'அனுமான' நிலைகளே உயிர்கட்கு உலகறிவாம் பேரொளியின் பருப்பொருள் நுண்பொருள் தன்மைகளை உணர்த்தப் பெறும் படிநிலைகளாகும். இவற்றைக் காட்சி யளவை, கருதலளவை என்றும் அளவை முறையானும் கூறப் பெறும் அளவுதல் அளவை. அளவுதல் புலர்தல், பொருந்துதல், சேர்தல், சார்தல், விளங்கள், துலங்கள் என்ற படிநிலைகளை உள்ளடக்கிய அறிவு நிலையாம். இது தருக்கத்தால் வெளிப்படலால் தருக்கம் என்றும் கூறப்பெறும். இந்நிலைப்படி நாம் மேலே கூறிய உண்மைகளுள் உடல், உலகம், மண்டிலம், புடவி முதலியவற்றின் நிகழ்ச்சியறிவு, உற்றறிதல் ஆகிய காட்சி யளவை அல்லது 'அனுபவம்' என்றும், அணு, உயிர், உணர்வு, ஒளியிருட் சுழற்சி முதலியவற்றின் நேர்ச்சியறிவு, உய்த்தறிதல், ஆகிய கருதலளவை அல்லது 'அனுமானம்' என்றும் கண்டு கொள்க. இந் நேர்ச்சி யறிவாகிய கருதலறிவு கொண்டே இருளிற் கிடக்கும் உயிர்கள் புறத்து ஒளி உண்டாந் தன்மையை உய்த்தறிந்து, அது நோக்கி நகரும் அது பின் ஒளி நிலையில் வந்துற்றக்கால் பற்றுவது நிகழ்ச்சி யறிவெனும் காட்சியறிவாம். அதன்பின் அகத்து ஒளி உண்டாந் தன்மையை உய்த்தறிந்து அது நோக்கி எண்ணும். அதன்பின் அகத்தொளி வாய்ந்தக்கால் பற்றுவது நேர்ச்சி யறிவென்னும் கருதல் அறிவாகும். இப்பாகுபாடறியா எளிய அறிவினர் இரண்டு திறத்தவாகிய அறிவு நிலைகளையும் ஓரறிவென்னும் பொதுப் பெயர் சுட்டியே கூறுவதும், காட்சியறிவையே அறிவென்றும், கருதலறிவை ஆராய்தல் என்றும் பிழைபடக் கொள்வர். கொள்ளவே ஆராய்ச்சியால் பட்ட செய்முறை

அசைச் சொற்கள்

வித்துவான் மோ. இசரயேல் எம். ஏ.,
[தமிழ் ஆய்வுத்துறை. சென்னைப் பல்கலைக் கழகம்]

இடைச் சொல் : தொல்காப்பியனார் இடைச் சொற்களை ஏழுவகைகளாகப் பகுத்துக் கூறி உள்ளார். அவையாவன, 1. சாரியைகள், 2. விகுதிகள், 3. வேற்றுமை உருபுகள். 4. இசைநிறைகள். 5 அசைநிலைகள், 6. குறிப்பால் பொருள் தருவன 7. உவமை உருபுகள் (சொல். 250) என்பனவாம்.

இடைச் சொல் இலக்கண நூலார் கூறும் பெயர், வினை, இடை, உரி என்னும் நால் வகைச் சொற்களில் ஒன்று. தொல்காப்பியனார் இடைச் சொல் பெயர் வினைகளின் "மருங்கில் தோன்றும்" (சொல். 159) என்றும் "தமக்கியல் பிலவே" (சொல். 249) என்றும் கூறுவதினின்று. அது பெயர் வினைகளை யொப்பத் தனித்து இயங்கும் தன்மை பெற்றது அன்று என்பது தெளிவு.

இடைச்சொல்லும் அசைச் சொல்லும்: தொல்காப்பியனார் தனித்து இயங்கும் தன்மை யற்ற வினையொடும் பெயரொடும் நடைபெற்று இயலுந் தன்மை பெற்ற இடைச் சொற்களில் அசைச் சொற்களையும் ஒன்றாகக் கருதுகின்றார். அவர் அசைச் சொற்களை அசை நிலை (சொல் 271, 272) உரை யசை (சொல். 277) என்னும் சொற்களால் குறிக்கின்றார் தொல்காப்பிய இசையியலுள் பதினெட்டு அசைச் சொற்களும், எச்சவியலில் அசைச் சொல்லாகச் செயல் புரியும் எட்டு வினை

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்னும் புரிவியல் அறிவே அவர்கட்கு மீக்கூர்ந்து, கருதலறிவாகிய தொய் முறை என்னும் தெரிவியல் அறிவு விளங்குவதரிதாகிற்று ஆகவே அவர்கள் உலகை உலகென்றும், உடலை உடலென்றும் கூறுவதன்றி, உலகியக்கும் வல்லுணர்வையும் உடலியக்கும் உள்ளுணர்வையும் அறியாராகின்றனர். இனி கரும வினைகளையே தெளிவுபெற உணராதவர் காரண வினைகளாகிய புறவெளியாகிய வானை இயக்கும் பேருயிர்ப்பையும் அகவெளியாகிய மனத்தை இயக்கும் சிற்றுயிர்ப்பையும் யாங்ஙன் அறிவர்? இக் காரண கரும அறிவு நிலைகளும் அகக் காரண அறிவு நிலை, புறக் காரண அறிவு நிலை, அகக் கரும அறிவு நிலை புறக் கரும அறிவு நிலை எனப் பகுக்கப் படுவனவாகும் இவை பற்றி இன்னுஞ் சிறிது விளங்கப் பேசுவோம்.

—(தொடரும்),

யுருவங்களும் (சொல். 425, 426 கூறப்பட்டுள்ளன. எனவே தொல்காப்பியனுர் அவர் காலத்தில் வழங்கிய முப்பத்திரண்டு அசைச் சொற்களைத் தொகுத்துக் கூறி உள்ளார் எனலாம்.

அசைச் சொல்லும் பொருளும் : அசை நிலைகள் பெரும் பாலும் செய்யுட் கண்ணே வழங்கியவையாம். சேனாவரையர், அசைத்தல் — சார்த்துதல் என்னும் பொருள் கூறி, பொருள் உணர்த்தாது. பெயரோடும் வினையொடுஞ் சார்த்துச் சொல்லப் பட்டு நிற்றலின் அசைநிலை யாயிற்று என்கிருர் மேலும் தெய்வச் சிலையார், நச்சினுர்க்கனியர் ஆகிய உரையாசிரியர் களும் இவை பொருளற்றனவேயாம் எனக் கருதுகின்றனர். பேராசிரியர் இலக்குவனுர் அவர்களும் இவற்றை அசையை நிரப்பப் பயன்படும் வெற்றுச் சொற்கள் (empty words) என்று குறிப்பிடுகின்ருர். [1]

ஆனல் தொல்காப்பியனுர் கருத்துப்படி இவை பொருளற்ற வெற்றுச் சொற்களல்ல. அவர் ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' (சொல். 155) என்றும் இடைச் சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே (சொல். 455) என்றும் குறிப் பிடுவதினின்று இசைச் சொற்கள் பொருள் உடையன என் பதைத் தெளிவாக அறிதும். பர். பி சுப்பிரமணியன் (சாத்திரி) அவர்கள் தாம் தொல்காப்பியத்திற்கு எழுதிய ஆங்கில உரையில் அசைச் சொற்கள் (இடைச் சொற்கள்) பொருளைக் குறிப்பாக உணர்த்தும் (சொல் 157) எனக் குறிப்பிடுகின்ருர். ஐரோப்பிய நாட்டுத் தமிழ் அறிஞர் பர். கமில் சுவலபில் அவர்கள் தமது கட்டுரையில் [2] அசைச் சொற்கள் வெறும் அசை நிலைகள் அல்ல வென்றும் அவை பொருளைத் தெளிவு படுத்தவோ, பொருட் சிறப்பு (emphasize) அளிக்கவோ பயன்படுகின்றன என்றும் சில எடுத்துக் காட்டுகளின் துணைக் கொண்டு தெளிவு படுத்து கின்ருர். பேராசிரியர். மு வரதராசனுர் அவர்களும் அவை பொருட் குறிப்புடையனவாகவே வழங்குகின்றன எனக் கருது கின்ருர்

எனவே, அசைச் சொற்கள் அசையை நிரப்புதற் பொருட் டாக வழங்குதலே யன்றி, ஏதேனும் பொருட் குறிப்புடையன வாகவும் அமைந்துள்ளன என்பது தெளிவு அவை கேட் போரின் கவனத்தை ஈர்ப்பதற்கோ, உள்ள உணர்ச்சியை

1. Prof. S. Ilakkuvanar. Semantemes and Morphemes Page. 6
2. Dr Kamil Zvelebil Emphasize in Early Old Tamil Culture, (1957) (226 — 234).

வெளிப்படுத்தவோ, பொருட் சிறப்பைக் குறிக்கவோ, ஏவலை அமைதியான முறையில் வெளிப்படுத்தவோ பயன் படுகின்றன எனலாம்.

தொல்காப்பியர் கூறும் அசைச் சொற்கள் : தொல்காப்பியனார் அசை நிலைகளாகக் குறிப்பிடுகின்றவற்றுள் சில பிறழ் பிரிப்பினால் (metanalysis) தோன்றிய வடிவங்களாகும். எடுத்துக் காட்டாக, மோ, மியா, சின், இக (சொல். 247) என்பனவற்றைக் கூறலாம். சில வினைச் சொற்கள் தம் இயல்பான பொருண்மை இழந்து குறிப்புப் பொருண்மை தருவனவாகவே அமைந்து அசைச் சொல் ஆகி உள்ளன.

ஆக, ஆகல், என்பது (சொல். 280) கண்டீரே, கொண்டீரே, சென்றதே, போயிற்றே (சொல். 425) கேட்டை, நின்றை, காத்தை, காண்டை (சொல். 426) என்னும் வினைச் சொற்கள் தமக்குரிய இயல்பான பொருள் இழந்து வழங்கிய அசைச்சொற்களாம். இவ்வாறு தனியுரிமை பெற்று வழங்கிய—வழங்கும் பெயர், வினைகள் தனித்து இயங்க இயலாத இடைச் சொல்லாகத் திரிதல் — இடைச் சொல் ஆகச் செயலாற்றுதல் மொழி வழக்கில் பிற இடங்களிலும் காணலாம். எடுத்துக் காட்டாக, ஆல் (< ஆகில்), மார் (<மகார்)[3], மை (<மெய்) (கருமை <கருமெய்). கிறு, கின்று (< இன்று), அன் (< அவன்) என்பன பெயர் வினைகள் வேறுபட்ட சொல் உருங்களேயாம். உடன், இல், இடம், இருந்து, நின்று, அது என்னும் பெயர் வினைகள் வேற்றுமை உருபுகளாக வழங்கும் பொழுது அவை இடைச் சொற்களாகவே செயலாற்றுகின்றன.

அசைச் சொற்கள் அடுக்கி வருதல் : தொல்காப்பியனார் இசை நிறை, அசைநிலை, பொருளோடு புணரும் சொற்கள் அடுக்கி வருதல் (சொல்: 471) உண்டு என்கிறார். இசைநிறை நான்கு முறையும் (சொல். 423) பொருளொடு புணரும் சொற்கள் மூன்று முறையும் அடுக்கி வருதல் அவற்றின் மிக உயர்ந்த வரம்பாகும் என்கிறார். எனவே சேனாவரையார் கருத்துக் கொப்ப அசை நிலைகள் இரண்டு முறைக்கு மேல் அடுக்கி வருதல் இல்லை என்பது தெளிவாகின்றது.

பொருள் விளக்கம் : தொல்காப்பியனார் கூறி உள்ள அசைச் சொற்களுக்கு உரையாசிரியர்கள் தந்துள்ள எடுத்துக் காட்டுகளின்று, அவை என்ன பொருள் தருகின்றன என்பதை ஓரளவு பகுத்தறியலாம். அவற்றைக் கீழே தருதும் :

---

3. மோ. இசரயேல் மார் [மான், மாள்] ஈற்றுப் பெயர்ச் சொற்கள்.

தென்மொழி [1964] சித்திரை மாத இதழ்.

1. கவனத்தை ஈர்ப்பன : ஏ. (சொல். 272), மற்று (சொல். 266) குரை (சொல். 272) யா (ம் + (இ +)யா) (சொ. 274) பிற, பிறக்கு (சொ. 269), கண்டீரே முதலியன (சொல். 425), கேட்டை முதலியன (சொல். 426,)

2. உணர்ச்சியை வெளிப்படுத்துவன : அந்தில் (சொ. 267) அரோ, கா, யா, போ (சொ. 279) ஆக, ஆகல், என்பது (சொ. 280) மாது (சொ. 279)

3. பொருட் சிறப்பு [emohasize] அளிப்பன :

ஏ (சொ. 257), ஆர் (சொ. 271

4. விருப்பம் அல்லது அமைதியான ஏவலைத் [mild imperative] தெரிவிக்கப் பயன்படுபவன.

க (இ — க), மதி, இதும், (சொல். 274)

ஒ (மோ ◁ ம் + ஒ) (சொ. 274) மா (சொ. 273)

5. ஐயப்பாட்டைக் குறிப்பது : போலும் [சொ. 278]

6. பிற பொருளது: ஆங்க [சொ. 277] அவ்வழியே]○

தென்மொழி, கடலூர்-1.

தனித் தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ், ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	[இரு வண்ணம்]	100 உருபா
,, ,, ,,	[ஒரு வண்ணம்]	75 உருபா
உள்ளே முழுப் பக்கம்		50 உருபா
,, அரைப் பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

தமிழ் மகனே . . !

புலவர். துரை மாலிறையன்.

௧ தன்மானம் மிக்க தமிழ் மகனே ! செந்தமிழ்தான்
உன்மானம் என்றே உணர்வுற்றால்—மன் மொழியாம்
நந்தம் தமிழ் மொழிபால் நண்ணுமோ இவ்விழிவு ?
சொந்த நிலைதன்னைச் சூழ்.

௨ மனவுணர்வால் மாந்தன் மதிப்புயர்ந்தான் அந்த
மனவுணர்வைப் போற்றாது மாய்ந்தால் —இனவுணர்வு
தாய் மொழிப்பற் றின்ன தகைமை நலமைத் தாமோ ?
வாய்மையினால் நல்லுணர்வை வாழ்த்து.

௩ ஓங்கும் உணர்வை ஒரு வழியில் போக்கினையேல்
பாங்காய்ப் பரப்புலகின் பாடுயர்த்தும்—ஈங்குள்ள
நற்றமிழர் சேர்ந்தால் நலியாமல் இந்தி புகழ்
உற்றிடுமோ எண்ணி உரை.

௪ நல்லுணர்வோ டொன்றுவதால் வாழ்க்கை சிறப்படையும்
அல்லுணர்வோ புன்விலங்காய் ஆக்கிவிடும்—
நல்லறிவாய் !
தாய் மொழியைக் காக்கத் தகைமையிலா இந்தியினை
மாய்க்கும் உணர்வால் மகிழ்.

௫ காணும் பொருளையெலாம் நன்குணர்வாய் உன்னுளத்துள்
கோணல் எனத் தெரிந்தால் கொள்ளாதே வீணாக
உள்ளம் விரும்புவன எல்லாம் கடைப்பிடியேல்
கள்ள மிலாவுணர்வைக் காத்து.

௬ போலி உலகியலில் போட்டுளத்தை மாய்க்காதே
வேலி இலாப் பயிர்கள் மேய்தலுறும்—காலிகளால்
காக்கப் படுமோ ? களைக்கப் படுமோ? சொல்
ஊக்கம் உணர்வின்பால் ஒட்டு.

௭ உணர்விவ் வுலகாளும் உண்மைதனைச் சேர்க்கும்
புணர்வின்றி அன்புடையார் போக்கைப்—புணர்விக்கும்
தூய்மை வினை செய்யும் தொய்ந்தின்பம் தாம் பெருக்கும்
ஆய்ந்திதனைக் கொள்வாய் அகத்து.

௮ ஆற்றல் மிகுக்கும் அருந்தாய் மொழி உணர்வு
மாற்றுப் பகை வெல்லும் மாசகற்றும்—நேற்றிருந்த
யாவும் நினைவிட் டகன்றதே நின்னிலைக்குக்
கூவி அழும் என்றன் உளம்.

Sirupanattruppadai

மு. இலெ. தங்கப்பா

Spotless he shines, so great among the Ovya Kings
Who ruled in the good great Ilankai
With traditions undestroyable,
Which bears the basis and the name of Ancient Ilankai,
And where the turbulent waters flow,
Where the blossoming Naga, Akhil and Sandal boughs
Serve as rafts to swimming girls.
A faultless nufailing sword he has and a tiger's strength.
Warrior's anklets he does wear
Round his ankles scarred with elephant ride.
His large hands bounteous like the showers of rain
Scatter elephant —cows as gifts to musicians
With multifarious instruments; And with a firm resolve.
To see that King of great repute we went
Singing of his virtues rare and of the abundance
Of his fathe'rs sky — high hills.
Before we went there, our kitchen lay
In ruin, and a bitch that recently had whelped
Lay barking there unable to endure
The sucking of the milkless teats by the whelps
With unopened eyes and drooping ears. The refters were
Falling on the old wall by white ants eaten;
And on the piled up earth the hollow mushrooms stood.
The starving house wife with a lean and slim waist.
Cooked a saltless meal of leaves from plants on heaps of waste
We with all our kindred folk sat down to it

வானவியலில் கணிதவியலின் பங்கு

[Mathamatics in Astronomy]

முல்லை. ஆதவன்

''விண் வெளிப்பரப்பிலே மாந்தன் மிதந்தான்'' என்றெல்லாம் கேள்விப்படும் பொழுது நாம் வியக்கின்றோம்; மாந்தரின் ஆற்றலை எண்ணி எண்ணிப் பூரித்து நிற்கின்றோம். உண்மையிலேயே, இன்றைய மக்கள் குமுகாயம் வானவியல் அறிவிலே மிக விரைவாக முன்னேறிவிட்டது. நிலவுலகின் மேலே விரிந்து, பரந்து வரம்பின்றிக் கிடக்கும் விண் வெளிப் பரப்பும், அத்தப் பரப்பிலே நிலையின்றி நகர்ந்து கொண்டிருக்கும் விண் வெளிக் கோள்களும் அவற்றின் இயக்கமும் பற்றி அறிந்து கொள்ளும்பொழுது, நாம் இயற்கையின் இறும்பூதை மிகவும் வியக்கிறோம். விண் வெளிப் பரப்பைப் பற்றிய வான வியல் (Astronomy) துறையிலே, கணிதவியல் (Maths) துறை பெரும் பங்கு ஏற்கின்றது. சுருக்கமாகக் கூறப் போனால் வான வியலின் அடிப்படையே கணிதவியல் என்பது மிகையாகாது. வானவியலிலே கணிதவியல் வியக்கத் தக்க அளவு பயன் பட்டுக் கொண்டு வருவதை சிறிது பார்ப்போம்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

Shutting the door for fear that fools may scoff.
But now, degrading hunger and our sufferings gone.
We are just returuning straight from there. with gifts
Of a big chariot and a small eyed elephant
With driuping cheeks, a cruel resolve and the bells
clanging from his sides.
So you may with all your longing kindred go to him
With an assured heart. And on the way
The screw-pine blossoms look like swans
The *Seruntki* fresh does gleam as gold
The water-thorn's in emerald bloom
The Laurel's in budding like the perarls.
Thus lies your road along the famous sea-coast land,
The sea lashing 'gainst the beach of white sand
And you will reach the ''city fortified'' surrounded by
The lagoons blue and icy lakes.

ஏறத் தாழ கி. பி. பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலும், கதிரவன் நிலவுலகைச் சுற்றி நகர்ந்து வருகிறது என்ற கொள்கையே நிலைபெற்றிருந்தது. இந்தக் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கை ஒன்றைப் புகுத்தியவர், போபலந்தைச் சேர்ந்த கோபர்நிகசு (1473—1543) என்பவர். இந்தக் கொள்கை இவருடைய காலத்திலேயே, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவருக்குப் பின்னால் வந்த ஒரு சிலர், இந்தக் கொள்கையை நிறுவ முயன்றனர். அவர்களில் தலைமையானவர் டிசோ பிரேகி. Tycho Brhe) என்பர். வான வியல் துறையிலே ஒரு புதிய திருப்பம், இவர்களால் உருவாயிற்று. "கதிரவனை இந்நிலவுலகம் சுற்றி வருவதுடன் தன்னைத் தானேயும் சுற்றிக் கொள்கிறது" என்ற கொள்கை நாளடைவில் உறுதியடைந்தது. நியூடன் 1643-1727 கண்டுபிடித்த ஈர்ப்புக் கொள்கை, வானவியலின் திறமையான வளர்ச்சிக்கு அடிகோலியது எனலாம். விண் வெளியில், மிக உயரத்தில் மிதக்க நினைப்பவர்கள், புவியின் ஈர்ப்புத் திறனுக்கு எட்டாத நிலைக்குச் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு, புவியின் ஈர்ப்புத் திறனைக் கடக்க நினைப்பவர்கள், எவ்வளவு விசையுடன் (force) அனுப்பப்பட வேண்டும் என்பது கணிதவியலால் மட்டுமே கணக்கிடப்பட முடியும். வானவியல் துறையிலே, கணிதவியல் உருவாக்கிய ஒரு வியத்தகு விளைவைக் கூறி, கணிதவியல் எவ்வளவு சிறப்பான பங்கு கொள்கின்றது என்பதை நிலை நாட்டலாம். பிற்கால விண்வெளி ஆராய்ச்சி கோள்களையும் (planets), உடுக் (Star) களையும் பாகுபடுத்திக் காட்டியது. கதிரவனைச் சுற்றி வரும் ஒன்பது தலையாய கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கதிரவன் நிலை பெற்றதொரு நெருப்புருண்டை என்ற கொள்கையும் உறுதிப்படலாயிற்று.

கதிரவனைச் சுற்றுவன ௧ [Mercury] ௨ வெள்ளி [Venus] ௩ நிலவுலகம் [The earth] ௪ செவ்வாய் [Mars] ௫ வியாழன் [Jupitar] ௬ காரி [Saturn] ௭ உரேனசு [Uranus] ௮ நெப்தியூன் [Neptune] ௯ புளுடோ [Pluto] ஆகியவை.

"போடு கொள்கை [Bodes law] எனப்படுவது, மேலே கண்ட கோள்களின் [ஏறத் தாழ] தொலைவைக் கதிரவனிடமிருந்து கணக்கிடுவது ஆகும். தொலை நோக்கியின் மூலம், அதைக் கண்ட பொழுது, இக் கொள்கை உறுதிப்பட்டது.

'போடு' என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட இந்தக் கொள்கை, கணித வியலால் மட்டுமே உருவாக்கப்பட்டது ஆகும்.

அவர் செய்த வெல்லாம் பெருக்கலும் வகுத்தலும் தாம். ஆனால், அவரால், கோள்களின் இடைத் தொலைவைக் கண்டு பிடிக்க முடிந்தது

போடு கொள்கை : [Bodes law] :

0 ... 1 — 2, — 4, — 8, — 16 — 32... முதலியவற்றை 3 ஆல் பெருக்கக் கிடைப்பன

0 — 3 — 6 — 12 — 24 — 48 — 96 ... முதலியன. இவற்றுடன் 4-ஐக் கூட்ட வரும்.

4 , 7, 10, 17, 28, 52, 100 .. முதலியவற்றை 10 ஆல் வகுக்க

·4, ·7, 1·0, 1·6, 2·8, 5·2, 10...

இறுதியாகக் கிடைத்தவை ·4 ·7, 1·0, 1·6, 2·8,5 2, 10 0 முதலானவை

இவை ஒன்பது கோள்களின் நிரல் பட்ட, தொலைவு அளவு களாம்.

0·4 என்பது, அறிவன் 0·7 என்பது வெள்ளி, 1 என்பது உலகம்,இவ்வாறுக, அவற்றின் இடைத் தொலைவின் அளவுகள் அமைகின்றன. பிற் காலத்தில் தொலை நோக்கியின் மூலம், அராய்ந்தபொழுது, இந்த அளவுகள் ஏறத்தாழ சரியாகவே இருந்தன. மேலே கொண்ட கொள்கை செயலறிவால் [Empirical] ஏற்பட்டதே ஆகும்.

ஒவ்வொரு முறையும், 2·8 என்ற அளவையிலே எத்த வொரு கோளும் தென்படவில்லை. வான வியல், கணிதவியல், அறிஞர்களுக்கு இஃது ஒரு புதிராகவே யிருந்தது. ஆனல் பிற் காலத்தில் சீரசு [Ceres] என்ற கோள்களின் கூட்டம் கண்டு பிடிக்கப்பட்டது. இதனுடைய தொலைவு, 2·8 என்ற அளவைக்கு ஒத்து வந்தது. எனவே. 'போடு கொள்கை' பொய்யாகி விடவில்லை. இவ்வாறு புறக் கண்களுக்குத் தெரி யாத புதிய கேள்களின் கூட்டம், கணிதவியலின் அடிப் படையில் எழுந்த போடு கொள்கையில் தெரிந்தது. போடு கொள்கை செயலறிவால் ஏற்பட்ட கொள்கையாயினும் அதனுள்ளே உண்மையின் சாயலைக் காண்கிறோம். போடு கண்டுபிடித்த கணிதவியல் கொள்கை, முழுவதும் பொய்த்து விடவில்லை.

முகவர்கள் கவனத்திற்கு

- ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5–ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும் :
- படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது
- தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே எழுதவும்.

—அமைச்சர்.

எல்லாம் அழகேயடா !

நெரிந்து சரிந்து நெய்த்திருண்டு
நீண்டு சுருண்ட குழற்காடு
விரிந்து கிடந்து புறம் மறைப்ப
வீழ்ந்து குளிர்நீர் அலைபடிந்தே
எழுந்ததும் அழகேயடா ! – அவள்
எழுந்ததும் அழகேயடா !

நடக்கும் பொன்னிப் புனல்விட்டு
நன்னூல் ஒக்கும் இடை நொடிக்க
உடை ஈரத்தால் உடல்படிய
ஒவ்வோ ரடியாய் எடுத்தெடுத்து
நடந்ததும் அழகேயடா ! –– அவள்
நடந்ததும் அழகேயடா !

வெள்ளி முறுவல் சிறிதரும்ப
விழியை நிலத்தில் கவிழ்த்தபடி
அள்ளிக் கொள்ளும் கொள்ளை எழில்
அமைந்த முகத்தா மரைசிவக்கப்
பார்த்ததும் அழகேயடா –அவள்
பார்த்ததும் அழகேயடா !

தன்னை அரியள் என உணர்ந்து
தானே மனத்தில் தருக்குற்றுத்
தின்னத் தக்க அரிசிப் பல்
தெரியத் தோற்றி இன்பநகை
பூக்கதும் அழகேயடா ! – அவள்
பூத்ததும் அழகேயடா !

செழித்த புருவம் மேல்வளைத்துச்
சிறக்க ணித்தே எனைப் பார்த்து
விழித்தோர் இன்ப மறை பொருளை
விடுவிப் பாள்போல் மெய்மறந்து
இமைத்ததும் அழகேயடா ! – அவள்
இமைத்ததும் அழகேயடா !

வாரித் தழுவி ஒருமுத்தம்
வைத்தால் என்ன என்றேங்கிப்
பாரித் தெழுந்த ஆவலினால்
பார்த்துப் பாாத்துத் துடிதுடித்துத்
தவிக்கதும் அழகேயடா ! –– அவள்
தவித்ததும் அழகேயடா !

மா. எழில் முதல்வன்

தொடர்—13.

தொடரோவியம்

போர்மறவனும் காதலும்.

சியார்சு பெர்னர்டு சா. தமிழில் : வழுதி.

நிகோலா: காதற் குறிப்புடன் அவளை நோக்கி நகைத்துக் கொண்டே) இந்தா, பெண்ணு! இன்று பிற்பகலெல்லாம் உன்னை ஒரு நொடி தனியாகப் பார்க்கவேண்டுமென்று முயன்று கொண்டே இருக்கிறேன்... (அவள் தோளைப் பார்த்தவுடன் அவன் முகம் மாறுகிறது) இதென்னடி குட்டி!...சட்டைக் கையை மாட்டுவதிலே இஃது...என்ன புதிய பாணி!

உலூக்கா : (பேருரிமையுடன்) இஃது என் பாணி.

நிகோலா : ...ஆமாம் ஆமாம்!... அம்மா உன்னைப் பார்த்தால்... ஏசப் போகிறார்கள்... (கட்டைகளைக் கீழே வைத்துவிட்டு இருக்கையில் வாகாக உட்கார்ந்து கொள்கிறான்)

உலூகா : அதைக் கொண்டு நீ எதற்காக என்னிடம் பேச வர வேண்டுமாம்?

நிகோலா : அட, சரிதானம்மா...என்னிடத்திலே முரண்டு கொள்ளாதே! உனக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன் (அவள் அவனருகில் அமர்கிறாள். அவன் கையில் பணக் கற்றை ஒன்றை எடுக்கிறான் உலூக்கா கண்களில் ஆவல் மின்ன, அதனைப் பறிக்க முயல்கிறாள். அவன் அவளுக்கு எட்டாமல் இடது கைக்கு மாற்றிக் கொள்கின்றான்) பார் இருபது இலீவா! செருகியசு கொடுத்தார்!... சும்மா, வீண் பெருமைக்காக! முட்டாளிடத்தில் பணம் தங்காது என்கிறார்களல்லவா! இன்னும் பத்து இலீவாக்கள் உள்ளன. அந்த சுவிசுக்காரன் கொடுத்தான் அம்மாவும் இரெய்னாவும் அவனைப்பற்றிச் சொன்ன பொய்களுக்கு நானும் தலையாட்டினதற்காக. அவன் முட்டாள் இல்லை! இல்லவே இல்லை. காதரின் அம்மா கீழே வந்து என்னிடம் அவ்வளவு மதிப்பாகப் பேசினதை நீ கேட்டிருக்க வேண்டுமே!... ஐயாவின் பதற்றத்தை யெல்லாம் பொருட்படுத்தா தேயப்பா ... என்றார்கள்... நான் எவ்வளவு கெட்டிக்கார வேலைக்காரன் என்பது அவர்களுக்குத் தெரியும். — பலர் முன்னிலையிலேஎன்னை முட்டாளாகவும் பொய்யனாகவும் பண்ணினார்கள்தாம் ... அதற்கென்ன... இந்த இருபதும் நம் சேமிப்போடு சேரும். இந்தப் பத்தும் ... வந்து, நீ என்னிடம் அன்போடு நான் மாந்தன்

என்று எனக்கு நினைவு வரும்படியாகப் பேசுவாயானால், உனக்கு ! ...வேலைக்காரனாகவே இருப்பதில் அவ்வப்பொழுது சலிப்பேற்படுகிறது.

உலூக்கா : ஆமாம் .. 30 இலீவாவுக்கு உன் ஆண் தன்மையையே விற்றுவிட்டு, பத்து இலீவாவுக்கு, என்னை வாங்கிக் கொள்ளலாம் என்று பார்க்கிறாய் ! (எள்ளலோடு எழுந்து நின்று) உன் பணத்தை நீயே வைத்துக்கொள் நீ வேலைக்காரனாக இருக்கவே பிறந்திருக்கிறாய். நான் அப்படியில்லை. நீ உன் கடையைத் திறந்துவிட்டால்... ஒருந்தருக்கு வேலைக்காரனாக இருப்பதை விட்டு விட்டு எல்லாருக்குல் வேலைக்காரனாகி விடுவாய். (அவள் எண்ண மூட்டத்துடம். மிசைப் பலகை யருகு சென்று செருசியசின் நாற்காலியின் பெருமிதத்தோடு அமர்கின்றாள்)

நிகோலா : (கட்டைகளை எடுத்துக் கொண்டு நெருப் பருகில் செல்கிறான்...) ஆ பொறுத்திருந்து பார் .. மாலை நேரங் களை ஒன்றாகக் கழிக்காமலா போகப் போகிறோம். என் வீட்டில் நான் தலைவனாக இருக்கிறேனா இல்லையா பார் ! (கட்டைகளைக் கீழே போட்டுவிட்டு நெருப் பருகில் மண்டியிடுகிறான்.)

உலூக்கா : என் வீட்டில் ஒருபொழுதும் நீ தலைவனாக இருக்க மாட்டாய்

நிகோலா: (மண்டியிட்டபடியே திரும்புகிறான் ... மடித்த கால்களில் உட்கார்ந்து கொள்கிறான் .. அவளின் அடங்காத செருக்கு அவனைத் தளர்த்தி விடுகின்றது) உன் மனதில் ஏதோ பெரிய ஆவல் வைத்திருக்கிறாய் உலூக்கா. ஆனால் இதை மட்டும் நினைவில் வைத்துக் கொள் .. உனக்கு ஏதாவது நல்வாழ் வந்தால், நான்தான் உன்னை ஒரு பெண்ணாக்கி வைத்தேன் என்பதை மறந்து விடாதே !

உலூக்கா : நீயா !

நிகோலா : (தடுமாறி எழுந்து அவளிடம் செல்கிறான்) ஆமாம் நான்தான் நீ பொய் முடி தைத்துக் கொள்ள வேண் டாம் மற்ற பல்கேரியப் பெண்களைப் போல உதட்டுக்கும் கன்னத்துக்கும் சாயம் பூச வேண்டாம் என்று சொல்லிக் கொடுத்தது யார் ? உன் நகங்களை ஒழுங்காக வெட்டவும், கைகளைத் தூய்மையாக வைத்திருக்கவும், உருகியப் பெரு மாட்டி போலப் பார்க்க எடுப்பான தோற்றமாக இருக்கவும் கற்றுக் கொடுத்தது யார் ? எல்லாம் நான் ! சொல்வது காதில் விழுகிறதா ? நான் தான் ? ... (அவள் வெறுப்புடன் தலையை

அசைக்கின்ருன். அவன் அப்பால் திரும்பித் தணப்புடன் கூறு கிருன்) பல முறை நான் நினைத்திருக்கிறன்; இரெய்னுவும் குறுக்கே இல்லாமலிருந்து, நீயும் முட்டாளாக இல்லாமலிருந்து, செருகியசும் இன்னுங் கொஞ்சம் முட்டாளாக இருந்திருந்தால்.. நீ எனக்கு மனைவியாக வந்து எனக்குப் பணச்செலவு வைத்துக் கொண்டிருப்பதற்கு மாருக, நீ என் கடைக்கு வரும் சிறந்த வாடிக்கைக் காரியாக ஆவதற்கு இடமிருக்கிறது.

உலூக்கா : நீ எனக்குக் கணவனுக வருவதைவிட, எனக்கு வேலைக்காரனுகதான் இருக்கப் போகிருய்! என்னை மேலும் வளர்த்து விடுவாய் ... உன் உள்ளம் தான் எப்படிப் பட்டது என்று எனக்குத் தெரியுமே !

நிகோலா : அவளருகில் நெருங்கி, அழுத்தமாகக் கூறு கிருன்) என் உள்ளத்தை வீட்டு விடு, நான் சொல்லும் அறி வுரைகளை மட்டும் கேட்டுக் கொள். நீ ஒரு பெருங்குடி மகளாக விரும்பினுல், இப்பொழுது நீ என்னிடம் நடந்துகொள்ளும் முறை பயன்படாது. நாம் மட்டும் தனியாக இருந்தால் போகிறது என்று விட்டு விடலாம்... மற்றபடி உன் போக்கு மிகவும் வெடுக்குத் துடுக்காக இருக்கிறது.

துடுக்குத்தனம் மிகுதியாகப் பழகுவதற்கு அடையாளம் அஃது என்மேல் உனக்குள்ள அன்பைக் காட்டுகிறது...மற்றும் என்னிடத்தில் பெரிய உயர்ந்தவள் போலவும் நடிக்க வேண்டா நாட்டுப்புறத்துப் பெண்களைப் போலவே நீயும் இருக்கிருய். நான் குதிரைக்காரப் பையனை எப்படி நடத்து கிறேனே அது போலத் தான் வேலைக்காரனையும் நடத்த வேண்டும் ; அது தான் மதிப்புத் தருவது என்று நினைக்கிருய். அஃது உன் அறியாமை... மறந்து விடாதே ... அதுமட்டுமா... எல்லாரையும் எதிர்த்துக் கொண்டு துடிப்பாக நில்லாதே. நீ உன் போககின்படியே போக வழியிருப்பது போல நடந்து கொள்... என்ன வழியோ, ... மற்றவர்கள் ஏவுவதற்கு வழியிருப்பது போல நடந்து கொள்ளாதே. பெருங்குடிப்பெண் ணுக நடந்து கொள்வதற்கு என்ன வழியோ, அதுதான் அதற்கும். உனக்கு உயர்வு கிட்டுமானுல் நானும் அதற் கேற்றுற்போல் என் நிலைமை தெரிந்து நடந்து கொள்வேன் என்று நீ கட்டாயம் நம்பலாம். நினைத்துப் பார் பெண்ணே !... நான உன் பக்கம் தான். பணியாள் எப்பொழுதும் பணி யாளரின் பக்கம் தான் நிற்க வேண்டும்.

உலூக்கா (பொறுமையிழந்து எழுகின்ருள்) நான் என் வழியில் தான் நடப்பேன். உன்னுடைய, பசையற்ற அறி வுரைகளால் என் நெஞ்சுரத்தை யெல்லாம் குலைத்துவிடுகிருய்.

சரி, சரி, போய் அந்தக் கட்டைகளை எல்லாம் நெருப்பில் போடு ... அந்த வேலை தான் உனக்குப் புரியும்.

(நிகோலா அவளை மடக்க வாயைத் திறக்கின்றான், அதற்குள் செருகியசு வருகிறான். உலூக்காவைப் பார்த்ததும் ஒரு நொடி தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்கிறான் : பின்பு கனப்பை நோக்கிச் செல்கிறான்.)

செருசியசு : (நிகோலாவை நோக்கி உன் வேலைக்கு நான் தடையாக இல்லையே !

நிகோலா : (இனிய குரலில், ஒரு முதியவன் பேசும் முறையில்) அதெல்லாம் இல்லை...; நன்றி; இந்த முட்டாள் பெண் எப்பொழுதெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறதோ அப் பொழுதெல்லாம் இங்கே நூல் நிலையத்துக்கு ஓடி வந்து விடுகிறாள், புத்தகங்களைப் பார்ப்பதற்காக... இஃது ஒரு வழக்க மாகவே போய்விட்டது...அதுபற்றித் தான் அவளிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவளுடைய படிப்பால் வந்த வினை இது... அவளுடைய நிலைமைக்கு மீறிய பழக்கங்களெல்லாம் வந்து விடுகின்றன. (உலூக்காவை நோக்கி)... படையாள்நர் ஐயா வந்திருக்கிறார்; உலூக்கா அந்த மிசைப் பலகையை ஒழுங்குப் படுத்தி வை. (வெளியே உணர்ச்சி வயப்படாமல் செல்கிறான்)

உலூக்கா செருகியசைப் பார்க்காமல், மிசைப் பலகை மேலுள்ள தாட்களை ஒழுங்கு படுத்துவதுபோல் பாசாங்கு செய் கிறாள். அவன் மெல்ல அவளருகில் செல்கிறான் அவள் சட்டைக் கையை மடித்து வைத்திருக்கும் முறையை ஆராய் கிறான்).

செருகியசு : எங்கே, பார்க்கலாம், அதில் ஏதாவது வடுத் தெரிகிறதா ? (அவள் கையிலுள்ள வங்கியை மேலே தள்ளி விட்டு அவன் பிடியால் ஏற்பட்ட சிராய்ப் பைப் பார்க்கிறான் அவள் அசையாமல் நிற்கிறாள்; அவனைப் பார்க்கவில்லை. அவன் அவ்வாறு செய்தது அவளுக்கு விருப்பந்தான்; எனினும் விழிப்பாக நிற்கிறாள்) அடடா, வலிக்கிறதா ?

உலூக்கா : ஆம்.

செருகியசு : நான் வலியை போக்கட்டுமா ?

உலூக்கா : செருக்குடன் சடக்கெனக் கையை இழுத்துக் கொள்கிறாள் . இன்னும் அவன் முகத்தைப் பார்க்கவில்லை.) ஊகும்... இப்பொழுது நீர் அதை ஆற்ற முடியாது.

செருகியசு : (தன்னுண்மையுடன்) ... முடியாது என்று உறுதியாகத் தெரியுமா ? (அவளை அணைத்துக் கொள்பவன் போல் நகர்கிறான்.)

உலூக்கா: என்னிடம் விளையாட வேண்டாம் தெரிகிறதா? ஒரு பெரிய படையலுவலருக்கு வேலைக்காரியோடு என்ன விளையாட்டு ?

செருசியசு: சற்றும் இரக்கமில்லாமல், விரலால் அவளின் சிராய்ப்பைச் சுட்டிக் காட்டுகிறான்) அது விளையாட்டாகவா வந்தது.

உலூக்கா : (முகத்தைச் சுளித்துக் கொண்டு, முதல் முறையாக அவனை ஏறிட்டு நோக்குகிறாள்) நீர் அதற்காக வருத்தம் தெரிவிக்கிறீரா இல்லையா ?

செருசியசு : (அழுத்தமாக கைகளைப் பிடித்துக் கொண்டு) நான் ஒரு பொழுதும் வருத்தம் தெரிவிப்பதில்லை.

உலூக்கா : (ஏக்கத்துடன்) ஓர் ஆண் இந்த அளவுக்கு ஒரு பெண்ணினின்று வேறு பட்டவனாக இருக்க முடியும் என்பதை நான் நம்ப முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் ! ஆனால் உண்மையிலேயே நீர் நெஞ்சுரம் வாய்ந்தவர் தாமா ? எனக்கு வியப்பாக இருக்கிறது.

செருசியசு: (சிறிதும் கவலைப்படாமல், தன் போக்கைத் தளர்த்திக் கொண்டு) ஆம். நான் நெஞ்சுரம் வாய்ந்தவன் தான். முதல் குண்டொலியில், என் நெஞ்சு, நெஞ்சைப் போலத்தான் துடித்தது. ஆனால் தாக்கத் தொடங்கியவுடன், துணிவு வந்து விட்டது ... ஆம்... இஃது ஒன்றுவது...என்னைப் பற்றிய செய்தியில் உண்மை...

உலூக்கா : அந்தத் தாக்குதலில். என் அப்பாவைப் போல் ஏழையானவர்களுடைய பிள்ளைகள், உம்மைப் போலப் பணக்காரர்களைவிட நெஞ்சுரத்தில் ஏதாவது தாழ்ந்திருந்த தாக நீர் கண்டிருக்கிறீரா ?

செருசியசு : சற்றும் கருத்தூன்றாமல், அதேபொழுது ஒரு வகைக் கசப்புணர்வுடன்)... இல்லவே இல்லை ... எல்லாரும் பெரிய மறவர்களைப் போலக் கத்தியை வீசினார்கள்...திட்டிக் கொண்டார்கள். கூச்சலிட்டார்கள்... துள்ளிக் குதித்து ஆர்ப்பாட்டம் செய்வதற்கும் கொல்லுவதற்கும் வேண்டிய நெஞ்சுரம் மிகவும் மலிந்த சரக்கு. என்னிடத்தில் ஆங்கில நாட்டு வேட்டை நாய் ஒன்றிருக்கிறது. இது போன்ற நெஞ்சுரம் அதனிடத்தில் ஏராளம்! உருசிய நாட்டாரெல்லாம் பின்னால் நிற்க, போருக்கு வந்தனரே பல்கேரிய நாட்டார்... அவர்கள் அத்தனைப் பெயரிடத்திலும் உள்ள நெஞ்சுரம் அந்த நாயிடத்தில் உண்டு. ஆனால் அதே சமயம், என் வேலைக் காரன் அதைச் சவுக்கால் அடித்தால் அது குழைந்து கொண்டு

சாதி

மாந்தவியல் — மணிவேலன்.

'சாதி' என்ற சொல் தமிழ்ச் சொல் அன்று. இதே பொருளைக் குறிக்கும் வேறு தமிழ்ச் சொல் இல்லை என்றே அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே சாதி என்ற பகுப்பு முறை தமிழர்களிடையே இறக்குமதி செய்யப்பட்ட ஒன்றே யல்லாமல் இயற்கையில் நிகழ்ந்த மாறுபாடு அன்று. தமிழர்களிடையே ஐந்து நிலங்களும் அவற்றிற்குரிய மக்களும் குறிக்கப் படுகின்றன ரென்றாலும் சாதி அமைப்பில் (Caste system) காணப்படும் கட்டுப்பாடுகள் இல.

மக்கள் கூட்டம், தொழில் அடிப்படையிலோ பழக்க வழக் கங்களின் அடிப்படையிலோ பற்பல தொகுப்புகளாக பிரிந்தது. ஆனால் நம் நாட்டில் காணப்படும் சாதி முறை தொழிலைக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

தான் நிற்கிறது. உன் போர் மறவன் என்பவன் அது போன் றவன் தான். கேள், உலூக்கா...நீ சொன்னாயே அந்த ஏழைகள் எல்லாம் ஆட்களை வெட்டி எறிவதில் கெட்டிக் காரர்கள் நாம். ஆனால் தங்கள் மேலாளர்கட்கு அவர்கள் அஞ்சுகின்றனர்...இழிவு படுத்தினாலும், உதைத்தாலும் வாங்கிக் கொள்ளுவார்கள். தங்களுக்குள் யாராவது ஒறுக்கப்பட்டால், குழந்தைகளைப் போல் பேசாமல் பார்த்துக் கொண்டு நிற்பார்கள்... அது மட்டுமா, கட்டளையிட்டால் தாங்களே அதற்கு உ த வி வே று செய்வார்கள் ... மேலாளர்களோ... சொல்ல வேண்டியதே இல்லை! (குறுகிய கர கரப்பான நகைப் புடன்) நான் ஒரு மேலாளன் என்றால் பார்த்துக் கொள்ளேன்! ஆ! (மிக உணர் வார்வத்துடன்) இந்த உலகிலோ, அல்லது இறையுலகிலோ, உள்ள எந்தப் பேராற்றலானாலும் சரி, தன் உள்ளத்துக்கும், மனச் சான்றுக்கும் எதிராக நிற்குமானால் அதனையும் துணிந்து எதிர்த்து நிற்க முடியுமா ஒருவனால், அத்தகைய மாந்தனை இங்குக் கொண்டுவா. அவன் ஒருவன் தான் நெஞ்சுரம் வாய்ந்த மாந்தன்.

உலூக்கா : பேசுவது எவ்வளவு எளிது! இந்த ஆடவர் களைப் பார்த்தால் ஒரு பொழுதும் அவர்கள் வளர்வதாகவே தோன்றவில்லை. எல்லாரும் பள்ளிப் பிள்ளைகள் போலத்தான் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

செருகியசு : (எள்ளலுடன்) அப்படியா! அருள் கூர்ந்து எனக்கு அதைக் கற்றுக் கொடுப்பாயா? (இருக்கையில் அமர்ந்து உடலைப் பரப்பிக் கொள்கின்றான், பெருமிதத்துடன்)

(தொடரும்)

கொண்டோ அல்லது பழக்கத்தின் அடிப்படையிலோ உண்டாக்கப் பட்டதாகத் தோன்றவில்லை என்றே கூறலாம். பிறவியிலேயே ஒருவனுடைய சாதி முடிவு செய்யப் படுகிறது. இம் முறை ஆரியர்களின் வருகைக்குப் பிறகே புகுத்தப் பட்ட தாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இச் சாதி முறை முதலாவதாக உருக்கு வேத (Rig veda) காலத்திலே தான் முளைவிட்டது. அப்பொழுது முளைவிட்டுத் துளிர்த்த இக் கொடிய முட் புதர் இன்று தமிழகத்தைச் சூழ்ந்து, கவிழ்ந்து, இடர்ப் படுத்துகின்றது.

நமது நாட்டில் உள்ளது போல் சாதி முறை வேறு நாடு களில் இல்லையா என்று கேட்கலாம். அங்கெல்லாம் உள்ள சாதி முறைகள் இவற்றினின்று முற்றிலும் வேறு பட்டவை. 'வரலாற்றுத் தந்தை' என்று புகழப்படும் எரோ டோடசு (Herodotus) எகிப்து நாட்டில் மறையவர் மறவர், ஆயர், பன்றி மேய்ப்பவர், வணிகர், எழுதுவோர், கப்பலோட்டுபவர் என ஏழு பிரிவினர் இழுந்தனரென்று குறித்திருக்கிருர். ஆயினும் இப் பிரிவுகள் தொழிலின் அடிப்படையிலே ஏற்படுத்தப் பட்டவை.

செல்வம், அறிவு, வலிமை, பட்டறிவு ஆகியவற்றைப் பெற்றவர்கள் தங்களை உயர்வாகக் கருதினர். ஆசுதிரேலிய தொல்குமுகாயங்களில் மூத்தோர்களையே தலைவர்களாக ஏற்கின்றனர் என்று அறிகிறோம். இங்ஙனம் மக்களிடையே உயர்வு மனப் பாங்கு பற்பல வழிகளில் ஏற்பட்டது. உயர்ந்த மனப் பாங்கு கொண்டவர்கள் பிறரைத் தாழ்வாகக் கருதத் தலைப்பட்டனர்; இப்படி ஏற்பட்ட பகுப்புகள் நாளடைவில் ஒன்று சேர முடியாதவாறு இறுகிவிட்டன. எளிதில் ஒன்று சேர இயலாத அளவு இறுகிவிட்ட பிரிவுகளே சாதிகள் என்றழைக்கப் படுகின்றன.

தொழிலடிப்படையில் ஏற்படுத்தப்படும் பகுப்பு முறை, ஒருவன் குறிப்பிட்ட ஒரு தொழிலை விரும்பி எற்றுக்கொண்ட பின்னரே அவனை இன்ன பிரிவினன் என்றழைக்கின்றது. ஆனால்சாதி முறையோ ஒருவன் விரும்பாமலேயே குறிப்பிட்ட இனத்தில் பிறந்துவிட்ட ஒரு குற்றத்திற்காகவே அவன்மீது பல பழக்க வழக்கங்களையும் தொழிலையும் திணிக்கிறது! நம் நாட்டிலுள்ள சாதி முறை இந்து சமயத்துடன் இறுக்கமாகப் பிணைக்கப் பட்டுள்ளது. எனவே ஒருவனுடைய சாதி அவனைக் குமுகாய, சமய, பொருளியல் வாழ்க்கையில் கட்டுப் படுத்து கிறது.

வேத காலத்தில் ,ஆரியர்கள், 'தாசர்கள்' என்ற இரு பிரிவுகள் மட்டுமே நடைமுறையில் இருந்தவாகச் சிலர் கூறு கின்றனர். ஆனால் இன்று இந்தியாவில் ஏறத்தாழ 3000

சாதிகள் உள. ஒரு சாதியிலிருந்து மற்றொரு சாதியில் மணம் செய்து கொள்ளுதல் கூடாது என்றும் தாழ்ந்த சாதியில் பிறந்த ஒருவன் சமைத்த உணவை உயர்ந்த சாதியில் பிறந்தவன் உண்ணுதல் கூடாது என்றும் கட்டுப்பாடுகள் பெருகின. தீட்டு, தீண்டாமை, கழுவாய், விலக்கு (taboo) முதலியவை வளர வளர சாதிக் கட்டுப்பாடுகள் வலிமை பெற்றன. தென்னிந்தியாவில் பார்க்கப்படாதவர்கள் என்ற பிரிவினர் கூட இருப்பதாக்ச் சொல்லப் படுகிறது! இவர்களுடைய முகத்தில் விழித்த மாத்திரத்திலேயே இருபிறப்பாளரின் (Twice born) 'புனிதத் தன்மை' கெட்டுவிடுகிறதாம்!

அவெசுதியரின் இலக்கியங்களில் (Avestian lileralure) மறையவர், மறவர், வேளாளர் என்ற பிரிவினர் இருந்தன ரென்று கூறப்பட்டிருப்பதால் சாதிப் பிரிவுகள் ஆரியர்களிடம் எங்கும் காணப்பட்டன. ஈரானில், அதர்வர், (Athervas) இரதெசுதர் (Rathestas), வசுதிரிய சுயந்தர் (Vastrya Fshovyanta), விதியர் (Huiti) என்ற நான்கு பிரிவினர் அமைந்திருத்தல் இந்தியச் சாதி முறைகளுடன் ஒப்பு நோக்க வேண்டிய ஒன்றுரும். ஆரியர்கள் இந்தியர்கள் குடியேறியதும் பழங் குடிகளுடன் திருமணத் தொடர்பு கொள்ளாமலும் நான்கு சாதி முறைகளை உண்டாக்கிப் புகுத்தியும் ஒரு புதிய குமுகாய அமைப்பை ஏற்படுத்தி வாழத் தொடங்கினர். இந்த நான்கு பிரிவுகளுக்கும் உட்படாதவர்களை மிலேச்சர்கள் என்றழைத் தனர். உயர்ந்தவர்கள் என்ற முத்திரையைப் பதித்துக் கொண் டவர்கள் தாழ்ந்த சாதியினரை அண்டிப் பேச வேண்டியிருப் பினும் சில அடிகள் எட்ட இருந்தே பேச வேண்டும் என்ற கட்டுப்பாட்டை உண்டாக்கினர். மலையாளத்தில் உயர்ந் தவர்கள் என்று கருதப்படும் நம்பூதிரிகள் நாயர் சாதியினரை 7 அடி தொலைவில் இருந்தும், தீயர்களை 32 அடி தொலைவி லிருந்தும் செருமரை 64 அடி தொலைவிலிருந்தும் பேசும்படி பணித்தனர்! அக் காலத்தில் இருந்த மூட எண்ணங்களும் (suoerstition) கண்கட்டுகளும் (Magic) இச் சாதிக் கட்டுப் பாடுகள்வளரத் துணை நின்றன.

'தசப் பிராமண சாதகத்தில்' பத்து வகைப் பார்ப்பனர்கள் கூறப் படுகின்றனர். மருத்துவர், தூதுவர், வரிசேமிப்பவர், விறகு வெட்டி, வணிகர், வேளாளர். ஆயர், ஆடுமாடு வெட்டு பவர் (butches), படைத் துறைக் காப்பாளர் (Military quard), வேட்டுவர் எனப் பத்து வகையினர் குறிக்கப்படு கின்றனர்.

ஒரு காலத்தில் சென்னை மாநிலத்தில் பறையர் தொகுப்பைச் சேர்ந்தவர்கள் உயர் சாதியினரை 64 அடித் தொலைவுக்குள் நெருங்குதல் கூடாது என்ற கட்டுப்பாடு

இருந்தது! கம்மாளர், கொத்தர், தச்சர் தோல் வேலை செய்வோர் ஆகியோர் 24 அடிகளும் சாணார் அல்லது கள் இறக்குவோர் 26 அடிகளும் வேளாளர் 28 அடிகளும் உயர் சாதியினரிடமிருந்து எட்டி நிற்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்ததாம்! பார்ப்பனன் ஒருவனிடமிருந்துமற்றெரு பார்ப்பனன் பரிசு பெற்றுல் அதை உயர்ந்த குரலில் தெரிவிக்க வேண்டுமாம்; சத்திரியனிடம் பெற்றுல் மெல்லிய குரலிலும் வைசியனிடம் பெற்றுல் காதோடு காதாகவும் (whisper) தெரிவிக்க வேண்டுமாம்; சூத்திரனிடமிருந்து பெற்றுலோ வாயால் சொல்லாது மனத்துக்குள் சொல்லிக் கொள்ள வேண்டுமாம். ஆரியர்கள் மூட்டிய சாதித் தீ முகமதியர் களையும் கூட விட்டதாகத் தெரியவில்லை. சயத், முகல். சேக்கு, பதான் என்ற பிரிவுகள் அவர்களிடையேயும் முளைக்கத் தொடங்கின. இத்தகைய கொடிய சாதிக் கட்டுப்பாடுகளை உடைக்கும் கருவியாகப் பயன் படுத்த படுவது 'பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார்' என்ற இக் கால புதிய எண்ணமும் அதனடியில் உண்டான உணர்வுமே ஆகும்.

முதலில் ஒரே இனமாக இருந்து பின்னர் வகுப்புகளை உண்டாக்கி, அதன் பின்னர் சாதிகளை ஏற்படுத்தி. அச் சாதி களிலே நூற்றுக் கணக்கான உட் பிரிவுகளை மெல்ல மெல்லப் புகுத்தினர். இச் சாதி முறைகள் மாந்த இனத்திற்கே பெருங் கேடுகள் விளைவிக்கின்றன என்பதை இக் கால அறிஞர்கள் அறிவுறுத்தி வருகின்றனர். நம் மக்களிடையே இத்துணைப் பெருங் கேடுகள் வளரக் காரணம் கண்மூடி வழக்கமே ஆகும்.

இக் கொடிய சாதி நோயை ஒழிக்க இன்று பலரும் முன் வருகின்றனர். முன்னரே காந்தியடிகள், நேரு போன்ளுேர் தீண்டாமையை ஒழிக்கப் பெரும் பாடு பட்டனர். இன்று சாதி முறையையும் அதைப் புகுத்திய பார்ப்பனரையும் ஈவிரக்க மின்றி 'காரமான' சொற்களில் ஊசி மருந்தேற்றி நமது குமுகாயத்தைச் செம்மைப் படுத்த பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் முயன்று வருவது போற்றற்குரியது. அவருடைய வழியில் நின்று வேறு சிலரும் கலப்பு மணங்கள் செய்து கொண்டு சாதியை ஒழிக்கப் பாடுபட்டு வருகின்றனர். மக்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்பதை உணரும் காலம் தொலைவில் இல்லை. அந்த உணர்வு இன்று நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ●

தென்மொழி அச்சக அமைப்புக்கு
உடனே உதவுங்கள்!

ஒருதுளிக் கண்ணீர் !

துரை. மாணிக்கம்.

இன்று வந்த இருபது மடல்களுள்
ஒன்றே என்றன் உளத்தைக் கவர்ந்தது.
மடலை விடுத்தவர் என்னை மதிப்பவர்!
உடலும் உயிருமாய் நானும் தமிழும்
இருப்பதை உணர்ந்தவர் ; என்னை அடிக்கடி
விருப்புடன் வந்து பார்ப்பவர் ; விளங்கிலாக்
கருத்துகள் பற்பல ஆய்பவர் ! கனிவினுல்
என்றன் நலம்பல எண்ணிச் செய்பவர் ;
ஒன்றே தேர்ந்ததும், தேர்ந்த ஒன்றினைத்
துணிவும் தூய்மையும் துணையும் கொண்டு
பழந்தமிழ்த் தாயும் தமிழரும் நாடும்
இழந்த பெரும் புகழ் எய்திட உழைப்பதும்
என்றன் வாழ்வென மடலை எழுதிய
அன்பர் அறிவார் ; அவ்ரும் பாக்களால்
அன்னைத் தமிழ்க்கே அலங்கல் சார்த்தித்
தன்னைத் தமிழ்க்கே தந்து வாழ்பவர்.
போலிச் செய்கையால் தமிழ்விலை போக்கும்
கூலித் தமிழரின் குறைமதிக் கழல்பவர் ;
வேலி யிலாத்தமிழ் விளைபயிர் மேயும்
காலித் தமிழரின் கறையுளம் கடிபவர் ;
உரைவளம் இன்றியும் இசையுயர் வின்றியும்
புரையுளம் மிகுத்துப் பண்பைப் புதைக்கும்
திரைப்படக் கதையையும் பாட்டையும் தீய்க்க
விரைவில் ஒருவழி வேண்டும் என்பவர்.
ஆளுங் கட்சியின் அறமிலாப் போக்கினுல்
மாளும் மக்களைக் கண்டுளம் நொந்தவர் ;
துவளும் மக்களின் துயர்மேற் கட்டிய
பவள மாளிகை எனும்பல கட்சிகள்
மேடையில் முழக்கிடும் ஆயிரம் பொய்யையும்
கூடையில் மூடும் கொள்கைச் சருகையும்
தேர்தல் நாடகக் காட்சித் திரிபையும்
கூர்ந்த நோக்கொடு எண்ணிக் குமைபவர் ;
அப்படிப் பட்டவர் அனுப்பிய மடலில்தான்
இப்படி ஒருகருத் தெழுதி யிருந்தது !

" தமிழகம் தனியாய்ப் பிரிதலே தக்கதென்
றெழுதினீர் ஐயா, இதுதான் முடியுமோ ?
இந்திய நாடென இயம்பலும் தகாதென
'பாரதம்' என்றே பறைசாற் றுகிறுர் ;

இந்தியே ஆள்தற் கேற்ற தென்று
செந்தமிழ் வழக்கைச் சீரழுக் கின்றார் ;
தமிழர் யாவரும் தன்மதிப் பின்றித்
தமிழையும் மறந்து பண்பையும் தள்ளி
உருவால் ஆங்கிலர் போலும், உளத்தினால்
திருவிலா வடவர் போலும் திரிகிறார் !
தமிழ்மொழி அறிவியல் கல்வியைத் தருமோ ?
தமிழ்மொழி பெரும்பொருள் ஈட்டித் தருமோ ?
தனித்தமிழ் தனித்தமிழ் எனமொழிந் தே,வாய்
இனித்திடல் அல்லால் வாழ்க்கை இனிக்குமோ ?
ஐந்தி லக்கம் உறுப்பினர் கொண்ட
தி. மு. கழகமும் திரவிடக் கொள்கையை
நீக்கிய தென்றால் நீங்கள் நோற்கும்
நோக்கம் இலாத தனித்தமிழ் நோன்பால்
தமிழகம் பிரிதல் இயல்வதோ சாற்றுமின் ?
ஆமைவிலா கொள்கைக்கு ஐய,நும் வாழ்வையும்
உள்ளம் கவன்ற தமிழர் ஒருசிலர்
கள்ளமில் லாத கடிய உழைப்பையும்
விழற்குப் பாய்ச்சிய வெள்ளம் போலும்
அழற்குப் போர்த்திய ஆடை போலும்
நிழற்குப் புனைந்த அணிகள் போலும்
சுழற்கு நிறுத்திய சுருட்பாய் போலும்
வறிதே மாய்த்திட வேண்டிலேன் ; ஐய !
குறிதேர் வாழ்க்கை கொண்டுயிர் உய்க ''

— என்றும் மடலில் எழுதி இருந்தது.
நண்பர் என்னை நன்றாய் அறிந்தவர்.
ஆதலால் மடலின் ஆழத் திருந்த
தீதிலா அன்பையும், என்றன் வாழ்க்கையில்
அன்னவர் கொண்ட அக்கறை உளத்தையும்
உன்னி மகிழ்ந்தேன் ; என்னினும் உண்மையாய்ப்
பெரிதும் வருந்தினேன் என்பதே தக்கது.
வருந்திய தேனெனின் நண்பரென் வாழ்வையும்
திருந்திய கொள்கைத் தெளிவையும், போக்கையும்,
உயிராய்க் கருதிய தமிழ்வாழ் உழைப்பையும்
அயரா முயல்வையும், அறிந்தவ ரென்றே
இதுநாள் வரைக்கும் எண்ணி இருந்தேன்.
அதுபொய் யென்றே அறிந்ததும் வருந்தினேன்.
இவர்போல் ஒருசிலர் எண்ணுவர் ஆகையால்
அவருந் தெளிய இதனை அறைகுவேன் :
இந்திய ஆட்சியை வெள்ளையர் ஏற்று
முந்தைய நிலையை முழுவதும் மாற்றினும்
உள்ளத்து மூண்ட உரிமை முழக்கம்
வெள்ளம் போலப் பெருகித் தீயெனக்

கொழுந்து விட்டுக் கொதித்த பின்றான்
எழுந்தது உரிமைசேர் இந்திய ஆட்சி
வெள்ளையன் தந்த உரிமையால் வடவர்
கொள்ளையர் போலும் நாட்டைக் குலைத்தனர்.
ஒற்றுமை பேசி உரிமையை மாய்க்கவும்
வெற்று நிகரமை கொள்கை என்றே
பொருளைக் குவித்து வல்லமைப் புரட்டால்
அருளைக் குலைத்து அறத்தைக் கொல்லவும்
முந்தி விட்டனர் ; மொழிக்கொள் கையென
இந்தி தன்னை அரியணை ஏற்றினர்
ஆங்கிலந் தன்றால் வெள்ளையன் ஆண்ட
ஓங்குயர் திறம்போல் இன்றி, உயர்விலா
இந்தி மொழியினை இந்திய நாட்டின்
சொந்த மொழியெனச் சாப்பறை கொட்டினர்.
செல்வர் அடித்த கொள்ளைச் செல்வம்
வெல்வகை யுதவ வியப்புற்றுத் தேர்தல்
நாடகம் நடித்துத் தீயரால் அமைத்த
பீடறு ஆட்சியில் பிழைகளே மலிந்தன !

கற்றவர் ஆய்வுரை காற்றில்பறந்தது !
முற்றக் கற்ற முழுமாந் தர்போல்
அமைச்சரின் உளறல் சட்டம் ஆனது !
நமைச்சல் கொண்டவன் நள்ளிராப் பகலெனச்
சொறிதல் போலும் உரைகள் சொரிந்தன.
நெறிமுறை பிறழ்ந்தது ; நேர்மை மாய்ந்தது !
ஆட்சித் திறத்தால் மக்களைத் திருத்தும்
மாட்சி யின்றிப் பண்பை மாய்த்தனர்.
வாணிகர் கள்ள வாணிகம் பேணினர் ;
தூணிகர் வாழ்க்கை துரும்பாய் இளைத்தது.
சமயப் புரட்டு'கள், 'சாதி'ச் செருக்குகள்,
சுமை சுமை யாய் நம் தோள்களை அழுத்தின !
கல்விச் சுனையை எருமைகள் கலக்கின !
செல்வ முதலைகள் வறியரை விழுங்கின !
மருந்துவ மனைகளைக் கருத்தடை ஆண்டது !
திருத்தமில் உரைகள் தெருத்தொறும் ஒலித்தன !
கலையென் பெயரால் கயமைவளர்ந்தது !
விலைமகள் என்னும் பெயரை விலக்கிக்
கலைமகள் எனும்பெயர் தணிகையர் பூண்டனர் !
நாடகக்கொட்டகை பீடகம் குறைத்தே
ஏடகப் பள்ளிகள் தம்மை வென்றன !
'கோவலர்' போலும் கோல்கைக் கொண்ட
காவலர் என்பரால் காவல் அழிந்தது !
அறநூல் எல்லாம் அறைநூல் ஆயின !
மறநூல் ஒன்றே மதிக்கப் பெற்றது !

புத்திலக் கில்லா மக்கள் புரைந்ததால்
பத்திலக் கங்கள் ஆட்சியைப் பற்றின.
செய்தித் தாள்களோ பொய்த்துத் தள்ளின.
உய்தி யின்றி மக்கள் உலைந்தனர்.
அகப்புலம் இருண்டும் ஆவி கழன்றும்
புகப்பலம் அறியா புல்லுடல் மாக்கள்
அறமல் வழிகளில் பொருளை ஆக்கித்
திறமில் வாழ்க்கைத் தெளிவற் றிழிந்தார் !

இன்ன நிலையில் வளர்ந்தன எவையெனின்
மின்னாற் றலினால் மிளிர்ந்திடும் பொறிகள் !
கட்டிட மலைகள் ! கயமைச் செயல்கள் !
பட்டினும் மயிரினும் பகட்டினும் ஆடைகள் !
கொலைசெய் கருவிகள் ! கொடுமை உளங்கள் !
கலைவிழா கூடம் ! கயமை மாந்தர்கள் !
வண்டிகள் ; ஊர்திகள் ; வளமிலா உடல்கள் !
பெண்டிர் மீசைகள் ! பிள்ளைப் பேறுகள் !
மேனி மினுக்குகள் ! கூனல் முதுகுகள் !
தீனிப் பண்டங்கள் ! தெருத்தொறும் குப்பைகள் !
உடல்தெரி உடைகள் ! ஊத்தைச் சதைகள் !
குடல்வலி மருந்துகள் ! கொண்டைப் புனைவுகள் !
களிகொள் காமக் கதைப்பொத் தகங்கள் !
குளியல் பூச்சுகள் ! நீச்சற் குளங்கள் !
பிறந்த மேனியாய்ப் பெண்டிரை ஆட்டும்
திறந்த அரங்குகள் ! திக்குவாய் இசைகள் !
ஆண்பெண் உறவை அம்பல மாக்கும்
மாண்பிலாக் கதையின் மலிவிலை நூற்கள் !
வாய்வலி கண்டோன் வறுமொழிப் பாட்டைப்
பேய்இடு கூச்சலாய்ப் பிதற்றிடும் பண்கள் !

இத்தகு நாட்டின் இசைவிலா ஆட்சியால்
எத்தகு விளைவுகள் எதிர்ந்திடு மென்று
நல்லோர் ஒருசிலர் எண்ணி வருந்தி
அல்லும் பகலும் ஆராத் துயரினில்
மூழ்கிக் கிடப்பதை யாவரும் அறிவர் !
மாழ்கிக் கிடக்கும் மயக்கம் உற்றவர்
அறிகிலார் எனினும் அருள்உள் ளத்தால்
அறிஞர் யாவரும் அறிகுவர் அன்றோ !
இழிநடை போடும் இத்தகு நாட்டின்
பழிமிகு வாழ்க்கைப் பாதையை மாற்றி
உயர்வுறு நெறியை உள்ளுவர் உள்ளம்
மயர்வறு காட்சி காண்ட தாகலின்
அத்தகு நினைவிற் காற்றல் மிகுதி!
எத்தகு விளைவையும் இவர்மனம்விளைக்கும் !

வேரிலா வாழ்க்கை ; வினையிலா ஆட்சி !
நேரிலாக் கொள்கை ; நிலையிலாப் போக்கு !
உரிமைகொல் சட்டம் ; உலைவிலாத் துன்பம் !
நரிகளின் சூழ்வால் நாய்களும் ஆளும்
கோணல் அரசியல் வாழ்க்கையே விரைவில்
மாணப் புரட்சியை விளைக்க வல்லது !
உரிமை இறந்த வாழ்க்கையை ஒருசிலர்
பெரிதென் றுவப்பினும் சான்றவர் பேணர் !

தமிழ்மொழி தனித்தது ; இனித்தது ; தாழ்விலாத்
தமிழ்ப்பண் பாடும் தனித்தது ; சிறந்தது !
தமிழ்மொழி சிறப்பின் தமிழ்த்திறம் சிறக்கும் !
தமிழ்த்திறம் சிறப்பின் தமிழகம் பிரியும் !

உறுதி இவ்வுரை ! உறுதியிக் கொள்கை !
உறுதி யன்றெனின் உண்மை யன்றெனின்
இனிவருந் தமிழகம் என்முகத் துமிழ்க !
இனிவருந் தமிழர் என்பெயர் மறக்க !

இன்றிலை ; நாளையும் இல்லையென் றேகினும்
என்றா கிலும்எந் தமிழகம் தனியே
பிரிந்திடல் உண்மை ! பிரிந்திடல் உண்மை !
உரிமை பெற்றே உயர்வதும் உண்மை !
அற்றைநாள் நினைந்தே நடையிடு கின்றேன் !
இற்றைநாள் நாமிடும் வித்தே இனிவரும்
வளஞ்சேர் தமிழகம் வளரச் செய்வது !
மணஞ்சேர் தமிழகம் மலரச் செய்வது !
உள்ளத் தனல்பெற இதனை உரைப்பேன் !
கொள்ளத் தகுவார் இவ்வுரை கொள்க !
எள்ளி யுரைப்பார் எள்ளுக ! எங்கோள்
பொறியாய் எரியாய்க் கனலாய் அனலாய்
குறிபெறச் சிதறுக ! புயலுருக் கொள்க !
பொய்மையும் கயமையும் பொடிப்பொடி யாகுக !
மெய்ம்மையே யாண்டும் மேலுறப் பொலிக !
அற்றைத் தமிழக அன்புறு மக்கள்
இற்றைத் தமிழரை நினைந்தே இரங்கிக்
கடைவிழி ஒருதுளிக் கண்ணீர் வடிக்க !
விடையிதே அன்பர் வீடுத்தும் மடற்கே !

உறுப்பினர்களுக்கு : நீங்கள் எக்காரணம்பற்றி அலுவலகத்திற்கு மடல் எழுதுவதானாலும், உங்கள் உறுப்பினர் எண்களைக் கட்டாயம் தெரிவிக்கவும்.

—அமைச்சர்.

‘தென்மொழி’யைக் காக்க !

தென்மொழிக் (கு) என்றேஓர் தேர்ந்தெடுத்த நன்முறைசேர்
வன்மையான அச்சகந்தான் வாங்கிடுவோம் - இன்மையெனின்
தென்னகத்தில் ஊறிவரும் தூயதமிழ் நன்குயர
இன்னலொடும் ஆற்றிவரும் ஈடில் பெரும்பணிசெய்
தென்மொழிதான் நின்றுவிடும் என்றறிந்தேன் - நின்றவன்யான்
வீழ்ந்தேன் ! அறிவிப்பு வீழ்த்தியது ! தென்மொழியால்
வாழ்ந்தே வளர்ந்திடுவோம்; வாழவைக்கத் - தாழ்ந்த
நிலையுடைய நம்பால் நிறைந்த பொருள் இல்லை !
விலையிலுயர் பொன் பொருளும் வீடும் - தலை நிலமும்
ஈவோராய் வாழ்வதனால் இல்லாமற் போயிற்றே ;
என்றெண்ணிச் சோர்ந்தேன் ; என்துணைவி – முன்வந்தே
ஏனத்தான் சோர்வு ? எழுந்திருங்கள் ! தென்மொழியைத்
தானத்தான் நம்விழியாய்த் தாங்குவோம் - நானத்தான்
கைவளையைக், காப்பைக் கழட்டுகிறேன் போதாதா ?
பைநிறைய வேண்டுவதோ ? பாருங்கள் ! – கைகால்
அணிகளை வைத்தே அனுப்புங்கள்; பின்னால்
துணிவாய்த் திருப்பலாம் என்றாள் ! - அணியிஃதே
தென்மொழியைக் காக்கத் தெருத்தெருவாய் யானும்போய்ப்
பொன்பொருளைக் கேட்க புறப்பட்டேன் ! என்னால்
முடிந்தவரை செய்வேன் ! முதலில் உனது
தொடி, காப்பை ஈயத் தொடங்குவாய் - அடிமானே
தூய திருப்பணிக்குத் தொல்லைபல பட்டாலும்
ஏய உதவிகளை என்றென்றும் - ஓயாமல்
செய்யும் மரபன்றோ செந்தமிழர் நம்மரபு ?
உய்யும் பிறபுகழும் உண்டென்றேன் - மெய்யலவோ !
தென்மொழிசேர் அச்சகத்தைத் தேடுபொருள் ஆங்கனுப்பி
இன்மொழியைக் காப்பீர் எழுந்து !

—பசும்பொற்கிழார். அச்சம்பட்டி.

தென்மொழிதான் துணிந்துதமிழ் முழக்கமிடும் தாளிகையொன்
றுலகிற் குள்ளே

‘தென்னவனே’ நாடிழந்தாய், பீடிழந்தாய் திறன்குன்றித்
திருந்தாய் ; நன்றோ ?

என்றமிழா! எழுந்திடடா ! எதிர்த்துவரும் பகைவர்தலை
யறடா ! என்ற

தென்மொழியை நீயிழந்தால் தீந்தமிழும் தமிழினமும்
தீய்ந்தே போகும்

அருந்தமிழா தமிழினமும் அணிதமிழும் தமிழகமும் அழியா வாறு
பெருமையுற வரலாற்றில் பெரும்புகழ்கொள் நன்னிலையில்
இருத்தல் வேண்டின்
தெருத்தெருவாய் நடந்திடடா. தென்மொழிக்குக் கடன்
கொளடா. தெளிடா இஃதை!
மருகிடையே தென்மொழியின் மணம்வீசின் போதும் தமிழ்
மாண்பு வாழும்!

செத்தவிழா 'தீபாவளி' வெடிச்செலவிற் சிறுதொகையைச்
செந்த மிழ்க்காய்க்
கத்திடுவோர் தென்மொழிக்காய்க் கடன்வாங்கக் கையேந்தி
வருவா ரென்ருல்
சேர்த்திடடா அவர்கையில், காத்திடடா செந்தமிழ்நாட்
டுரிமை வாழ்வைப்
பார்த்திடவே! பகையொழிப்பர் பைந்தமிழர் விடுதலைப்பண்
பாடு வாரே!

தமிழ்நாட்டு ஒற்றன், வத்திராயிருப்பு.

தென்மொழியை வீழ்த்தத் திரளும் நம் ஒல்லாரை
வன்முறையில் நாமெதிர்க்க வேண்டாவோ? - இன்மொழி
கொண்டுலவும் வேறுமொழி ஏது? புலன்பெற
நன்மொழியைக் காத்தல் நலம்.

விழியின்றிப் பார்வையுண்டோ? வாழ்வேது? மண்ணில்
மொழியின்றி ஓரினம் ஏது? - பழிவரு முன்
தொன்மொழியாம் தூய தமிழ்மொழியை வாழ்வீந்து
இன் முறையில் காத்தல் இனிது.

பொது **மு. வில்லவன்; திண்டுக்கல்.**

துடிக்கின்ற இளமையிலே செந்தமிழை யுண்டேன்
படைக்கின்ற பருவத்தில் படைக்களத்தில் நின்றேன்.
அடிக்கின்ற பெரும் புயலில் யீன்ற தாய் தோற்றேன்
அயர்ந்தகிலே விழிக்குமுனம் எந்தையுமே சாய்ந்தான்

வடிக்கின்ற கண்ணீரின் முற்றுகையை மீட்டாள்
வறுமையினைக் கொன்றுதமிழ் அன்னையவள் காத்தாள்!
இடிக்கின்ற போரொலியில் எழுந்துநடை போட்டேன்!
எனைக்காத்த தமிழ்த்தாயைக் காக்க முனைந்தேனே

—காவிரிச் செல்வன்; சந்தைக்கோடியூர்.

கனன்றெழு தமிழா! கால்கொள் துணிவே!
இனந்தலைப் படுத்திய வுணர்வுந் தேயா(து)
ஒச்சிய வாளும் வேலுஞ் சாயா (து)
ஊக்கிய வீறும் உரனுங் கழியா (து)
உயர்த்துக வினியே! உடற்றுக போரே!
அயர்வுனக் கில்லையே! ஆர்த்திடு முரசே!;
அடைத்த செவியின், புடைத்த திமிரின்,
படைத்தலை கொண்டே யடக்கிட என்னு (ம்)

'இந்தி'ய ஆள்நர்க் கிறுதி காட்டுமின் ;
செந்தமிழ் நாடு தனித்தமிழ் நாடாய் ,
பிரித்திடக் கேண்மின் ! உடனே
உரிமை பெறுமின் ! ஓடுக பகையே !

நன்முல்லை விரியூர்.

விழியிழந்து வாழ்வதினும் வெஞ்சமரிற் பட்டு
அழிந்திடுதல் மேலன்றோ ? ஆய்ந்தே – எழுந்திடுக
போர் முரசங் கொட்டிப் புறப்படுக ; தாய்மொழியாஞ்
சீர் தமிழைக் காக்கத் திரண்டு .

– செங்கீர்ச் செழியன் , கரந்தை .

சூட்டெஃகம் கொண்டெம்மைச் சுட்டாலும் வெஞ்சிறையில்
பூட்டி அடைத்தாலும் பொன்றுணையும் – கூட்டோடு
நின்றே எதிர்த்திடுவோம் நெஞ்சில் நிறைந்ததமிழ்த்
தன்மானம் காப்போம் தழைத்து !

பூந்தமிழை மாய்ப்பதுவோ புல்லர்தம் பேய் இந்தி,
ஏந்துவாள் கொண்டே எழுந்திடடா – தீந்தமிழா
இந்தி ஒழியட்டும் இல்லையெனில் நம்முயிரும்
வெந்தீயில் வேகட்டும் வா !

– கே . பூங்காவனம் , சென்னை

குற்றால நீராம் குளிர் தமிழே ! பொன்னி எனும்
வற்றாத காவிரியும் வண்டமிழே ! – கற்றுழைப்
பாசிக்கு வேர்போலும் பாழ் இந்தி உன்னடியின்
தூசுக்கு நேரென்று துப்பு !

– இறை வழுதி , திருச்சி – 10 .

உள்ளத்தில் உறங்குகின்ற எண்ணமெலாஞ் சேர்ந்தே
உயர்ந்தோங்கும் ஒண்கருத்தில் நன்றாகத் தோய்ந்தே
கள்ளமிலாக் கற்பனையை நல்லணியாப் பூண்டு
காலத்தால் மாய்க்கவொண்ணாக் கவினுருவைப் பெற்றுத்
துள்ளிவரும் வெள்ளமென விரைந்துடனே பாய்ந்து
தூங்குகின்ற தம்மினத்தைத் தட்டிமிகத் தூக்கும்
தென்னுமொழிப் பாக்களினை ஆக்கிடுவார் தாமே
சீருள்ள சீர்திருத்தப் பாவலராம் என்போம் .

நாட்டினிலே இருக்கின்ற இயல்பான வாழ்வை
நயத்தோடு காட்டாமல் எதையெதையோ பாடி
நாட்டினுயிர் இலக்கியத்தின் இலக்கணத்தை மாற்றி
நலிபவைக்கும் நேரப்போக் காக்குவதைக் காண
வாட்டமிக அடைகின்றேன் ; வடிக்கின்றேன் கண்ணீர் :
வாழ்வியலின் அடிப்படையை உரிமைகளை இன்னும்
காட்டோரின் நலிவுதனை எத்தர் ஏ மாற்றை
நம்புலவர் பாட்டினிலே காட்டிடவே வேண்டும்!

உள்ளத்தில் தோன்றுவதை ஒளிக்காமல் பாடி
ஒண்புகழோ வன்றிஉயிர்த் தொல்லையேவந் தாலும்
எள்ளளவும் நெஞ்சத்தை மறைக்காது, உண்மை
இயல்நெஞ்சின் எண்ணத்தை எழுச்சியுடன் கூட்டி
வெள்ளமெனப் பாடிடுவீர்! தூற்றி நிற்ப தற்கு
வீணர்கள் கூட்டமுண்டே எங்கணுமே! அஞ்சேல்!
கள்ளமிலா நெஞ்சமெலாம் வாயாகி விட்டால்
கணப்பொழுதில் நாமுயர்வோம்; நாடுயரும் கேளீர்!

தன்னிகரில் தமிழ்ப்புலவர் தனித்தமிழிற் பேசி
தனித்தியங்கும் தாய்த்தமிழைக் கலப்பின்றிப் போற்றிப்
பொன்னியைப்போல் வளங்கொழிக்கும் புதுமுறையாம் போக்கில்
புத்துணர்ச்சி நாட்டினிலே பொங்கிடவே செய்து
பொன்னொளிரும் சீர்திருத்தக் கருத்தெல்லாம் ஓங்க
புரட்சிமிகு முன்னேற்றப் புரவியிலே சென்று
மின்னலென மூடமிகும் கொள்கைகளை விட்டு
விரைவினிலே பொற்காலம் படைத்திடுவோம் இங்கே!

நாக. பாண்டியன். ஒரிசா.

துள்ளுமிரு மீன்விழியாள்; முழுமை நிலா!
தொடுக்காத மலர் மாலை; அழகுக் கிள்ளை!
கள்ளூறும் இதழ்பவளம்; காந்தப் பாவை!
கன்னங்கள் பொற்பாளம்; கன்னற் சாறு!
விள்ளரிய இன்பவளம்! பாட்டுத் தேக்கம்!
விளையாத பனிமுத்தம்! வெல்லப் பாகு!
தள்ளரிய பால்திரட்டு; பருப்புப் பாவை!
தளிர்மேனி; குளிரோடை; வேனில் தென்றல்!

கொல்லுகின்ற விழியாலே என்னைக் கொன்று,
குற்றுயிராப் போட்டுவிட்ட குறும்புக் காரி!
சொல்லுகின்ற மொழியாலே தேனைப் பாய்ச்சும்,
சொல்லழகி; மெல்லிடையாள்; இன்பப் பேழை!
வெல்லுகின்ற நடையாலே அன்னந் தோற்கும்!
விரிகுழலில் முகிலுறையும்; தாழ்ந் திருக்கும்!
செல்லுகின்ற என்னுயிரை உடலில் தேக்கும்
செம்பவழப் படிகமெனை முயங்கல் வேண்டும்;

—கோவி தமிழ்ச்செல்வன். மயிலாடுதுறை.

தாய் தமிழ்க்குத் தம்முயிரைத் தரும்படையைப் பார் பார்!
தாவிவரும் வெம்பகையே களம்நிற்போர் யார் யார்?
வாய்த்துடிப்பாய்ப் பேசுகின்ற வடவர்இனித் தூள் தூள்!
வண்டமிழர் திரண்டெழுந்து கைக்கொண்டார் வேல் வேல்

உணர்(வு) ஆவல் அற்றவர்கள் உதவியினால் ஆளும்
உண்மையினை மறைப்பவர்தம் ஆட்சிஇற்று வீழும்!
உணவுக்கு மானமதை விற்றவர்கள் எண்ணம்.
ஓடிவரும் வேற்கிமையார் முன்னழிதல் திண்ணம்!

திருக்குறளும் பாவியமும் செந்தமிழர் கண்கள் ;
தீண்டவரும் இந்திஇனிப் பெற்றிடும் தீப் புண்கள் !
அருந்தமிழர் சொத்தெல்லாம் அன்னை தமிழ் ஒன்றே ;
அரக்கிமகள் விரைந்தோட ஆர்த்தெழுந்தோம் இன்றே !

வெற்றிவெற்றி எனவார்க்கும் மறவர்படை கண்டு
விழிதெறிக்க ஓடிவிட்டால் உயிர் பகைவர்க் குண்டு!
கற்படிவம் எழுந்ததடா! கடலலையாய் இன்று
கனிதமிழ்க்குப் புறப்பரணி யாத்திடுவோம் நன்றே.

– குராயூர் எழிலன்.

விரிகடல் ஆழம் வியந்தவர், நம்மின்
வியன்றமிழ் அறிந்தபின் வியப்பது மில்லை !
வெ:றிபடு தென்றலை விழைந்தவர், நம்மின்
வியன் தமிழ் அறிந்தபின் விழைவதுமில்லை !

கதிரவன் அகவை கண்டவ ரேனும்
கனித்தமிழ் அகவை கண்டவ ரில்லை !
முதிர்கனி இதழார் முத்தம் சுவைத்தவர்
முத்தமிழ் அறிந்தபின் சுவைப்பது மில்லை !

செந்தமிழ் பயின்றோன் திருவுளச் சுடரொளி
திங்களின் ஒளியே திகைப்பதே ஆகும் !
செந்தமிழ்ப் பயின்றோன் சினமுறல் என்பது
திகழ்கதிர் வெம்மையைத் தீய்ப்பதே ஆகும் !

பொன்னுக் கிங்கே பொற்புள தென்று
புகலுவோர் எல்லாம் பொய்யர்கள் என்பேன் !
கன்னல் தமிழுக் கெரிந்தவர் சாம்பர்
காணடா பொன்னினும் கவின்மிக உடைத்தே !

கடலின் அலைகள் ஓய்வுறல் இல்லை !
கன்னற் தமிழ்ச்சுவை சாய்வுறல் இல்லை
உடலும் உயிரும் ஒண்டமிழ்க் கீந்தோர்
உலகிடை மாண்டே அழிவதும் இலையே !

வில்லவன் கோதை, திருக்கழுக்குன்றம்.

தாயோ டிருந்து தணியாத இன்பம் தலைப்பெய்துவான்
நாயோ டிருந்து நலங்கண்ட துண்டா ? நறுந்தமிழன்
தீயோ டெதிர்த்துத் திறங்கண்ட துண்டு ; திருடருக்குப்
பாயோ டுருண்டு பதரான துண்டோ ? படித்தவனே,

ஆறு கமழும் அரிய வளத்தால் அனைவருக்கும்
சோறு கொடுத்துச் சுடுபசி நீக்கிச் சுவைத்திருந்தான் !
கூறு பட.மனம் மாறு படப்புகழ்க் கூடுடைந்து
வீறு கெடத்தனிச் சீருங் கெடயின்று வீழ்ந்ததுவே !

வார்ந்த நெடுங்கடல் வற்றுவதுண்டோ? வலிய நெஞ்சில்
சார்ந்த தமிழ்மறம் சற்றேனும் குன்றிச் சரிந்ததுண்டோ ?
ஆர்ந்த தமிழ்க்கலை அத்தனை யுங்கற்ற ஆண்மையினால்
நேர்ந்த தமிழ்ப்பகை நீக்கிட முந்துவாய் நீ உடனே.

தோட்டித் துடைப்பந்தான் தேனைக் குழைக்கத் துணை?
செயுமோ
நாட்டின் அமைச்சரை நாம்நயந் தால்புகழ் நண்ணிடுமோ
வேட்டெஃகம் என்ன விலாவினைப் பியக்குமோ? வெங்
களத்தில்
ஈட்டி முனைக்கும் இமைகொட்டா தென்றும் இருப்பவனே !

காலம் வகுக்கும் கணக்கை அறியாமல் காவலர்கள்
நாலும் துறந்து நடக்கின்றார் நாளை நடப்பதென்ன?
ஏலங்குழலியர் இன்மொழி யாந்தமிழ் இன்பமுறக்
கோலம் அழியட்டும் குன்றென நின்புகழ் கூடிடுமே !

கொழுத்துத் திரியுங் கொடுங்கோல் கிறுக்கரைக்
கொன்றுடலை
இழுத்துத் தெருவில் இடும்பணி இன்றே எழுந்ததடா ;
எழு ! பண் ணிசைத்தே இளைத்தவர் நாமென்றே
எண்ணிவிட்டார்
விழுப்புண் கணக்கில் வரைவு கடாவும் வெலும்புலியே !

மருளும் மனத்தை மடக்கி எழு ! தமிழ் மண் ணுலகில்
இருளும் மறத்துக் கிடமில்லை என்றும்; எதிரிகளின்
உருளும் தலையினமே லுன்கா லிருக்கட்டு முண்மையப்பா
அருளும் முடிவினை அஞ்சா தமைக்கும் அடல்களமே !

காரை. கோ. பாரதி.

பல்லூழி பண்பட்ட பைந்தமிழை யிந்நாட்டுக்
கல்லூரிப் பாடமொழி யாக்கியிவண் கற்றிட்டால்
தொல்லையிலை ! மாணவரும் மானவராய்த் தோன்றிடுவர் !
வல்லவராய் வையகத்தே வாழ்ந்திடுவர் ! என்றிட்டால்,
தேன்சொரியும் ஆம்பல் சிறந்தொளிரும் பொய்கையலரில்
தான்வாழ்ந்துந் தண்டா மரைத்தேறல் உண்டறியா
வீண்பிறவி மீனன்ன வீணர் பிறற்றுகிறார் !
மாண்பு மிகுமொழியாம் மாத்தமிழில், "இல்லைகலைச்
சொற்க"ளென, இந்தப் பதவிச் சொறிநோயர்
நற்கட் பருகினதால் நாக்குழறு கின்றனரோ ?
பற்கள் இழந்ததினால் பாட்டை தவறியிவர்
சொற்கள்கேட் கின்றனவோ ? சொல்.

தி காசியப்பன் கோம்பை

அழிகின்ற முதலை இனம்!

Gardon Gaskill தமிழில் செ. பன்னீர்ச்செல்வம்

உலகிலேயே மிகமிக அஞ்சத்தக்கதும், வெறுக்கத்தக்கதுமான மிகப் பெரிய ஊர்தல் இன விலங்கு முதலையே. அரிமா, புலி, சிறுத்தை பாம்பு ஆகியவை கொல்கின்ற மாந்த உயிர்களின் எண்ணிக்கையை விட முதலைகள் கொல்கின்ற எண்ணிக்கையே மிகையானது என வல்லுநர்கள் நம்புகின்றனர். ஆப்பிரிக்க நாட்டில் ஆண்டொன்றுக்குப் பெரும்பாலும் பெண்களும குழந்தைகளுமாக ஓராயிரம் பெயர்கள் முதலைக்கு இரையாகின்றனர் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. தென் ஆப்பிரிக்கா, மைய ஆப்பிரிக்கா, ஆசிய மித வெப்பப் பகுதிகள், வெப்பமுடைய பசிபிக் திட்டுகள், வட ஆத்திரேலியா ஆகியவையும் முதலை வாழ் நிலங்களாகும். அமெரிக்காவின் மித வெப்பமுடைய பகுதிகளில் இதன் இனத்தைச் சார்ந்த பெருமுதலைகள் (Alligators) வாழ்வதால், அங்கு இதன் எண்ணிக்கை மிகையாக உள்ளது.

மிகச்சிறு பல்லி, பச்சோந்திகளைத் தவிர முதலை ஒன்றுதான் உண்மையான மிடற்றொலியை எழுப்ப வல்லது. அது, தொலைவிலிருந்து வரும் இடியொலியைப் போன்றும், பெருமுரசு உருளும் ஒலியைப் போன்றும் பேரொலியை வெளிப்படுத்தக் கூடும். அதன் பற்களின் அமைப்பு மிக்க வியப்பூட்டுவதாகும். அஃது ஒரு பல்லை இழக்க நேரிட்டால் மிக விரைவிலேயே மற்றொரு பல் அவ்விடத்தில் வளர்ந்துவிடும். இந்நிகழ்ச்சி அதன் வாழ்நாள் வரை நிலவும். முதலை ஏறத்தாழ எல்லாவற்றையும் உண்ணும். அதனுடைய செரிமான நீர்க் கூறுகள் (Digestive Juices) நீரக-பாசிகக் காடியுடன் (Hydrochloric acid) சேர்ந்து மிக்க ஆற்றலுடையனவாக இருக்கின்றன. அவை, முதலையால் விழுங்கப்பெற்ற இரும்பு ஈட்டி முனைகளையும், ஆறு விரற்கடை நீளமுள்ள எஃகுத் தூண்டில் முட்களையும், சில மாதங்களில் கரைத்து விடுகின்றன. அவ்வாறிருப்பினும் அதற்கு மிகையாக உணவு தேவைப் படுவதாகத் தெரியவில்லை. சிறைப்பட்ட நிலையில் நாளொன்றுக்கு ஒரு பவுண்டு (Pound) நிறைக்கும் குறைவான இறைச்சியைக் கொண்டே நிறைவாக வாழும்.

முதலையானது மிக்க அஞ்சத்தக்க தாடைகளையும், வாலையும் இருவகைக் கொடிய, போர்க்கருவிகளாகப் பெற்றுள்ளது. பக்கவாட்டில் வாலினுடைய கொடுமையான அதன் தாக்குதல், மிகப் பெரிய ஆண் விலங்குகளின் கால்களை முறித்துவிடும். ஆனால் அதன் முதல்தரமான தாக்குதலானது ஆழமற்ற இருண்ட இடங்களில் மிதந்து சென்று பார்வையில் படாமலிருப்பதும்; பின்பு மிகச்

சிறு ஒலிகூட இல்லாமல் நீருள் செல்வதும்; முடிவில் விரைவாக முன்னேக்கித் திடுமெனப் பாய்ந்து நிலையிடுக்கியைப் போன்ற தாடைகளினுல் இரையைப் பற்றிக் கொள்வதும் தாம்.

இயற்கை இத்தகைய தாக்குதல் முறையை மிக நன்ருக அதற்கு அமைத்திருக்கின்றது. நீர்மூழ்கிக் கப்பலைப் போன்று முதலையும், அதன் முகட்டு மேற்புறக் காட்சிக் கருவியாக (Periscope) மேடான கண்களையும்; உயிர் வளியைப் பெறும் குழாயாக (Snorkel) மூக்குத் தொளைகளையும் பெற்றிருக்கின்றது. முதலைகள் தம்முடைய உடல் முழுமையும் நீருக்குள் அமிழ்ந்திருக்கும்படி சிறிதளவு நீருக்குமேல் தோன்றி மறைவாக நோட்டமிடுகின்றன. நீர்மூழ்கிக் கப்பலைப் போன்றே முதலைகளும் தாம் மூழ்கும் பொழுது நீரினின்று, மூக்குத் தொளைகள், காதுகள், தொண்டை இவற்றைக் காப்பதற்குத் தாஞகவே இயங்கி மூடிக்கொள்ளும் வியக்கத்தக்க சிறு கதவு அமைப்பைக் (Valves) கொண்டுள்ளன. அதனுடைய கண்களில் ஆயிரக் கணக்கான படிகங்கள் (Crystals) புதைக்கப் பெற்றுள்ளன. அவை முதலைக்குத் தேவையான ஒளியைச் சேகரித்து, இரவில்கூட நீருக்கடியில் வியக்கத் தகுந்த பார்வையை அளிக்கின்றன.

வேண்டுமென்றே ஒழுங்காக மாந்த உயிர்களைத் தாக்குகின்ற உலகிலுள்ள மிகச் சில விலங்குகளில் முதலை ஒன்ருகும். முதலைகள் புனிதத் தன்மை வாய்ந்தவை என்று கருதி அவற்றிற்கு இரையளிக்கப்படுகின்ற இடங்களிலும், மீன்கள் நிறைந்துள்ள ஏரிகளில் உள்ளனவும், ஒருபொழுதும் தாக்குவதில்லை. ஆனுல் எங்கெங்கு முதலையினுடைய இயற்கை இரை, மிகவும் குறைந்துள்ளதோ அங்குள்ளவை விரைவிலேயே மாந்த இறைச்சியின் சுவையில் நாட்டம் கொள்கின்றன. ஆழமற்ற பகுதிகளில் நீர் விளையாட்டில் ஈடுபடுகின்ற சிறுவர்களும்; குளிக்கவும் நீர் கொண்டுவரவும், துணிமணிகளைத் துவைக்கவும் வருகின்ற பெண்களும் மிகுதியாக இதற்கு இரையாகின்றனர். பெருவாரியான ஆப்பிரிக்கர்கள் 'ஏவல் வைப்பு மருத்துவர்' (Witch doctor's) மயக்கும் ஆற்றலில் நம்பிக்கை வைத்துத் தங்களை அவர் காப்பார் என்று பொருட்படுத்தாதிருக்கின்றனர்.

ஒரு முதலை, பெரிய விலங்குகளான, ஆன் அல்லது ஆண்மான் இவற்றைப் பற்றியபொழுது, அவை நிலைத்து நிற்கவியலாத நிலையில், தலையினுதவியால் பக்கவாட்டில் தள்ளி சடக்கென்று மிகக் கோரமாக ஆழமான இடத்திற்கு இழுத்துச்சென்று பின்பு ஓய்வாக அவற்றை உண்கின்றது. ஆனுல் அதற்குச் சில சிக்கல்

களும் உள்ளன. அதன் தாடைகள் எவ்வளவுதான் தனிச்சிறப்பு வாய்ந்தவையாயினும், பற்கள் மென்று தின்பதற்கேற்ற வகையில் அமைந்திருக்க வில்லை. பெரும்பாலும் அவை குறடு (பற்றிரும்பு) போல் செயற்படுகின்றன. ஆகையால் அஃது ஒரு வேளையில் எதை யாகிலும், அப்படியே முழுமையாக விழுங்கக் கூடியதை உண்கின் றது; சிறிய நாய்கள் அதற்கு விருப்பமானவற்றுள் இனிய சிற்றுணவு. இரையான ஒன்று மிகப் பெரியதாயிருந்தால் அதை எளிதாகக் கிழித்தெடுப்பதற்கு, மென்மையாக ஆகும்வரை அதை அழுகப் போடுகின்றது. அடிக்கடி தன் இரையை நீருக்கடியில் உள்ள, இருபக்கம் புழைவு உள்ள, முழைஞ்சு (குகை) போன்ற இடத்திற்கு எடுத்துச் செல்கின்றது. அவ்விடம் நிலத்திலிருந்து காற்றுவரும்படி மேற்புறம் ஓட்டையுடையதாயும், நீருக்கடியிலுள்ள தரை ஒரு பக்கம் நீர் மட்டத்திற்குமேல் உயர்ந்து செல்வதாயும் இருக்கும்.

'மாலாவி' குடிமகன் ஒருவன் தன் நண்பர்கள் பார்வையில் படும்படியாக முதலையால் நீருக்கடியில் பற்றியிழுத்துச் செல்லப் பட்டுத் தப்பியது புதுமையானதாக இருந்தது. மிகப் பெரிய நல் வாய்ப்பினால்,முதலையினுடைய முழைஞ்சு சிறிதளவுதொலைவிலேயே இருந்தது. தாக்குதலுக்கிரையானவன் மீண்டும் தன் நினைவு பெற்றபொழுது, தான் மங்கலான, அழுகிப்போன, விலங்குகளின் உறுப்புகள் நிறைந்ததுமான முழைஞ்சினுள் இருப்பதையும்; முதலை தன் அருகில் படுத்திருப்பதையும் கண்டான். விரைவிலேயே அவ் விலங்கு நீருக்குள் திரும்பியதால், அவ்வாப்பிரிக்கன் வாய்ப்பைப் பயன்படுத்தித் தனக்கு மேற்புறம் இருந்த காற்றுத் தொளையைப் பெரிதாக்கித் தப்பினான்.

முதலையின் பல இனங்களும், எங்கும் பரவியுள்ளதும், ஆப்பிரிக்க நைல் ஆற்றிலும்,'மடகாசுகர்' திட்டிலும் உள்ளன. நைல் ஆற்றின் பெண் முதலை ஓர் ஈட்டில் (ஒரு தடவையில்) ஏறத்தாழ 3 விரற்கடை (அங்குலம்) நீளமுள்ள முட்டைகளை இடுகின்றது. கரையோரத்தில் கதிரவன் வெப்பம்படும் கதகதப்பான மணலில் முட்டைகளை இட்டு; மேலும் மணலால் மூடி, மூன்று மாதங்கள் வரை—அவைபொரிக்கும் வரை-காத்துக்கொண்டிருக்கின்றது.புதைக் கப் பெற்ற முட்டைகளை, விலங்குகளைக் கொன்றுதின்னும் பிற விலங்குகள், கீரிப்பிள்ளை, மலைப்பாம்புகள், குரங்குகள், கழுதைப் புலிகள், பெரிய பல்லி இன விலங்குகள் இவற்றிடமிருந்து காக்க வேண்டியதே அதன் தொழிலாக இருக்கின்றது. குஞ்சு பொரிக்கும் நேரத்தில் வியக்கத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகின்றது. முதலைக் குட்டிகளால் தங்கட்கு மேற்புறத்திலுள்ள நிலப்பகுதியைத்

தோண்டிக்கொண்டு வெளிவருதல் இயலாது. ஆகவே தாங்கள் முட்டையோட்டிற்குள்ளிருக்கும்பொழுதே தங்கள் தாயை அழைக்கத் தொடங்குகின்றன. அந்நேரத்தில் தாய் முதலை, குட்டிகளின் கூக்குரலுக்காகக் (Sos) கவனித்துக் காத்திருக்கின்றது. முதல் கீச்சொலி கேட்டவுடனேயே, தாய் முதலை நிலப்பகுதியைத் தோண்டத் தொடங்குகின்றது. அதற்கு இவ்வுள்ளார்ந்த உந்துணர்வு அவ்வளவு மென்மையாக இருக்கின்றது. மணற் கூடுகளை அறிவியலறிஞர்கள் வேலியொன்றமைத்து, மூடி, தேர்வாய்வு Test) நடத்தியபொழுது, கொதித்தெழுந்த தாய் முதலை அதைத் தூள் தூளாகக் கிழித்தெறிந்தது.

புதியதாகப் பிறந்த குட்டி, வலியத் தீங்கிழைக்கும் வாழ்க்கையின் முதல் தொடக்க நேரத்தில் பத்து விரற்கடை நீளமிருக்கும். தன் அருகில் எது இருந்தாலும் அதைத் திடீரென்று கௌவும். பிழையற்ற உள்ளார்ந்த உந்துணர்வுடன் மறைவிடத்தைத் தேடி மிக அண்மையிலுள்ள நீரை நோக்கி முந்திச் செல்கின்றன. ஏனெனில்; கொக்குகள், நாரைகள், முதிர்ந்த முதலைகள் உட்பட மிகையான விலங்குகள் முட்டைகளைவிட, நெளிந்து வளைந்து செல்கின்ற குழவிகளை உண்பதில் சுவைகாண்கின்றன. சில வல்லுநர்கள், இவ்வளவு பேரிடர் வாய்ந்த நிலையில் இடப்பெறுகின்ற முட்டைகளில் ஒரு விழுக்காட்டிற்குமேல் முதிர்ந்த முதலைகளாக ஆவதில்லை என்று மதிப்பிடுகின்றனர்.

பிற பெரும்பான்மை விலங்குகளைப் போலன்றி, முதலைகள் வாழ்நாள் முழுமையும்-ஒரு வேளை 100 ஆண்டு அல்லது அதற்கு மேலும்-தங்கள் வளர்ச்சியை நிறுத்துவதில்லை. ஆனால் வளர்ச்சியளவு அகவைக்கேற்பக் குறைகின்றது. எவ்வாறாயினும், அண்மையில் நடைபெற்ற பெருவேட்டை (Wholesale shooting) ஒரு முதலை 'எத்தனை ஆண்டுகளாயினும் வாழும், எவ்வளவு நீளமாகினும் வளரும்' என்ற கூற்று ஓரளவுதான் பொருந்தும் என்பதைக் காட்டிற்று. ஆசிய, பசிபிக் இனங்கள் கிட்டத்தட்ட 30 அடிவரை வளர்வனவென்றும், ஆனால் கடந்த சில ஆண்டுகளில் 19 அடி நீளத்திற்கு மேற்பட்ட நைல் ஆற்று முதலை ஒன்றுகூட வேட்டையாடப் பெறவில்லையென்றும் கூறப் பெறுகின்றன.

கடந்த உலகப் போருக்குப்பின், முதலைத் தோற் காலணிகள், கைப் பைகள், பணப் பைகள், இவற்றிற்கான பேராற்றல் வாய்ந்த பெண்ணின விருப்பம் (Tremendous feminine desire) மிகவும் பரவலான முதலை வேட்டையைத் தூண்டி விட்டது. விலைகள் நிலையாக ஏறிக்கொண்டே சென்றாலும்; தேவை—குறிப்பாகப் பாரீசிலிருந்து—அதைவிட விரைவாக உயர்ந்தது. இன்று ஒரு முதலை வேட்டைக்காரர், உயர்ந்த வகை வயிற்றுத் தோல் ஒன்றுக்குஉருபா

திரைப்படமும் மொழியுணர்வும் கலைத்துறை!

'செல்வதுரை' பி.எ.சி. (திரைப்படத்துறை)

சத்யசித் ரேயின் வங்காளப் படங்களைக் காண்போர்க்கு, அப்படங்களில் முதலில் வரும் தலைப்புகள் (Titles) வியப்பைக் கொடுக்காமல் இருக்கா. ஏனெனில் தலைப்புகள் முழுக்க முழுக்க வங்காள மொழியில்தான் இருக்கும். தமிழ்ப் படங்களில் ஆரவாரமாக வரும் ஆங்கிலத் தலைப்புகளை வங்கமொழிப் படங்களில் காண்பது அரிதிலும் அரிது. வங்கப் படங்கள், முழுக்க முழுக்க ஆரவாரமில்லாமல், எளிமையாகவும், இயற்கையாகவும் இருக்கையில், அவற்றில் வரும் தலைப்புகள் மட்டும் எவ்வாறு ஆரவாரத்தோடு செயற்கையாக வரும்? தமிழ்ப்படங்களில் கதையிலும் நிகழ்ச்சிகளிலும், பண்பு நலன்களின்றிச் சாரமில்லாமல் ஆரவாரமாக இருப்பதுபோலவே, அவற்றில் வரும் தலைப்புகளும் ஆரவாரமாக ஆங்கிலத்தில் வருகின்றன.

---

300 பெறககூடும். முதலைத் தோலின் வயிற்றுப் பகுதி மட்டும்தான் வணிக மதிப்புடையது. இத்தகைய தோலின் ஒரு பகுதி பதனிடப் பெற்றுச் சிறிய கைப் பையாகச் செய்யப்பெற்றால், சில்லரை வணிகக் கடையில் உருபா 1500-க்கு விலை போகும்.

அப்படிப்பட்ட விலைகள் நூற்றுக்கணக்கானவர்களைக் கவர்ந்து, முதலைகள் எங்குள்ளனவோ அங்கெல்லாம் அவற்றை வேட்டையாடத் தூண்டின. ஓரேழு மாத காலத்தில் ஆத்திரேலியாவில் சில வேட்டைக்காரர்கள் ஒவ்வொருவரும் உருபா 70,000-க்கு மேல் திரட்டினர். முதலைகளின் எண்ணிக்கை அவ்வாறான நெருக்கடியினால் விரைவில் நலிவுற்றது. பன்னிரண்டாண்டுகட்கு முன்னர் முதலைகள் செறிந்த மிகையான ஏரிகளும், ஆற்றுப் படுகைகளும், இப்பொழுது வெறுமையாக இருக்கின்றன.

கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவரும், நைல் ஆற்று முதலை வல்லுநருமான, பண்டாரகர், அஃகாட் (Dr. Hughcott) என்பார் இத்தகைய ஊர்தல் இன விலங்கு தம் மரபழிந்து போகும் என்று அஞ்சுகின்றார். "பத்து கோடி ஆண்டுகட்குமேல் உயிர் வாழ்ந்துவந்த இத்தகைய பல்லிப் பேரின விலங்குகள் (Saurians) வெற்றாரவார நாகரிகப் பாணியின் தேவைக்காக அழிக்கப்பெறுமானால், அறிவியலுக்கும், அதன் வழிமுறை நிலைப்பிற்கும் பேரிழப்பாகும்" என்று அவர் கூறுகின்றார். மிகையான முதலைகள் வேட்டைக்காரர்கள் அணுகவியலாத இடங்கட்குப் பின்வாங்குவதாகப் பரவலான நம்பிக்கை இருக்கின்றது. பல நாடுகள் இப்பொழுது முதலை வேட்டைக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றன.

நம் படங்களில் முதன் முதலாகக் காட்டப்படும் தலைப்பே, ஆங்கிலத்தில்தான் இருக்கும். அதாவது 'இன்ன தயாரிப்பாளர் அளிக்கும்' என்ற தலைப்பு ஒன்றும், 'இன்ன படம்' என்ற அடுத்த தலைப்பும் ஆங்கிலத்தில் வந்தபின்தான் தமிழில் மற்ற தலைப்புகள் தொடரும். இறுதியில் 'டைரக்சன்—இன்னார்' என்ற தமிழ்த் தலைப்பையடுத்து, ஆங்கிலத்திலும் அதே 'டைரக்சன்—இன்னார் என்று வந்தபின்தான் தலைப்புகள் யாவும் முடிவடையும். இவற்றிற்கு என்ன தேவை வந்துவிட்டன என்று புரியவில்லை.

'சத்யசித்ரே'யின் படங்களாவது உலகமுழுவதும் காட்டப் படுகின்றன; அவை திரைப்படக்கலைக் கருவூலமாகத் திகழ்வதால் அவற்றிலும் கூட எந்தவகையான ஆங்கிலத் தலைப்புகளும் வராமல் வங்கமொழித் தலைப்புகள் மட்டிலும் வருகின்றன. ஆனால் தமிழ்தெரிந்த இடங்களில் மட்டும் ஓடும் நம் தமிழ்ப் படங்களுக்கு ஏன் தேவையில்லாத ஆங்கிலத் தலைப்புகள்?

மேலும் ஏன் தலைப்புகளில் புதிய தமிழ்த்திரை நுணுக்கச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது? திரைப்படம் மக்களோடு மிகுதியாகத் தொடர்பு கொள்ளத் துணை புரிவதால், ஒருமுறை மக்களுக்குத் திரை நுணுக்கச் சொற்களை உணர்த்திவிட்டால், அவை மக்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிடும், 'Direction' என்ற சொல்லுக்கு ஏன் 'இயக்குநர்' என்ற சொல்லைப் பயன் படுத்தக் கூடாது? அவ்வாறே 'Editing' என்ற சொல்லுக்கு 'திரைப்படத் தொகுப்பு' என்ற சொல்லையும் 'Re-recording' என்ற சொல்லுக்கு 'மறு ஒலிப்பதிவு' என்றும் 'Art Director' என்பதற்கு 'கலை இயக்குநர்' என்ற சொல்லையும் 'Costumes' என்பதற்கு 'உடைகள்' என்றும், 'Set Materials' என்பதற்கு 'அரங்கப் பொருட்கள்' என்றும் 'Studio' என்பதற்குக் கலைக்கூடம் என்றும், இன்னும் பயன்படுத்தப்பட்டுவரும் ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ் சொற்களும் ஏன் நமது படங்களில் பயன் படுத்தப்படுவதில்லை?

நமது தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் தமிழ்ப் பண்பாட்டில் ஊறியவர்கள் அல்லர். மேலும் அவர்களில் பலர் பிறப்பாலோ, உணர்ச்சியாலோ தமிழர்களே அல்லர். பிறப்பால் தமிழர்களாயிருப்போர் கூட உணர்ச்சியால் தமிழர்களாயிருப்பதிலர். அவர்களில் பலருக்குத் தமிழும் ஒழுங்காகத் தெரியாது. திரைப்படக் கலையும் ஒழுங்காகத் தெரியாது.

தலைப்புகளை விட்டுக் கதை உறுப்பினர்களுக்குச் சூட்டப் பெறும் பெயர்களை நோக்கினுல், 'ஆசா' என்றும் 'சீபா' என்றும் உறுப்பினர்களின் பெயர்களைக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. ஏன் வேற்று மொழிமேல் இத்துணை மயல்? தமிழில் நல்ல பெயர்கள் நம் படக் கதையாசிரியர்களுக்குக் கிடைக்க வில்லையா? அல்லது வேண்டுமென்றேதான் இப்படிப்பட்ட

பெயர்களைச் சூட்டுகின்றார்களோ தெரியவில்லை. கலை வாழ்க்கையை ஒட்டியே அமைதல் வேண்டும் தன்மையால், பெயர்களும் வாழ்க்கையை ஒட்டித்தான் அமைய வேண்டும். அன்றெனில், நல்ல தமிழ்ப் பெயர்களை தம் மக்கட்குச் சூட்டிக்கொள்ள மக்களை ஊக்குவிக்கும் பொருட்டாவது அமையவேண்டும். இவ்விரு நோக்கங்களேயன்றி வேறு எந்நோக்கத்தால் உறுப்பினர்களுக்கு பெயர் சூட்டப்படுகின்றனவோ? குறிப்பாக இப்பொழுது வரும் 'சிரீதரின்' படங்களில் வரும் உறுப்பினர்களின் பெயர்களில் ஏன் 'வடமொழி நெடி' மிகுதியாய் நாறுகின்றது எனத் தெரியவில்லை! அவரின் உடலில் தமிழ்க்குருதி சிறிதேனும் ஓடாமலா போகும்?

அடுத்து உரையாடலுக்கு வருவோம். முதன்முதலில் நமது படங்களில் 'வசனம்' என்ற சொல்லை நீக்கிவிட்டு 'உரையாடல்' என்ற சொல் கையாளப்படல் வேண்டும். ஏனெனில் 'வசனம்' என்பது தமிழ்ச் சொல்லன்று. மேலும் உண்மையான அதன் வடசொல் வடிவம் 'வச்சனம்' என்பதே. மேற்படி உரையாடலை எழுதப்புகும் கதையாசிரியர் ஒருவர் வாழ்க்கையின் எல்லாவகைத் துறைகளிலும் பழக்கமுடையராகவும், எல்லாவகை மக்களின் மனநிலைகளை அறியும் உளநூல் வல்லுநராகவும் இருத்தல் இன்றியமையாதது. அப்பொழுதுதான் உரையாடல் இயற்கையாக இருக்கும். அன்றேல் கதையாசிரியரின் வெறுங்கற்பனையில் பிறந்த செயற்கையானதாகவே உரையாடல் அமைந்திருக்கும். நம் படங்களின் உரையாடல்களில் தேவைக்குமேல் 'ஆங்கில' வாடை அடிக்கின்றது. கல்லூரி இளைஞர்கள், அலுவலர்கள் ஆகியோர் சிறிது ஆங்கிலம் கலந்தே பேசிடினும், நம் படங்களில் வருவனபோல், இத்துணை அளவு பேசுவதில்லை. மேலும் படம் பார்ப்போரில் மிகுதியான மக்கள் பொதுநிலையான மக்களேயாதலின், அவர்களுக்குப் புரியுமாறு 'உரையாடல்' இருந்தால் என்ன? அல்லாமல் தனக்கும் 'ஆங்கிலம் தெரியும்' என்ற வரட்டுச் செருக்கில், உரையாடலில் ஆங்கிலத்தை மிகுதியான அளவில் கலந்து எழுதுவது, கதாசிரியரின் அறியாமையைத்தான் காட்டுமே ஒழிய, அவரின் திறமையைக் காட்டி நிற்காது. மக்கள் பாராட்டப் போவது படத்தின் தரத்தைத்தானே ஒழிய, கதையாசிரியரின் ஆங்கில அறிவை அல்லவே. இவ்வகையிலும் சிரீதரின் படங்களே செயற்கையான முறையில் தேவைக்கு மீறிய அளவில் கலக்கப்பட்ட ஆங்கிலத்தோடு கூடிய உரையாடல் உடையனவாக இருக்கின்றன. சிரீதரின் இம்மொழியுணர்ச்சியற்ற போக்கு கண்டிக்கத்தக்கதாகும். உரையாடல் தமிழாக இருக்க வேண்டுமேயன்றி 'பலபட்டரைத் தமிழாக' இருக்கக் கூடாது, இவ்வகையில் படங்களுக்குத் தாம் எழுதும் உரையாடல்கள் மக்களை நல்ல தமிழில் பேசவும், எழுதவும், தூண்டுவனவாக இருத்தல் வேண்டும்.

கதிர்வீச்சுக் கொள்கைகள்

(Theories of Radiation)

அ. வீரப்பன் (அழகப்பர் பொறியியற் கல்லூரி)

புறவுலகின் இருபெரும் அடிப்படைகளாக அமைந்துள்ளவை பொருளும் கதிர்வீச்சுமாகும். பொருள் என்பது வரையறுத்த நிறையும் இயற்றன்மையும் நிலையமைப்பும் கொண்டது. கதிர் வீச்சு என்பது புதிர்க்கதிர்கள், ஒளி, வானெலி அலைகள் முதலிய வற்றை யொத்து வெளி (Space) வழியே கட்டுப்பாடின்றிப் பரப்பப்படும் ஆற்றலாம். அறிவியல் ஆய்வுகளின் பயனாகப் பொருள்களனைத்தும் சிறுசிறு இம்மிகளின் இணைப்பே எனவும் அவை நிறைந்த ஆற்றலைப் பெற்றுள்ளன எனவும் தெரியக்கிடக் கின்றன. இவ்வாற்றல் பொருளினின்றும் விடுபட்டு வெற்று வெளியில் கதிர்வீச்சாகப் பரவிச் செல்கிறது. இக்கதிர் வீச்சு, மின்காந்தப் பண்புபெற்ற ஃகெர்ட்ச்சியன் அலைகள், அகச் சிவப்புக் கதிர்கள், காணும் அலைகள், புறவூதாக் கதிர்கள், 'காமாக்' கதிர்கள் முதலியவையாகப் பல்வேறு வகைகளில் வெளிப்படு கிறது. ஆனால் இவையனைத்தும் வெற்றுவெளியில் ஒரே தன்மை யுடன் ஒளியின் விரைவு விழுக்காட்டில் செல்கின்றன. கதிர் வீச்சின் உண்மைப் பண்புகளையும் இயல்புகளையுமறிய காணும் ஒளியலைகளைக் கொண்டு ஆய்வுகள் பல நிகழ்த்தப்பட்டன. அவ் வாய்வுகளின் வழி கண்ட உண்மைகள் இக்கட்டுரையில் நிரந் தினிது விளக்கப்படுகின்றன.

"நியூட்டனின் இம்மிக் கொள்கை" (Newton's Corpuscular Theory)

ஒளி என்பது கதிர்வீச்சின் ஒரு வகையே. பதினேழாம் நூற் றுண்டின் இறுதியில் நியூட்டன் ஒளி இம்மிக் கொள்கையினை வெளியிட்டார். இவர் கொள்கைப்படி, ஓர் ஒளி பிறப்பி எண்ணிலா மிகச் சிறிய நுண்பொருட்களை இடையறாது வெளி யிட்டுக்கொண்டே யிருக்கின்றது. இம் மிகச் சிறிய இம்மிகள் வியத்தகு விரைவு விழுக்காட்டில் எல்லா வூடகங்களின் வழியேயும்

முன்பக்கம் தொடர்ச்சி

நம் பட முதலாளிகளும், இயக்குநர்களும் முதன்முதலாக நமது தமிழ்ப்பண்பாட்டினையும், பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் படங்களில் பேசப்படும் உரையாடலின் தூய்மை மட்டுமன்றி, வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலுமான அறிவு, நம் பண்பாட்டை ஆழ்ந்து பயிலுவ தாலேயே பெற முடியும். மொழி மாந்தருக்கு விழி போன்றது. எனவே தனது கலையால், தான், தன் மொழிக்குச் செய்த பெருமை என்ன என்பதை உணர்ந்து மொழியுணர்ச்சியோடு நம் படப்பிடிப் பாளர்களும், இயக்குநர்களும் செயலாற்றல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

செல்கின்றன. இவற்றின் விரைவு அளவு ஒளியின் விரைவு அளவிற்குச் சமமாகும். கதிர் வீச்சின் ஆற்றல் இவ்விம்மிகளின் இயங்கு ஆற்றலுக்கு இணையாம். இம்மிகளின் நிறை மிகமிகக் குறைவு. ஆதலான் ஒளி பிறப்பி நெடுங்காலத்திற்கு இடையறுது ஒளியினை இம்மிகளாகத் தொடர்ந்து வெளியிடினும் அதன் நிறையில் ஏற்படும் எவ்வித வேறுபாடும் அளவிட்டறியக் கூடியதாக இல்லை. இம்மிகளின் பல்வேறு அளவு வடிவுகளே வெவ்வேறு வண்ண ஒளிகட்குப் பொருட்டாம். எதிரொளிர்தல் (Reflection) நிகழ்ச்சி எதிரொளிர் பரப்பு தரும் விலக்கு விசையானும் (Repulsive force). ஒளி விலகல் நிகழ்ச்சி, ஒளி செல்லும் ஊடகத்தின் ஈர்ப்பு விசையானும் (Attractive force) ஏற்படுகின்றன. பிற ஒளியியல் நிகழ்ச்சிகளாய ஒளி வேற்றுமை, ஒளி துருவத் தன்மை முதலியவற்றை நியூட்டனின் இம்மிக் கொள்கை விளக்க வியலவில்லை. மேலும் இக்கொள்கையின்படி கண்ட முடிபுகள் நேரடி ஆய்வுகட்கு மாறுகயிருந்தன. எனவே இக் கொள்கை பின்னர் தோன்றிய அறிவியலறிஞர்களான் விலக்கப்பட்டது.

ஒளியலைக் கொள்கை :

(Huygen's Wave Theory)

புது முயற்சிகளின் பயனுக ஃகைசின் எனுமறிஞரால் ஒளியலைக் கொள்கை முன் மொழியப் பட்டு ஃபிரெனெல் (Fresnal) என்பாரால் வழி மொழியப்பட்டு உறுதி செய்யப்பட்டது. பரந்த வெளியெங்கும் ஈதர் எனும் கற்பனை ஊடகம் ஒன்று பரவி நிறைந்திருப்பதாகக் கருதிக்கொண்டு, ஒளி, அலைகள் வடிவில் பரவிச் செல்கிறது என்றனர் ஊடகத்திலுள்ள நுண்பொருட்டுகள்கள் அசைவுக்குட்பட்டு ஒளியாற்றல் அலைகளாக அனுப்பப்படுகின்றன. பல்வேறு வண்ண ஒளிக்கதிர்கள் அவ்வொளியலைகளின் அலைநீளத்திற்கேற்ப அமைகின்றன. இக்கொள்கை ஒளியியல் நிகழ்ச்சிகளை (ஒளிவேற்றுமை, ஒளி துருவத்தன்மை, ஒளிவிலகல், எதிரொளிர்தல்) நிறைவுடன் விளக்கிப் பெரு வெற்றிபெற்றது. ஒளியியல் ஆய்வுகள் பல ஒளியலைக் கொள்கையினை உறுதி செய்துள்ளன.

மாக்சு வெல்லின் மின்காந்தக் கொள்கை :

(Maxwell's Electro-magnetic Theory)

1864-இல் மாக்சுவெல் எனுமறிஞர் தாம் செய்த மின்காந்தக்கள ஆய்வுகளின் வாயிலாக ஒளிமின் காந்தக் கொள்கையினை வெளியிட்டார். இவர்தம் கொள்கைவழி, ஒளி என்பது ஊடகமொன்றில் விரைவாக மாறிக்கொண்டு இருக்கும் ' இடம்பெயர் மின்னோட்டத்தின் பயனே; இதுவே காந்த விளைவுகளை ஏற்படுத்துகின்றது; கடத்தல் மின்னோட்டங்கள் (Conduction-currents) காந்த விளைவுகளுடன் நெருங்கிய பிணைப்புப் பெற்றவை.

இந்நிகழ்வில் மின்புலமும் காந்தப்புலமும் ஒன்றையொன்று பிரிக்கவியலாவகையில் பிணைந்துள்ளன. ஒரு புலத்தின் செறிவை மாற்ற மற்றொன்றின் செறிவும் மாறும். இவையிரண்டும் ஒளியின் விரைவு அளவில் செல்லுகின்றன. ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ள மின்புலமும் காந்தக் களமும் ஒளியலைகளாகப் பரவிச் செல்லும் பாதைக்கு 90 பாகையில் அமைந்துள்ள செங்குத்துத் தளமொன்றில் அமைந்துள்ளன. ஒளியலைக் கொள்கையில் கூறப்பட்ட ஈதர் ஊடகத்தின் அசைவைப் பிணைந்த மின்காந்தக் களங்களின் அசைவால் அகற்ற, ஃபிரெனெல் என்பாரின் மீட்சித் திண்பொருள் கொள்கை (Elastic Solid Theory) யிலிருந்த இடையூறுகளனைத்தும் அகன்றன. இக்கொள்கையின்படி மின்காந்த ஒளியலைகளை எடுத்துச் செல்லும் வெற்றூடகமாகவே ஈதர் கருதப்படுகிறது. வான்வெளிக் கதிர்கள், காமாக் கதிர்கள், புதிர்க் கதிர்கள், மின்னியல் வானொலி அலைகள், புறஊதாக் கதிர்கள், அகச் சிவப்புக் கதிர்கள், காணும் கதிர்கள் முதலாய கதிர் வீச்சுகளனைத்தும் மின்காந்த அலைகளாகவே பரவுகின்றன என்பதும், முடுக்கிவிடப்பட்ட மின்னி (charge) ஒன்று கதிர் வீச்சாற்றலை மின்காந்தத் துடிப்பாகவோ மின்காந்தத் தொடரலைகளாகவோ வெளியிடவேண்டுமென்பதும், மின்புலமும் காந்தக் களமும் காலத்துடன் தொடர்ந்து மாறிக்கொண்டேயிருக்கின்றன என்பதும் இக்கொள்கை முடிபுகளாம்.

மாக்சு பிளாங்க்கின் நுண்கூற்றுக் கொள்கை.

(Max Planck's Quantum Theory)

மேற்கூறிய கொள்கைகள் வெளியிடப்பட்டபின்னர் கரும்பொருள் கதிர்வீச்சு (Black-body Radiation) மிகக் குறைந்த வெப்பநிலைகளில் மாழைகளின் குறைந்த தன்வெப்ப அளவுகள் (Specific heat values), ஒளிமின் விளைவு (Photo-Electric effect) முதலாய புதிய விளைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந் நிகழ்ச்சிகளை ஒளியலைக் கொள்கையால் விளக்கவியலவில்லை. எனவே **1900**–இல் மாக்சு பிளாங்க் எனுமறிஞர் நுண்கூற்றுக் கொள்கையினை வெளியிட்டு மேற்குறித்த விளைவுகளை விளக்கினர். இவரின் கொள்கைப்படி கரும்பொருள் ஒன்றிலிருந்து வெளிப்படும் கதிர் வீச்சு, தொடர் செயலன்று. இச்செயல் விட்டு விட்டு நிகழ்கிறது-

ஆற்றல் சிறு சிறு கூருக (Quanta) வெளிப்படுகிறது. ஒவ்வொரு நுண்கூறும் hr எனும் அளவு ஆற்றலையுடையது. (h=பிளாங்க்கின் நிலை எண் : r = கதிவீச்சின் அலைவெண்) ஆற்றலை உட்கவர் நிகழ்வும் இடைவிட்டுவிட்டே தொடர்ச்சியின்றி நிகழ்கிறது பின்னர் ஒளித்திரள் (Photon) நுண்கூற்றின் ஆற்றலைக் கணக்கிடப் பயன்படுத்தப்பட்டது.

1905–இல் இக்கால அறிவியலின் தந்தை, அறிஞர் ஐன்சுடீன் அவர்கள் நுண்கூற்றுக் கொள்கையினைப் பயன்படுத்தி ஒளிமின் விளைவைத் தெளிவாக விளக்கினர். தொடர்ந்து 1907–இல் மிகக் குறைந்த வெப்பநிலைகளில் மாழைகளின் தன்வெப்ப அளவுகள் மிக மிகக் குறைவாக இருப்பதையும் விளக்குவதில் வெற்றி கண்டார். 1913–இல் நீல்சு போர் என்பார் நுண்கூற்றுக் கொள்கையினை அணுவில் எதிர் மின்னிகளின் பாதைகட்குப் பயன்படுத்தித் தனிமங்களின் நிறமாலைவரிகளின் தோற்றத்தைத் (origin of spectral lines of elements) தெளிவு படுத்தினர். மேலும் நுண்கூற்றுக் கொள்கை சீமேன் விளைவு (Zeeman Effect) சுடார்க் விளைவு, (Stark Effect), காம்ப்டன் விளைவு (Compton–Effect), இராமன் விளைவு (Raman Effect) முதலாய பல நிகழ்வுகளை விள க்கிப் பெருவெற்றி பெற்றிருக்கிறது.

எனினும் ஒளிவேற்றுமை (Diffraction), ஒளி துருவத்தன்மை (Polarisation) முதலாய ஒளியியல் நிகழ்வுகளை நுண்கூற்றுக் கொள்கையால் விளக்க வியலவில்லை. ஒளியில் சில நிகழ்வுகளை ஒளியலைக்கொள்கையும், பிற நிகழ்வுகளை நுண்கூற்றுக்கொள்கையும் தெளிவாக விளக்குகின்றன. இவ்விரு கொள்கைகளின் அடிப்படைக் கருத்துகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டன போன்று தோன்றினும் உலூயி தி பிராகிள் (Louis de Broglie) என்பாரின் பொருளலைக் கொள்கை (Wave Theory of matter)யின் வாயிலாக இரண்டும் எதிரானவையல்ல ; நெருங்கிய தொடர்புடையவை ; ஒன்றையொன்று தெளிவாக்கத் துணை புரிபவை ; கணக்கியல் முறைப்படி இணையானவை எனத் தெளிவாக்கப்பட்டுள்ளன. இடேவிசன், செர்மர், தாம்சன் (G. P.) முதலாயவரின் ஆய்வுகள் இவ்வுண்மைகளை உறுதி செய்துள்ளன. இக்காலத்தில் ஒளியலைக் கொள்கை பருப்பொருள் நிலைக்கும், நுண்கூற்றுக் கொள்கை நுண்பொருள் நிலைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

வள்ளுவனர் பான்முறை

புலவ, வித்துவ ஒண், கி. சந்திரசேகரன், எம்.ஏ., பி. டி.பி.ஓ.எல்

வள்ளுவரும்,

"சிறப்பீனுஞ் செல்வமு மீனும்; அறத்தினூ உங்(கு)
ஆக்கம் எவனோ வுயிர்க்கு" (4. அறன்வலியுறுத்தல்: 1)

என்றதன்கண் பெரும்பான்மையும் ஈகையான் செல்வமாகிய துறக்கவின்பமும், தவத்தான் சிறப்பாகிய வீட்டின்பமும் எய்த வருதலின், ஈகையுந் தவமுஞ் செய்தற்குரிய இருவகைய வறத்தார்க்கும் இயைபுறுத்தியியம்பினர். "தானந்தவமிரண்டும்" என்று தொழின்மேற்கூறியாங்கு,

"சிறப்பீனுஞ் செல்வமுமீனும்" என்று எய்தும் பேறுகளின் மேல்வைத்துக் கூறியதனன் இவ்வாறு தனித்தனியே கோண்டாம் "செல்வமீனும் சிறப்புமீனும்" என்று கொண்டு அப்பேறுகள் மேன்மேல் கைவந்தெய்தலைக் காட்டினரெனலுமாம். அன்றியும், முற்படக் கூறற்பாற்றதாகிய செல்வத்தினைப் பிற்படவைத்தோதியதனன் நேரே வீடுபேறெய்தலும், அஃது இல்லறத்தார்க்கும் வாய்ப்பக்கிடத்தலும் குறிக்கொள்ள வைத்தாராகல் வேண்டும். "சிறப்பீனும் செல்வம் பெறினும்" (32. இன்னா செய்யாமை:) சிறப்பீனும் என்றதனைச் செல்வத்திற்கு அடையாகக்கோடலுமா வெனின், எண்ணும்மை பயின்ருய் அத்துணைப் பொருட்பேறு பயவாமை புலனும். இனி,

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு"

(88 : அன்புடைமை : 5)

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பபான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

(9 : விருந்தோம்பல் : 9)

"அடக்க மமரரு ளுய்க்கும் அடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்"

(13 : அடக்கமுடைமை : 1)

"நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றுது புத்தே ளுலகு"

(24 ; புகழ் : 4)

என்றவற்முன் இல்லறத்தார்க்குத் துறக்கவின்பம் வாய்த்தலும்,

" துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம் "

(27 : தவம் : 3)

" நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது "

(13 : அடக்கமுடைமை : 4)

" துறந்தாரிற் றூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோக்கிற் பவர் "

(16 : பொறையுடைமை : 9)

எனவருவன அவர்க்கு வீட்டின்பப் பேற்றிற்கு வேண்டும் உறுதிகள் உளவாதலை யுணர்த்துவனவாம்.

துறவுட் புகுந்தார் துறக்கத்துட் சென்றெய்தும் இன்பத்தினை

" கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை; கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு "

(29: கள்ளாமை: 1)

என்றதனுலும், அவர்க்கு வீட்டின்ப முளதாதலை,

" யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும் "

(35: துறவு: 6)

" ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும் "

(37: அவாவறுத்தல். 10)

எனவருவனவற்ருனும் அறிதும். களிப்புக்கவர்ச்சிகளும், பிறப்புப் பிணி மூப்பிறப்புகளும் முதலாயினவின்றி, யுயிர் பேரின்பத்ததாய் நிற்கும் இயற்கையாகிய வீட்டுநிலை. ஐம்புலவின்பங்களை யாரநுகரும் எண்மைத்தாகிய இல்லற நிலையினிற்பார்க்கு நேரே கிடைத்தலருமை யாதலை நோக்கியே,

" அரும்பய னாயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல் "

(20: பயனில சொல்லாமை: 8)

" விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின் "

(17: அழுக்காறாமை: 2)

வள்ளுவனார் பான்முறை

புலவ, வித்துவ ஓண், கி. சந்திரசேகரன், எம்.ஏ., பி. டி.பி.ஓ.எல்

வள்ளுவரும்,

"சிறப்பீனுஞ் செல்வமு மீனும்; அறத்தினூஉங்(கு)
ஆக்கம் எவனோ வுயிர்க்கு" (4. அறன்வலியுறுத்தல்: 1)

என்றதன்கண் பெரும்பான்மையும் ஈகையான் செல்வமாகிய துறக்கவின்பமும், தவத்தான் சிறப்பாகிய வீட்டின்பமும் எய்த வருதலின், ஈகையுந் தவமுஞ் செய்தற்குரிய இருவகைய வறத்தார்க்கும் இயைபுறுத்தியியம்பினார். "தானந்தவமிரண்டும்" என்று தொழின்மேற்கூறியாங்கு,

"சிறப்பீனுஞ் செல்வமுமீனும்" என்று எய்தும் பேறுகளின் மேல்வைத்துக் கூறியதனான் இவ்வாறு தனித்தனியே கோண்டாம் "செல்வமீனும் சிறப்புமீனும்" என்று கொண்டு அப்பேறுகள் மேன்மேல் கைவந்தெய்தலைக் காட்டினாரெனலுமாம். அன்றியும், முற்படக் கூறற்பாற்றதாகிய செல்வத்தினைப் பிற்படவைத்தோதியதனான் நேரே வீடுபேறெய்தலும், அஃது இல்லறத்தார்க்கும் வாய்ப்பக்கிடத்தலும் குறிக்கொள்ள வைத்தாராகல் வேண்டும். "சிறப்பீனும் செல்வம் பெறினும்" (32. இன்னா செய்யாமை:) சிறப்பீனும் என்றதனைச் செல்வத்திற்கு அடையாகக்கோடலுமாவெனின், எண்ணும்மை பயின்றாய் அத்துணைப் பொருட்பேறு பயவாமை புலனும். இனி,

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு"

(88 : அன்புடைமை : 5)

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

(9 ; விருந்தோம்பல் : 9)

"அடக்க மமரரு ளுய்க்கும் அடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்"

(13 : அடக்கமுடைமை : 1)

"நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு",

(24 ; புகழ் : 4)

" ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து "

(13: அடக்கமுடைமை: 6)

எனவரும். வழிவகைகளை, அவ்வீட்டுப் பேற்றினை யெய்துதற்கு வேண்டும் வாயில்களாகக் குறிப்பிட்டாரென்க. இவை அறத்துப் பாலிற் கண்டவை.

பொருட் பாலில்,

" புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை "

(97. மானம்: 6)

என்றமையானும்,

" துணை நல மாக்கந் தரூஉம்; வினை நலம்
வேண்டிய வெல்லாந் தரும் "

(66. வினைத்தூய்மை. 1)

என்றதன்கண், வேண்டிய வெல்லா மென்றது இம்மைக்கண் அறம்பொருளின்ப முதலாயவற்றையும், மறுமைக்கண் தாம் விரும்பிய பதங்களையுங் குறிக்கொள்ள வைத்தமையானும்,

" அகடாரா ரல்ல லுழப்பர் சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார் "

(94, சூது. 6)

என்றதன்கண், இம்மைக்கண் வயிறுாரப்பெருமையும், மறுமைக்கண் நிரயத் துன்ப முழத்தலையும் உணரவைத்தா ராதலானும்,

காமத்துப் பாலில்,

" தாம் வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு "

(111: புணர்ச்சிமகிழ்தல் : 3)

என்றதன்கண். துறந்த தவயோகிக ளெய்தும் செங்கண்மா லுலகத்தை மறுமைக்கணெய்த வருவதோர் பதப்பேறாகக் கூறினமையானும்,

" புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து "

(123, ஊடலுவகை: 3)

என்பதனுள், புத்தேணாட்டின்பங் கூறினமையானும், அறத்தானுண்டாம் ஆக்கங்கள் முப்பாலினும் மொழியப் பட்டுள்ளமை புலனும்.

"சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்"

என்பதனுன், அறத்தான் வருமின்பமே நிலையாய இன்பமாதல் அறிதும். அறத்தாற்றின் பிரிந்து பிறழ்ந்தொழுகின் சிறப்பும் செல்வமும் பெற மாட்டாராய் நிரயத்துள் வீழ்வரென்பது பின் வருவனவற்ருன் வலியுறும்.

"அடங்காமை யாரிரு ளுய்த்து விடும்"

(13, அடக்கமுடைமை- 1)

"இருள்சேர்ந்த வின்னு வுலகம் புகல்"

(25– அருளுடைமை, 3)

"அண்ணுத்தல் செய்யா தளறு"

[26, புலாலுண்ணுமை, 5]

"ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு"

(84, பேதமை, 5)

மேலும்,

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
சாத்துவழிப் படுஉந் தோற்றம் போல"

என்று அறன்ருேர்கள் கூறுப வாதலானும்,

"மாண்ட
அறநெறி முதற்றே யரசின் கொற்றம்"

என்று அரசியலுக்கு வேண்டும் அறம், வேறுளதாகக் காட்டிய தனை வள்ளுவரும், "அறனிழுக்கா மானமுடைய தரசு" என்று வுடன்பட்டு மொழிதலானும்,

"அறமீனு மின்பமு மீள்ந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

(76, பொருள்செயல் வகை,]

என்றதனுன், கடவுட்பூசையும் தானங்களுஞ் செய்தற்கே, பொருள் பயன்பட்டு நிற்பதன்றி, அறம்போலப் பொன்றுங்கால் பொன் ருத்துணையாவான் பற்று மாருகாமையாதலையும், அப்பொருளும் அறத்தாற்றின் வாராவழிப் பயன் படாமையை,

"அன்பொரீஇத் தற்செற் றறம்நோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்"

(101, நன்றியில் செல்வம், 9)

என்றதனு னெடுத்துரைத்தமையானும்,

“ அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புருள வுடல் ”
(76, பொருள்செயல் வகை, 5)

என்புழி, அரசர்கள் குடிகள்மாட்டுச் செய்வது அருளென்றும், குடிகள் அரசர்மாட்டுச் செய்வது அன்பென்றும் உணரக்கிடத் தலின், அன்பும் அருளும் இல்லறந் துறவறங்களையுமே குறித்தல் செல்லாமையானும்,

“ சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையும்
இம்மையு மின்பந் தரும் ”
(10, இனியவை கூறல், 8)

என்றதனன், இம்மை மறுமைகளை யறமொன்றே பயக்கும் வலி யுடைத்தாதலறிய நிற்றலானும்,

“ அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை ”
(64, அமைச்சு, 5)

என்று அமைச்சர்க்குரிய அறத்தினை அங்கவியலிற் கூறினமை யானும்,

“ அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும் ”
(105, நல்குரவு, 7)

என்று ஒழிபியலில் அறத்தோடியைபில்லாத நல்குரவு குற்றப்படு தலையும்,

“ வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின் ”
(120, தனிப்படர் மிகுதி, 4)

என்று காமத்துப்பாலின்கண், நல்வினையின்மையான் கற்புடை யாரால் நன்கு மதிக்கப்படு மனைக்கிழவோள் இன்னுமை யுறுதலை யுங் காட்டினராதலானும், அறன்வலியுறுத்தல் என்னும் அதிகா ரத்துக்க ணோதிய பொருட்டிறம் முப்பாலுக்கும் பொதுவாதல் வலியுறும்,
(தொடரும்)